கல்கி



KALKI 25.6.1967 40 காசு



LPE-Aiyars M. 153/TAM

ஜூன் 23உ முதல்

சென்னை:

காமதேனு • பாரத்
சயானி • லிபர்டி

மற்றும் தென்னாடெங்கும்



பிரசாத் ஆர்ட் பிக்சர்ஸ்

(பிரைவேட்) லிமிடெட், அளிக்கும்

மாடி வீட்டு மாப்பிள்ளை

டைரக்ஷன்:

எஸ்.கே.ஏ.சாரி

தயாரிப்பு:

ஏ.வி.சுப்பாராவ்

G. H. RAO



நினைவுத் திரையில்...

என்னுடைய குழந்தைகள் நெருப்பையோ தண்ணீரையோ நோக்கி வேகமாக ஓடினால் நான் அவர்களைப் பலவந்தமாகப் பிடித்து நிறுத்தக் கொஞ்சம்கூடத் தயங்கமாட்டேன். சிவப்பு நீராகிய மதுவை நோக்கி ஓடுவது, கொதிக்கும் உலையையோ, பெருக்கெடுத்து ஓடும் ஓடையையோ நோக்கி ஓடுவதை விட மிகவும் ஆபத்தானது. நெருப்பும் நீரும் மனிதனுடைய உடம்பை மாத்திரமே அழிக்க முடியும். ஆனால் மதுவோ, மனிதனுடைய உடலை மாத்திரம் அல்ல, ஆத்மாவையே அழித்துவிடும். --மகாத்மா காந்தி

கல்கி, அக்டோபர் 2, 1948








கல்கி

பொருளடக்கம்

பிலவங்க ஆனி 11 - ஜூன் 25

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


அந்நியக் கொள்கை
இந்தியா
Rak



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ※ இதழ் 47

இருதரப்புக்கும் இளக்கம் வேண்டும்

பாலையைச் சோலையாக்கிப் பொருளாதாரத் துறையில் அற்புதம் செய்த இஸ்ரேலியர், எதிரி நாடுகள் பதின்மூன்றினை எதிர்பாராத முறையில் பொருது போர்த் துறையிலும் அற்புதம் செய்திருக்கிறார்கள். போர்நிறுத்தம் ஏற்பட்டு விட்டது. எனினும், இஸ்ரேலியரின் போர்த்திறன் குறித்த வியப்பு நீங்கவில்லை. போரில் போலவே அமைதியிலும் திறம் காட்டி இதயபூர்வமான சமாதானமும், சகவாழ்வும் இனி மேற்காசியாவில் ஏற்பட வேண்டும்.

பத்திரிகையில் போர்ச் செய்திகளைப் பார்ப்பதன்றி, யதார்த்தத்தில் போர் நடைபெறுவது பற்றி விஷய ஞானமில்லாதவர்கள், போர்நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்பும் ஆங்காங்கு சண்டை நீடிப்பது பற்றி அதிருப்தி கொள்கிறார்கள். ஸ்விட்சை மேலே தள்ளியவுடன் விளக்கு அணைவது போல் போரை ஒரு விநாடியில் நிறுத்திவிட இயலாது என்பதை இவர்கள் உணர வேண்டும். ஆத்திரத்துடனும் ஆக்ரோசத்துடனும் நடக்கிற காரியத்தை உடனேயே நிறுத்துவது சாத்தியமல்ல. பரந்த ஒரு பிரதேசத்தின் பல முனைகளில் பல தளபதிகளும் பல்லாயிரம் வீரர்களும் ஈடுபட்டுள்ள ஒரு காரியம் போர் என்பது. இருதரப்புக்களிலும் ஆங்காங்கு ஆத்திரத்தைத் தூண்டிவிடக் கூடிய சம்பவங்கள் நிகழ்வது இயல்பு. சிறுகச் சிறுக இவையும் மறைந்து சமாதானம் ஏற்படும்.

இஸ்ரேல் சேநாதிபதியின் வார்த்தைகளிலிருந்து வெற்றி கண்ட இஸ்ரேலியர்கள் பண்புடனும் விவேகத்துடனும் நடந்து கொள்வார்கள் என்றும், நீண்டகால சமாதானத்துக்குரிய கண்ணோட்டத்துடன் செயலாற்றுவார்கள் என்றும் நம்பிக்கை பெறுகிறோம். வெற்றியின் போதையோ, தோல்வியின் ஆத்திரமோ நீண்டகால நல்வாழ்வுக்கான விவேகத்தை அழித்து விடலாகாது.

இஸ்ரேல் தனியரசாக வாழ்ந்து முன்னேறுவதற்கு மேல்நாட்டு வல்லரசுகள் உறுதி கூறத் தயங்கலாம். காரணம் ருஷியாவுடன் பனிப்போரை நீடிக்கவோ, உலக அணுப் போர் ஏற்படவோ இது ஏதுவாகும் என்று அவை அஞ்சலாம். அவ்வாறு இப்போதுள்ள இஸ்ரேல் ராஜ்யத்தின் எதிர்கால வாழ்வு பற்றி அவை உத்தரவாதம் தரத் தயங்கினால், இஸ்ரேலியர்களுக்கு மாற்றிடம் தரத் திட்டமிட வேண்டும். துவேஷிக்கும் ராஜ்யங்களின் சூழலில் இஸ்ரேலியர் வாழாமல், அண்டை நாட்டினருக்கு வெறுப்பூட்டாதவராக அவர்கள் வாழுமாறு தக்கதோர் இடத்தை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். இதுகாறும் இஸ்ரேல் விஷயத்தில் மேல்நாடுகள் நடந்து கொண்டதை யொட்டி இனியும் அந்நாட்டினருக்கு ஒரு காப்புத் தருவது வல்லரசுகளின் தார்மிகக் கடமையாகும். எகிப்தின் போர்க்கோல நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஐ. நா. படைகளைப் பிரதம காரியதரிசி பின்வாங்கிக் 'கொண்டபின் இவ்விஷயத்தில் ஐ. நா. தனது தார்மிக அதிகாரப் பொறுப்பை இழந்துவிட்டது என்று வருத்தத்துடன் கூறவேண்டியதாகிறது.

இனி நடக்கப் போவதென்ன என்பது அரபு நாடுகள் எப்படி நடந்து கொள்ளும் என்பதைப் பொறுத்ததே. தோல்வியுற்ற நாடுகள் தோல்வியால் எந்தப் படிப்பினையும் பெறுவதில்லை என்பதே சரித்திரம் காட்டும் உண்மை. மாறிய சூழ்நிலைக்கு அவை தங்களைச் சரிப்படுத்திக் கொள்வது துர்லபம்தான். பொதுவாக அவை பழி வாங்க வேண்டும் என்றே சங்கற்பம் செய்து கொள்கின்றன. இஸ்ரேலை அழிக்க வேண்டும் என்ற நினைவு கனவானபின்னும்கூட, இந்த நினைவை — அல்லது கனவை— அரபு நாடுகள் கைவிடுமா என்பது கேள்வி. இந்தக் கோஷத்தைக் கைவிடுவ

தால் தங்களுக்குத் தேசப் பற்று அற்று விட்டது என்று பொதுமக்கள் எண்ணுவரோ என அரபு நாட்டுத் தலைவர்கள் அஞ்சக் கூடும். என்றாலும், இஸ்ரேலுக்கு எதிராகக் கிளம்பும் கோஷம் அரபு நாடுகளின் உண்மையான பிரச்னைகளிலிருந்து கவனத்தைத் திருப்புகிறது என்று கருதுபவர்களும் அந்நாடுகளில் இருக்கிறார்கள். இவர்கள் இப்போது தமது குரலை வலுவாக எழுப்ப வேண்டியது அவசியம்.

அரபு நாடுகளுக்கு ஆதரவாக ருஷியா ஐ. நா. பாதுகாப்புச் சபையில் 'வீடோ' உபயோகிக்கக்கூடும். எனவே ஐ. நா. பாதுகாப்புச் சபை மூலம் தனக்குக் காப்பு கிட்டாது என்று இஸ்ரேல் கருத இடமுண்டு. இது போன்ற சந்தர்ப்பங்களில் ஐ. நா.தான் சமாதானம் ஏற்படுத்தி வைக்கக்கூடிய அமைப்பு எனினும், மேற்காசியப் பிரச்னையின் பிரத்தியேகமான நிலவரம் காரணமாக இஸ்ரேல் நேரடியாகவே அரபு நாடுகளுடன் உடன்பாடு காண வேண்டியிருக்கும். ஒவ்வொரு அரபு நாடாக அது உடன்படிக்கை செய்து கொள்ளலாம். அல்லது ஒட்டுமொத்தமாக அனைத்தையும் கூட்டி உடன்பாடு பெறலாம். இஸ்ரேல் வாழ வேண்டும் என்ற அங்கீகாரமே எந்த உடன்படிக்கைக்கும் அடித்தளமாக இருக்கும் என்பது தெளிவு. வியாபாரத்துக்கும், உல்லாசப் பயணம் உட்படப் போக்குவரத்துக்கும் இந்நாடுகளின் எல்லைகள் திறந்து வைக்கப்பட வேண்டும். தவறான பழைய ஏற்பாடுகள் யாவும் ரத்துச் செய்யப்பட வேண்டும். பொருளாதாரத்துக்கு ஊறு விளைவிக்கும் கால்வாய்த் தடுப்பு போன்ற காரியங்கள் இனி நடக்கக் கூடாது என்பதும் உடன்படிக்கையில் இடம் பெற வேண்டும்.

இந்த நிபந்தனைகளை யெல்லாம் எந்த விதத்தில் விதிக்க வேண்டும் என்பதை இஸ்ரேல் புத்திசாலித்தனத்துடன் உணர வேண்டும். வெற்றிவீரர்கள் நடந்து கொள்ளும் விதத்திலேயே தோற்றவர்களின் நடவடிக்கை உருவாகும் என்பதை இஸ்ரேல் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். வெற்றி பெற்றுள்ள இச்சமயத்தில் இஸ்ரேல் மிதமாக, இதமாக நடந்து கொள்ள வேண்டும். ராணுவத்தில் பலமான நிலையிலிருப்பதால் பேச்சு வார்த்தையில் கடினமாக இருந்துவிட முடியாது. இஸ்ரேல் இன்றுள்ள இடத்திலேயே ஓர் அரசாக இருப்பதெனில், தானும் 'மத்தியக் கிழக்கு' என்கிற சிறு உலகில் ஓர் அங்கம் என்ற உணர்ச்சியை இழக்கக் கூடாது. ஜோர்டான் பள்ளத்தாக்கில் உள்ளவர் உள்பட ஐந்து கோடி 'ஸெமிடிக்' இன மக்களின் முன்னேற்றத்துக்காகவும், தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும் தான் உதவ முடியும் என்று இஸ்ரேல் உறுதிகூற வேண்டும். தலைநகரில் பெர்லின் சுவர்போல் இருநாடுகளுக்கும் தடுப்பு இருப்பதை இஸ்ரேல் ஒப்புக் கொள்ள முடியாதெனினும், மற்றபடி எல்லைகளை வகுத்துக் கொள்வதில் அது ஒரேயடியாக இறுக்கமாக இராமல் இளக்கமான, இணக்கமான மனப்பான்மையைக் காட்டுவது அவசியம்.

வென்றவர் — தோற்றவர் இருதரப்பிலும் இத்தகைய நல்லறிவு உதயமானால், மேற்காசியக் கொந்தளிப்பு ஒரு கெட்ட சொப்பனம் போல் தேய்ந்து போகும்.

நக்ஸல்பாரி நாசவேலை

இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டு சர்க்கார் அமைத்துள்ள வங்கம் இன்று பெரும் சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. வங்கத்தின் வடபகுதியில் நக்ஸல்பாரி என்ற இடத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட்கள் பயங்கர ஆட்சியைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். அங்கு கொள்ளையும் சூறையாடலும் தாண்டவமாடுகின்றன. வங்க முதன் மந்திரியே இதை ஒப்புக் கொண்டிருக்கிறார். நக்ஸல்பாரிக்குச் சற்று வடக்கே திபெத் எல்லை — சீனத் துருப்புகள் நடமாடும் இடம். இத்தகைய இடத்தில் இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள் — ஏற்கனவே சீனாவுக்கு ஆதரவாக இருப்பவர்கள் என்ற பெயரைச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்கள் — மக்களைத் தூண்டிவிட்டுக் கட்டவிழ்த்து விட்டிருப்பதில் வேறு ஏதாகிலும் நோக்குண்டோ என்ற சந்தேகம் நாட்டில் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ அஜய் முகர்ஜி பொறுமையாகப் பார்த்து வருகிறார்.

இந்திய சர்க்காரும் இப்பொழுது தலையிட்டு ராஜ்ய சர்க்காரிடம் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ள விரும்பாமல் கவனித்து வருகிறது. எனினும், இதைக் காரணம் காட்டி மேற்கு வங்கத்தில் காங்கிரஸல்லாத சர்க்காரைக் கலைத்து ராஷ்டிரபதியாட்சிக்கு அடிகோலி விடுவார்கள் என்ற சந்தேகம் நாட்டில் பரவலாக உள்ளது. நக்ஸல்பாரி விவகாரம் ராஜ்ய சர்க்காரின் பிரச்னையானாலும் சரி, மத்திய சர்க்காரின் பிரச்னையானாலும் சரி தேசம் முழுவதும் இதில் நியாயமான விசாரம் கொண்டுள்ளது. இதை நல்ல முறையில் தீர்த்து வைக்கத் திறமும், விவேகமும் அவசியம். கம்யூனிஸ்ட்களிடம் எவ்வளவு உஷாராக இருக்க வேண்டும் என்பதையும் இதிலிருந்து நாடு புரிந்துகொள்ள வேண்டும்.

விற்பனை வரி

விவசாயத்துக்கு அடுத்தபடி நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டிருக்கும் தொழில் வியாபாரம். வெற்றிலைப் பாக்குக் கடையிலிருந்து பலசரக்குக் கடை வரை பல வகையான கடைகள் வைத்து வியாபாரம் நடத்தி ஜீவனோபாயம் செய்து வருபவர்கள் ஏராளம். இவர்களில் பலர் அதிகமாகப் படிப்பு வாசனை அற்றவர்கள். அநுபவத்தினாலேயே சிறப்பாகப் பணி செய்து வருபவர்கள். வரிகள் கொடுப்பதற்கு அவர்கள் தயங்குவ

இல்லை. ஆனால் பற்பல பண்டங்களின் மீது பற்பல விகிதங்களில் வரிகள் இருப்பதால் அவர்கள் கணக்கெழுதிப் பேரேடு வைப்பதற்குச் சிரமப்படுகிறார்கள். கணக்குக் குமாஸ்தா நியமிக்கக்கூடிய வருவாயும் இவர்களில் பெரும்பாலோருக்கு இல்லை. இதனால் இவர்கள் விற்பனை வரி இலாகாவினரின் கெடுபிடிகளுக்கு இலக்காகி வந்திருக்கின்றனர்.

இந்தச் சாமானிய வியாபாரிகளின் சிரமத்தை நீக்கும் பொருட்டு வரிமுறையைச் சீர்ப்படுத்தி எளிமையாக்கப் போவதாகத் தமிழக அரசினர் கூறியுள்ளனர். வருஷாந்தர மொத்த விற்பனைத் தொகையில் வரி விலக்கு வரம்பைக் கணிசமாக உயர்த்தப் போவதாகவும் சொல்லியிருக்கிறது தி.மு.க. அரசு.

இவ்விரண்டையும் வியாபார மக்கள் மன மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள்.

விற்பனை வரி ஒன்றுதான் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கணிசமான வருவாயைத் தேவைப்பட்ட போது கொடுத்து வரும் காமதேனுவாக இருந்து வருகிறது. ரூபாய்க்குப் படி அரிசி தருகிற திட்டத்தினால் தமிழக அரசு சுமார் பத்து கோடி ரூபாய் அதிகம் செலவழிக்க வேண்டியுள்ள சமயம் இது. இல்வி இந்த நிலையை உதவாது என்றே தோன்றுகிறது. சிறிய பாசனங்களுக்காகவும் மாநில அரசு அதிகச் செலவு ஏற்குமெனத் தோன்றுகிறது. இச்சமயத்தில் ராஜ்ய சர்க்காரின் வருவாயையும் பாதிக்காமல், வியாபாரத் துறையிலுள்ள மக்களுக்கும் வசதியளிக்கும் வகையில் விற்பனை வரியை மாற்றுவது ஒரு சாதனைதான். இதை எப்படிச் சாதிக்கப் போகிறார்கள் என்பது தமிழக அரசாங்கத்தின் பட்ஜெட்டிலிருந்து தெரிய வரும்.

அந்நிய அவமானமும் சுய அவமானமும்

சீனாவிலுள்ள இந்திய தூதரக உத்தியோகஸ்தர்களை மிக மிகக் கேவலமான முறையில் சீனர்கள் நடத்தியதைக் கேட்டு மனக் கொதிப்படையாத இந்தியன் எவனும் இருக்க முடியாது. நாமும் ஏதோ பிரதி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் இது ஒருசில அதிகாரிகளைச் சீனம் அவமானம் செய்ததோடு நின்று போன விஷயமல்ல. பாரதத்தையும், பாரத சர்க்காரையும் மானபங்கம் செய்ய வேண்டும் என்ற துராசைக்கு ஒரு சிறிய உருவமாகவே, நமது அதிகாரிகளுக்கு உளவாளிகள் எனப் பட்டம் சூட்டி மிகவும் நீசத்தனமான முறையில் அவர்களை நடத்தியிருக்கிறார்கள். சீனம் செய்த மானபங்கத்துக்கு ஓரளவில் பாரத சர்க்காரும் பொறுப்பேற்றுத்தானாக வேண்டும். இஸ்ரேலுடன் ராஜரீக உறவு வைத்துக் கொள்ள விரும்பாத பாரத சர்க்கார், சீனத்தின் பெரும் படையெடுப்புக்குப் பிறபாடும் சீனத்துடன் ராஜரீகத் தொடர்பைத் துண்டிக்காமல் தூதரகத்தை நடத்தி வந்ததுதான் இந்த மானபங்கத்துக்கு இடமளித்து விட்டது. அயல்நாட்டார் செய்கிற அவமானத்தைவிட நாமாக அவமானத்தைத் தேடிக் கொள்வதுதான் பெரும் துர்ப்பாக்கியம்.

டில்லி மக்கள் சபையில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும்—காங்கிரஸ், சுதந்திரக் கட்சி, ஜனசங்கம், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சுயேச்சையாளர் அத்தனை பேரும் – ரத்தம் கொதித்து எழுந்துள்ளனர். இச்சமயத்தில் அமைதியே உருவாக விளங்கியவர்கள் யாரெனில், எவ்விஷயத்திலும் தீவிரமாக உணர்ச்சிவசப்படும் கம்யூனிஸ்டுகள். சீனாவின் நடவடிக்கையைக் கண்டித்து ஒரு வார்த்தைகூட அவர்கள் சொல்லவில்லை. நக்ஸல்பாரி சம்பவத்தையும் இதோடு பிணைத்தால், இப்படிப்பட்டவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று ஸ்ரீ மஸானி கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை என்பது புரியும்.

காமகோடியின் கருணைமொழி



எல்லாத் தத்துவங்களுக்கும் மூலமாக இருப்பவன் ஈசுவரன் எனில், 'கடவுள் இல்லை' என்று ஒரு தத்துவம் இருக்கிறதே, அதற்கும் ஈசுவரன்தான் காரணம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதனிடத்தில் நமக்கு வெறுப்பு உண்டாகக் கூடாது. 'சுவாமி இல்லை என்பது எப்படி ஒரு மதமாகும்?' என்றால், அதுவும் கடைசியில் சத்தியமான தத்துவத்துக்கு அநுகூலம்தான். ஒரு விசாரணையும் இல்லாமல் நம் மதத்தில் இருக்கிற சோம்பேறியைவிட, 'சுவாமி இல்லை, ஆத்மா இல்லை, எல்லாம் இந்த உடம்புதான்' என்று சொல்லிக் கொண்டிருப்பவன் உயர்ந்தவன். காரணம், அவன் தத்துவ விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டான் அல்லவா? சுவாமி உண்டா, கிடையாதா என்ற ஆராய்ச்சியில் அவன் இறங்கி விட்டான். 'கிடையாது' என்ற ஒரு படி வரைக்கும் வர அவன் தத்துவ ஆராய்ச்சி பண்ணியிருக்கிறான். இன்னும் கொஞ்சம் உயர்ந்தால், அநுபவம் முதிர்ந்தால், சத்தியமான தத்துவத்தை அவன் அறிந்துகொண்டுவிட முடியும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

எதிர்க் கட்சிகள் உடனடித் தேவையான ஓர் அடிப்படைக் கொள்கையின்மீது ஒன்று சேர்ந்து கூட்டாகச் செயலாற்றுவதற்கு மறுத்து வருவதைக் காணும்போது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை குன்றுகிறது. அவரவரும் தேசத்துக்குமேலாகக் கட்சியையே நினைத்துப் பார்வை மங்கிப் போயிருப்பதாகத் தோன்றுகிறது. சமயத்தின் தேவைக்கு ஏற்ப எழுச்சி பெற எதிர்க்கட்சிகள் சக்தி பெறவில்லை எனக் காண்கிறது.

எதிர்க்கட்சிகளுக்கு இத்தகைய சக்தியூட்டும் முன்பாகப் பிரதமரே தேவை உணர்ந்து செயலாற்றக்கூடும்—தமது கட்சியிலுள்ள சிரமங்களை எண்ணாமல் அவர் சொந்த ஹோதாவில் தைரியமாகக் காரியம் செய்வாரேயானால் இது சாத்தியம். அவர் செய்ய வேண்டிய காரியம் என்ன? தேசியக் குழு ஒன்றின் ஆலோசனையின் மீதே செயலாற்றிப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அவர் முன் வரவேண்டும். 'காங்கிரஸின் மந்திரி சபையைக் கலைத்துவிட்டுத் தேசிய சபையை அமைத்துக் கொள்ளுங்கள்' என்று நாம் தீர்மானம் நிறைவேற்றி அவருக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அவராகவே இதைப் பார்லிமெண்டில் எடுத்து இயம்பலாம். இதற்குப் பார்லிமெண்ட் இணங்காவிடில், இதுவரை நடந்ததுபோல் இனியும் தத்தளிப்புக் கொள்கையைப் பின்பற்றுவதைவிடப் பார்லிமெண்டையே கலைப்பது சிலாக்கியம் என அவர் கூறவேண்டும். அவர் இவ்விஷயத்தில் என்ன முடிவு செய்யப் போகிறார் என்று சரித்திரம் ஆவலுடன் காத்திருக்கிறது.

* * *

சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்காக அமெரிக்காவின் இரகசிய நிதியிலிருந்து உதவி கிடைத்தது என்கிற குதிரைக் கொம்பை யார் கண்டுபிடித்தார்கள் என்று புரியவில்லை. பொதுத் தேர்தலில் வெட்கக் கேடான முறையில் தோல்வியுற்ற சில காங்கிரஸ் யஜமானர்கள்தான் அடியோடு ஆதாரமற்ற இந்தக் கதையைக் கட்டிவிட்டுத் தங்கள் தோல்வியைக் 'காப்பாற்றி'க் கொண்டிருக்கக்கூடும். அவதூறு எங்கிருந்து கிளம்பியது எனத் திட்டவட்டமாகக் கண்டுபிடிப்பது சிரமம். ஆனால் ஊகிப்பது சாத்தியம். சுதந்திரக் கட்சியின் பொறுப்பு வாய்ந்த ஒரு முக்கியஸ்தன் என்கிற முறையில் இது ஓர் அடிப்படையற்ற புளுகருட்டு என்று பிரமாணம் கூறுகிறேன்.

* * *

நாஸர் தோல்வியும் மானபங்கமும் அடைந்தவுடன் இந்திய சர்க்கார் அவரைக் கைவிடாதிருப்பது ஓர் அம்சத்தில் நல்ல விஷயம். கைவிட்டிருந்தால் அது வீரப் பண்புக்கு உகந்த செய்கையாகாது. எனினும் டில்லியில் இஸ்ரேல் தூதருக்கு இடம் தர முடியாது என்றும், இஸ்ரேல்தான் ஆக்கிரமிப்புச் செய்தது என்றும் நம் சர்க்கார் விடாப்பிடியாகச் சொல்லி வருவது தவறாகும். இஸ்ரேலுக்கு எதிராக அரபுநாடுகளை ஆதரிப்பதால் பாகிஸ்தானுடன் தனக்குள்ள சச்சரவில் ஆதாயம் பெறலாம் என்று இந்திய அரசாங்கம் எதிர்பார்த்தால் அது ஒரு வியர்த்தமான எண்ணமேயாகும்.

* * *

இஸ்ரேலைக் கலந்தாலோசியாமலே ஐ. நா. தலைமைக் காரியதரிசி பாதுகாப்புப்படைகளைப் பாலஸ்தீனத்திலிருந்து வாபஸ் பெற்றுவிட்டார். இஸ்ரேலை சம்ஹாரம் செய்துவிட வேண்டும் என்று சங்கற்பம் செய்துள்ள பதின்மூன்று நாடுகளுக்கு நடுவே அந்த நாடு தன்னையே சார்ந்து தனித்து விடப்பட்டது. ஐ. நா. படை வாபஸானவுடன் எகிப்து அதிபரவர்கள் டைரான் ஜலசந்தி, அகாபா வளைகுடா இரண்டையும் அடைத்துவிட்டார். இச்சூழ்நிலையில் ஆக்கிரமிப்பாளர் யார் என்று கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சி செய்வது அறிவுடைமையல்ல. இஸ்ரேல் தற்காப்பு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. விரைவாகத் தடுப்பு நடவடிக்கை எடுக்காதிருந்தால், தானே அழிந்து போவதற்கு அது அநுமதி தந்து கொண்டதாயிருக்கும்.


* * *

'பிரிட்டனும் அமெரிக்காவும் இஸ்ரேலுக்கு உதவியதாக ஒரு கோஷத்தை எழுப்பி, எகிப்து தன் தோல்வியையும், தனது கூட்டாளிகளைத் தான் கைவிட்டதையும் மழுப்பப் பார்க்கிறது' என்று பிரிட்டனின் வெளிநாட்டுக் காரியதரிசி ஜார்ஜ் ப்ரௌன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. மேற்காசியாவிலுள்ள பிரிட்டிஷ் கப்பல்களையும் விமான தளங்களையும் ஐ. நா. பார்வையாளர்களே வந்து பரிட்சித்து இதற்கு நிரூபணம் பெறலாம் என்றும் அவர் கூறியுள்ளார். 'எகிப்து கூறுவது முழுப் பொய். இவ்வாறு நடக்கவில்லை. நடக்கவும் முடியாது. இது அவர்களுக்கே தெரியும். தமது தவற்றை மறைக்க இதை ஒரு சாக்காகப் பயன்படுத்துகிறார்கள்' என்று அவர் சொல்லியிருக்கிறார்.

* * *

சுற்றுப்பயணம் செய்பவர்கள் ஒரு தீய நோக்கமும் இல்லாமல் புகைப்படம் எடுப்பதைக்கூட உளவு பார்ப்பதாகக் கருதுகிறது சீனம். சீனக் கம்யூனிஸ்டுகள் தமது பலவீனத்தை எவ்வளவு தூரம் உணர்ந்துள்ளனர் என்பதையும், இதைப் பிறர் கண்டுபிடித்து விடுவரோ என்று எவ்வளவு பயப்படுகின்றனர் என்பதையும் இது உணர்த்துகிறது. இனியும் நமது அரசியல் பிரதிநிதிகளையும் தூதரகத்தையும் சீனத்தில் இருக்கச் செய்வது இயலாத காரியம். ஓர் உடன்பாட்டின் கீழ் தமது நாட்டில் பணிபுரியும் அயல்நாட்டுப் பிரதிநிதிகளுக்கு எப்படி மதிப்புத் தரவேண்டும் என்று தெரியாதவர்களுடன் ராஜீய உறவுகளை முறித்துவிடவேண்டும். அவர்கள் நம் பிரதிநிதிகளுக்குச் செய்தது போலவே நாமும் திருப்பிச் செய்வது மிக உயர்ந்த பிரதிச் செயல் என்று சொல்வதற்கில்லை. யுக்தப்படி செய்ய வேண்டுவது யாதெனில், சீன சர்க்கார் பச்சாத்தாபம் தெரிவிக்கும் வரையில் அதனோடு தொடர்பை வெட்டி விடுவதேயாகும்.

பணி வருகிறது!



பணி வருகிறது!

நினைத்துப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. எல்லாம் வல்ல, எல்லாம் தெரிந்த, யாவும் தேர்ந்த நமது சர்க்கார், தம்முடைய கருணை கடாட்சத்தைப் புளியங்கொட்டையின் மேல் செலுத்தாமல் ஏன் இப்படிப் பராமுகமாக இருந்து வருகிறார்கள் என்று எண்ணும் போதே என்னையுமறியாமல் புளியங் கொட்டையின் மீது அநுதாபமும் சர்க்கார் மீது கோபமும் வரத்தான் செய்கின்றன.

கைத்தறிக்கும், கைவினைப் பொருள்களுக்கும், புகையிலைக்கும், தேங்காய் நாருக்கும், இன்னும் சொல்லப் போனால் நாம் துச்சமாக மதித்துப் பேசக்கூடிய கேசத்துக்கும் கூட, ஏற்றுமதி போர்டுகள் ஏற்படுத்தியவர்கள், புளியங்கொட்டையை இப்படி உதாசீனமாக வெறுத்து ஒதுக்கி மூலையில் உட்கார்த்தி வைத்துவிட்டார்களே, இது அக்கிரமமில்லையா? அநியாயமில்லையா?

மற்றவைகளைவிடப் புளியங்கொட்டை எந்த விதத்தில் தாழ்ந்து போய் விட்டது? அதற்குக் குணமில்லையா, நிறமில்லையா, மணமில்லையா, இல்லை உருவம்தான் இல்லையா....? ஒரு வருடத்தில் மட்டும் நம் நாட்டில் சரிவரப் பயன்படுத்தாமல் வீணாக்கப்படுகிற புளியங்கொட்டைகளின் எண்ணிக்கை 46,280,000,000,000 என்று அரசாங்கப் புள்ளி விவர இலாகாவே தெரிவித்திருக்கிறதே? பெரிய அளவில் ஏற்றுமதிக் கழகம் ஒன்றை நிறுவி, வீணாய்ப் போகிற புளியங்கொட்டைகளைத் திரட்டி ஏற்றுமதி செய்தால் எத்தனை கோடி ரூபாய் அந்நியச் செலாவணி நமக்குக் கிடைக்கும்?

அந்நியச் செலாவணி மட்டும்தானா? ஏற்றுமதிக் கழகம் நிறுவுவதால் கிடைக்கக் கூடிய இன்னும் சில ஆதாயங்களையும் இதோ சொல்கிறேன்:

1. மந்திய அமைச்சர்களுக்கோ அல்லது மாநில அமைச்சர்களுக்கோ நெருங்கிய ஆசாமிகளுக்கு அந்த ஸ்தாபனத்திலே ஜெனரல் மானேஜர் அல்லது மானேஜிங் டைரக்டர் பதவி போட்டுத் தரலாம்.
2. மற்ற வேலைகளுக்கு விண்ணப்பங்கள் வரவழைக்கிற சாக்கில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்துடன் ஐந்து அல்லது ஏழரை ரூபாய் போஸ்டல்

ஆர்டர் ஒன்றை வைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டு நிறையப் பணம் சேர்க்கலாம்.

3. எம். எல். ஏ.க்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அந்த ஸ்தாபனத்தில் வேலை தேடிக் கொடுக்கலாம்.

4. ரிடையர் ஆகப் போகிற கட்டத்தி லிருக்கிற அரசாங்க அதிகாரிகளை இந்தப் புதுக் கார்ப்பொரேஷனில் பெரிய பதவியில் தூக்கிப் போடலாம்.

5. 'மார்க்கெட் ஸ்டடி டூர்' என்று சொல்லிக் கொண்டு, ஜி. எம். அல்லது எம். டி., டிம்பக்டூ தவிர இதர இடங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு டிரான்சிஸ்டர், ஒரு எலெக்ட்ரிக் ஷேவர், போலராய்ட் காமெரா, சென்ட் பாட்டில்கள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு ஊர் திரும்பலாம்.


6. புளியங்கொட்டை கார்ப்பொரேஷனுக் கென்று புதுக் கட்டடம் கட்டிக் கொள்ள முயலும் போது, நிலத்தைச் சமப்படுத்துவதிலிருந்து கடைசியில் வெள்ளை யடிப்பது வரை பல்வேறு வேலைகளை வேண்டப்பட்டவர்களுக்குக் கொடுத்து நல்ல பெயர் சம்பாதிக்கலாம்.



7. 'புளியமர வாரம்' என்று ஒன்று கொண்டாடி, புளிய மரத்தின் அருமை பெருமைகளையும், புளியங்கொட்டை மாகாத்மியம் பற்றியும் ஆகாசவாணியில் மந்திரி யொருவர் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கலாம். பத்திரிகைகளுக்குப் பக்கம் பக்கமாக விளம்பரமும் கொடுக்கலாம்.

'அது சரி ஐயா, புளியங்கொட்டையை என்ன காரணத்தைச் சொல்லி ஏற்றுமதி செய்வது?' என்று கேட்கிறீர்களா ?

முதலில் புளியங்கொட்டையை மைசூருக்கு அனுப்புங்கள். அங்கே உணவு ஆராய்ச்சி நிலையத்தார் 'கொட்டுக் கொட்'டென்று உட்கார்ந்திருக்கிறார்களே, அவர்க இதை ஆராயட்டும். ஒரு புளியங் கொட்டையில் எத்தனை புரதச் சத்து, எத்தனை கொழுப்பு, எத்தனை ஏ., பி., சி., டி. வைட்டமின்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்து சொல்லட்டும். புளியங்கொட்டையில் மட்டுமல்லாது தோலிலும் என்ன என்ன சத்துக்கள் இருக்கின்றன என்று கண்டு



...முகுந்தன்...

பிடிக்கட்டும். அத்துடன் அந்தச் சத்து எத்தனை ஆப்பிள் அல்லது ஆரஞ்சு அல்லது பலாப்பழத்துக்குச் சமம் என்று கணக்குப் போட்டுச் சொல்லட்டும். 'புரதத்தில் சிறந்தது புளியங் கொட்டை! ஒரு புளியங்கொட்டை நான்கு ஆப்பிள்களுக்குச் சமம்' என்று விளம்பரம் செய்யுங்கள்.

அத்துடன் நின்று விடாமல் புளியங் கொட்டைகளுக்கு நன்றாக எண்ணெய் தடவி 'பாலிஷ்' செய்து, வறுத்து, பாலிதீன் பைகளில் போடுங்கள். 'இதோ ஓர் அற்புத உணவு!' என்று விளம்பரம் செய்யுங்கள். ஜனங்கள் க்யூவில் நின்று போட்டி போட்டுக் கொண்டு வாங்கு வார்கள். பாதி வரை உள்ளூரில் விற்பனை செய்யுங்கள். மீதியை ஏற்றுமதி செய்யுங்கள்.

நமது அயல்நாட்டுத் தூதரகங்களில் நடக்கும் விருந்துகளிலெல்லாம் புளியங்கொட்டை 'ரோஸ்ட்' இடம் பெற வேண்டும் என்று நிபந்தனை போடுங்கள். இந்தக் கொட்டையையே பொடித்து, காப்பிப்பொடிக்குப் பதிலாக எப்படி உபயோகிப்பது என்றும் சொல்லிக் கொடுங்கள். புளியங் கொட்டைக்கு ஆங்கிலத்தில் 'டாமரிண்ட் ஸீட்' என்று தானே பெயர்? அதைச் சுருக்கி 'டாமிண்ட்' என்று பெயர் கொடுத்து விடுங்கள் இந்தப் பானத்துக்கு. 'டாமிண்ட்' என்ற வார்த்தையில் கடைசியாக 'இண்ட்' என்று ஒலிப்பது இந்தியாவைக், குறிக்கிறது என்றும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.


ஒரு எம். பி., அரசியல் செல்வாக் காசுகள் இரண்டு பேர், ஒரு வருடமாக வருமான வரி கொடுக்காமல், 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டிருக்கும் தொழிலதிபர் ஒருவர், பெரிய இடத்துப் பெண் ஒருத்தி, சமூக சேவகி ஒருத்தி – ஆக ஆறு பேர்கள் கொண்ட ஒரு குழு,

நம்முடைய வரிப் பணத்திலே ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் போய் விட்டு வரட்டும். தங்களது அறிக்கையைத் தயாரிக்க நாலரை வருடங்கள் எடுத்துக் கொள்ளட்டும். அந்த அறிக்கையில் கண்டபடி நியூயார்க்கிலும், ரோமிலும், லண்டனிலும், டோக்கியோவிலும் நான்கு விற்பனை நிலையங்களை ஏற்படுத்திச் செல்லாக் காசுகளின் ஒன்றுவிட்ட சகோதரர்களுக்கும், சமூக சேவகியின் அத்தை பெண்ணுக்கும் வேலை போட்டுக் கொடுங்கள். வியாபாரம் பிய்த்துக் கொண்டு போகும்.

இவ்வளவுக்குப் பிறகும் ஒருவேளை, உணவுப் பொருளாகப் புளியங்கொட்டை பிராபல்யமடையவில்லை யென்றாலும் கவலைப்பட வேண்டாம். அவற்றை நன்றாக மெருகேற்றி நடுவில் துளையிட்டு, மாலைகளாகவும், நெக்லஸ்களாகவும், பிரேஸ்லட்டுகளாகவும் செய்து கைவினைப் பொருள்கள் கார்ப்பொரேஷனிடம் கொடுத்து விட்டால் அவர்கள் கவனித்துக் கொள்ளுவார்கள் விற்பனையை. 'டாமினண்ட் ஏற்றுமதி கார்ப்பரேஷன்' இதனால் தன் கதவை இழுத்து மூடிவிட வேண்டும் என்பதில்லை. கைவினைப் பொருள்கள் கார்ப்பொரேஷனோடு கடிதப் போக்குவரத்து நடத்துவதற்கென்றே இன்னும் முப்பது பேர்களை நியமிக்கலாம்.

காருண்யமுள்ள சர்க்காரே! இந்த ஏழையின் ஆசையை நிறைவேற்றுவதற்காகவாவது நீங்கள் இப்படிச் செய்ய மாட்டீர்களா? 'இந்திய நாட்டு மக்கள் பஞ்சத்தில் அடிபட்டு, சோற்றுக்குத் தவிக்கிறார்கள்; புளியங் கொட்டைகளைக் கூட உணவாகக் கொள்கிறார்கள்' என்று அயல்நாடுகளில் நிலவும் ஒரு தவறான கருத்தைத் தகர்த்தெறிவதற்காகவாவது இப்படிச் செய்ய மாட்டீர்களா?....

காந்திஜியின் ஓட்டப் பந்தயம்!



''யூத இனத்தைச் சேர்ந்த உங்களுக்கு முதல் கடமை உங்கள் மக்களுக்கு உதவிசெய்வதுதான்!''

இந்த யோசனையைக் காந்திஜி தம் பழைய நண்பரான ஹெர்மன் சலீம் கிலீன்பாக்குக்குக் கூறினார். தென் ஆப்பிரிக்காவில் இந்த நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் முதல் தடவையாகச் சந்தித்து நட்புரிமை பூண்ட அந்த நண்பருக்கு இப்படி நல்லுரை வழங்கினார் மகாத்மா. கிலீன்பாக் ஜெர்மனியிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்கு வந்து நிறையச் செல்வங்களைச் சம்பாதித்தவர்.


ஒரு நாள் ஒரு வண்டியில் மூன்று இந்தியர்கள் ஏற அதன் டிரைவர் அனுமதிக்காதது கிலீன்பாக்குக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. அந்த மூன்று இந்தியர்களில் ஒருவர் மகாத்மா காந்தி. இதைக் கண்டு கிலீன்பாக் டிரைவருடன் வாதாடிப் பலன் கிடைக்காமல் போகவே, அந்த வண்டியை விட்டுக் கீழே இறங்கிவிட்டார், தம் எதிர்ப்பைக் காட்டும் முகமாக. அதன் பிறகு கிலீன்பாக்கும் காந்திஜியும் நெருங்கிய நண்பர்களானார்கள். காந்திஜியின் நட்பினால் கிலீன்பாக் சைவ உணவை மேற்கொண்டார். இந்தியாவில் இவ்விருவரும் 1939ம் ஆண்டில் சந்தித்தபோது தம் சொத்து அனைத்தையும் இந்திய மக்களின் மனம் கவர்ந்த தலைவர் மகாத்மாவுக்கு, தம் உள்ளம்கவர்ந்த நண்பருக்கு மனமுவந்து வழங்க முன்வந்தார். காந்திஜி இந்த நன்கொடையை வாங்க மறுத்தார். அதற்குப் பதிலாக யூத மக்களுக்கு உதவி புரியச் சொன்னார். கிலீன்பாக்கும் இந்த யோசனைக்கு இணங்க, தென் ஆப்பிரிக்காவிலும் இஸ்ரேலிலும் உள்ள யூதக் கல்விக் கழகங்களுக்குத் தம் சொத்துக்களை வழங்கினார். அவரது நன்கொடை பெற்ற கல்விக் கழகங்களில் ஜெருசலம் சர்வகலாசாலையும் ஒன்று. வின்கேட் உடற்பயிற்சிக் கழகம் இவரது நன்கொடையினாலேயே உருப் பெற்றது.

கிலீன்பாக் விளையாட்டுக் கலையில் ஈடுபாடுள்ளவர்; கடற்கரையில் அவர் காந்திஜியோடு பலதடவைகளில் ஓட்டப் பந்தயங்களில் ஈடுபட்டிருக்கிறார்!

ஆதாரம்: இஸ்ரேல் செய்தி



இதுதான கொசு



இதுதான் கொல்லிமருந்து: சிவப்பு டப்பாவில் வரும் ஃப்ளிட்

கொசு இல்லாத இடமே இல்லை. ஆண்கொசுக்களால் ஆபத்து ஏதுமில்லை. ஆனால் பெண்கொசுக்களோ இரத்தம் உறிஞ்சியே உயிர்வாழ்கின்றன. அவை கடிக்கும்போது அவற்றின் உமிழ்நீர் உங்கள் இரத்தத்தில் இறங்குகிறது. மலேரியா, டெங்கு காய்ச்சல், யானைக்கால் நோய்கள் ஆகியவற்றின் கிருமிகள் அந்த உமிழ்நீரில் இருக்கக்கூடும்.

கொசுக்கள், ஈக்கள், பிறவகைப் பறக்கும் பூச்சிகள் யாவற்றையும் ஒழிக்க, உங்கள் வீட்டிலே ஃப்ளிட் தெளியுங்கள். சக்தி மிகுந்த இரண்டு மருந்துகளின் ரசாயன சேர்க்கையான ஃப்ளிட், இரு வகைகளில் தாக்குகிறது: நொடிப் பொழுதில் அப் பூச்சிகளை வீழ்த்திய பின், அதிவிரைவில் சாகடிக்கிறது.

ஃப்ளிட் தெளித்து உங்கள்வீட்டைப் பாதுகாப்பீர்

—அதுவே உலகில் முதன்மை வகிக்கும் பூச்சிக்கொல்லி!

எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்டர்ன் இன்க்.



? பரீட்சை முடிவும் ! பரபரப்பும்

மேஞு



ஜுன் மாதம் ஒன்பதாம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல். சென்னை நகரத்தில் ஒருவித பரபரப்பும் படர ஆரம்பிக்கிறது.


எதிர்பார்த்ததும் எதிர்பாராததும் நிகழ்கின்றன.

ஆம்! அன்று பிற்பகல்தான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை முடிவுகள் வெளியாகின்றன.

ஆனந்தம், சோகம், ஆச்சரியம், திகைப்பு, ஏமாற்றம் ஆகிய உணர்ச்சிகள், வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு குடும்பங்களில் ஊடுருவுகின்றன.

பரபரப்புடன் சாக்லெட்டுகள் நிறைந்த தட்டை எடுத்து நீட்டும் புரசவாக்கத் தந்தை ஒருவர், ''பையன் பரீட்சைக்கு முன்னாலே ஒரு மாசம் ஆஸ்பத்திரியிலே படுத்திருந்தான். பரீட்சை எழுதவே அவனாலே முடியுமோ என்னவோ என்று நான் சந்தேகப்பட்டேன். ஆனால் பயல் பாஸ் பண்ணிட்டான். ஆண்டவன் கருணைதான்!'' என்கிறார்.

''நம்ம பயல் பள்ளிக்கூடப் பரீட்சைகளிலே எப்போதுமே நல்ல மார்க்குகள் வாங்கியது கிடையாது, ஸார்! அவன் பாஸ் பண்ணுவான் என்கிற நம்பிக்கை எனக்குமில்லே அவன் உபாத்தியாயருக்கும் கிடையாது. ஆனாலும் பாருங்க, அவன் சாமர்த்தியம் — பரீட்சைகளில் இன்ன கேள்விகள் தான் வரலாம் என்று சரியா 'கெஸ்' பண்ணிப் படிச்சிருக்கான். பாஸ் ஆயிட்டுது'' என்று பெருமிதம் பொங்கக் கூறும் ஒரு தகப்பனார் மேலும் தொடர்கிறார்: ''கோடி



வீட்டு மார்க்கபந்துவின் பிள்ளை இருக்கானே, கிளாஸிலே எப்போதும் 'ஃபஸ்ட்' வருகிறவன். என்ன ஆச்சு தெரியுமோ இல்லையோ? புடுங்கிண்டு போயிடுத்து!'' இப்படிக் கூறும் போது அவர் முகத்தில் பெருமிதமும் மகிழ்ச்சியும் இன்னும் அதிகமாகப் பொலிகின்றன.

''இவன் இந்தத் தடவை நிச்சயமாக ஃபெயிலாகத்தான் போகிறான். அவள் ஃபெயிலானால்தான் நல்லது. பேசாமல் கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிவிடலாம் என்றுதான் நினைத்தேன். எஸ். எஸ். எல். ஸி.யிலேயே இவ்வளவு 'பாஷ'னும் டிரஸ் தடபுடலும் இருந்தால் காலேஜுக்குப் போனால் என்ன ஆகுமோ என்ற பயம்! இந்தப் பரீட்சை முடிவு ஒரு வழியாக இந்தப் பிரச்னைக்கு முடிவு காண உதவுமென்று நினைத்தால், இவன் பாஸ் பண்ணி வைத்திருக்கிறான். அவள் சிநேகிதிகள் எல்லாம் போகிற ஒரு குறிப்பிட்ட தடபுடல் கல்லூரிக்குத்தான் போகணுமாம்! இன்னும் பி. யூ. ஸி.யிலே நுழைந்த பாட்டைக் காணோம்! அதற்குள்ளே பி. ஏ. வகுப்பிலே என்ன பாடம் எடுத்துக் கொள்கிறது, எம். ஏ.யிலே என்ன சப்ஜெக்ட்னு மனக்கோட்டை கட்டியாகிறது!... அப்புறம் அவள் படிப்புக்குத் தகுந்த மாப்பிள்ளை பார்க்கணும்கிற தொல்லை! என் வார்த்தை இந்த வீட்டிலே எடுபடாது! அவள் அப்பா அவள் கட்சி!'' என்று ஆதுரப்படுகிறார் ஓர் அம்மையார்!

''என் பையன் பாஸ் பண்ணினதிலே ஒன்றும் ஆச்சரியப்படறதுக்கு இல்லே சார்! அவன் எல்லா வகுப்பிலும் பிரிலியண்ட் ஸ்டூடண்ட்!... ஆனால் நான் எதிர்பார்த்த 'டோட்டல்' மார்க்குகள் வரவில்லை! ஏன் சார்! உங்களுக்கு.... காலேஜ் பிரின்ஸிபல் நண்பராமே! என் பையனை அழைத்துக் கொண்டு போய்.....'' என்று ஆரம்பிக்கும் ஒரு தந்தையிடமிருந்து நான் அவசரம் அவசரமாக நழுவுகிறேன்.

மௌண்ட்ரோட் பகுதிக் காரியாலயம் ஒன்றில் பணியாற்றும் அப்துல் ரசாக் என்ற நண்பருக்கு ஏற்பட்ட அநுபவம் புதுமையானது. அவர் பையன் கபான் குரேஷி முற்பகலிலிருந்தே பத்திரிகைக் காரியாலயம் ஒன்றின் வாசலில், பரீட்சை முடிவுகளின் 'ஸ்பெஷல் சப்ளிமெண்டு'க்காகக் காத்திருக்கிறான். விற்பனைக்கு வந்ததும் ஒரு பிரதியை வாங்கி ஆவலுடன் தன் நம்பரைத் தேடுகிறான். அகப்படுகிறது. ஆனந்தம் பொங்குகிறது அவன் முகத்தில். பத்திரிகையுடன் தந்தையைப் பார்க்க ஓடி வருகிறான். 'பாஸ் நான்' என்று பத்திரிகையை ஜெயக்கொடி போல் ஆட்டிக் கொண்டே நிற்கிறான்.

தந்தைக்குப் பெருமிதம் தாங்கவில்லை. பத்திரிகையை வாங்கித் தம் கண்களால் அந்த வெற்றி நம்பரைப் பார்க்கப் பத்திரிகையைப் புரட்டுகிறார். நம்பரைத் தேடுகிறார்! தேடுகிறார்! அகப்படக் காணோம்!

''எங்கேடா, பார்த்தாய்?'' என்று பதற்றத்துடன் கேட்கிறார் அவர். பையன் ஒரு பகுதியைக் காண்பிக்கிறான். தந்தை திடுக்கிடுகிறார்.

பரீட்சை நம்பர்கள் லட்சணக் கணக்கில் ஓடுகிறதல்லவா? பையன் நம்பர் 163528. அவனுக்கு லட்சம், ஆயிரம், நூறு என்று பகுதி பகுதியாகப் போடப்பட்டிருந்த நம்பர் சமுத்திரத்தில் ஏதோ குழப்பம். 160528 எண்ணைப் பார்த்து பாஸ் என்ற மயக்கத்தில் ஆழ்ந்து விட்டான். 163528 இல்லை!

தந்தை அநுபவஸ்தர். உடனடியாகப் பையனை ஏமாற்றத்துக்கு ஆளாக்க விரும்பவில்லை. பத்திரிகையை மடித்து வைத்தார். பரபரக்கும் பையனை மாலை வரை தம்முடனேயே வைத்துக் கொண்டார். வீட்டுக்குப் போகும் போது விஷயத்தைச் சொன்னார்! அந்த கணத்தை நினைத்துப் பார்க்க இப்போதும் அவருக்குப் பயமாக இருக்கிறது!

வாழ்க்கை எனும் ஊஞ்சல் இன்பம் துன்பம் என்னும் இரு முனைகளுக்கு இடையே அசைகிறது என்கிறார்கள் அநுபவஸ்தர்கள்! பரீட்சை முடிவுகள் என்பதும் இப்படி ஓர் ஊஞ்சல்தானோ?



தலைவலியா?



வேகமாக குணம்பெற
2 அனாஸின் சாப்பிடுங்கள்

தலைவலி தாக்கும்போது உங்களுக்குப் படபடப்பும் வாட்டமும் சோர்வும் உண்டாகும். சிடுசிடுப்புடன் அடிக்கடி எரிச்சல் அடைவீர்கள். உடனே 2 அனாஸின் சாப்பிட்டுப் பாருங்கள். 4-வழி நிவாரணம் அதி விரைவில் கிட்டும்.

1. தலைவலி நோவைத் தணிக்கிறது அனாஸின்—வேகமாக!
2. சோர்வை வெல்லுகிறது அனாஸின்—வேகமாக!
3. வாட்டத்தைப் போக்குகிறது அனாஸின்—வேகமாக!
4. படபடப்பை ஆற்றுகிறது அனாஸின்—வேகமாக!

காரணம், பல மருந்துகள் இணைந்த அனாஸின்—டாக்டரே குறித்துக் கொடுத்த மருந்துச் சீட்டுபோல் பத்திரமானது. எனவே, வலி தணிக்கும் மற்றெந்த சாதனங்களையும்விட, அதிக மக்கள் அனாஸின் உபயோகிப்பதில் வியப்பில்லை.

அடுத்த தடவை தலைவலி வந்தால் அனாஸின் சாப்பிடுங்கள். அனாஸின் சளி, ஃப்ளு, பல்வலி, உடல்வலி ஆகியவற்றையும் தணிக்கிறது. ஆகையால் எப்போதும் அனாஸின் உங்கள் கைவசமிருக்கட்டும்.

தவறாமல் சாப்பிடுங்கள் அனாஸின்

அனாஸின்

சிறந்தது ஏனெனில் அது
4 வழிகளில் வேலை செய்கிறது



Registered user: GEOFFREY MANNERS & COMPANY LIMITED

பஞ்சாமிர்தம்

'கொக்கி'



இன்று நாம் எல்லோரும் உபயோகித்து வரும் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்ற எண்களுக்கு அரபு எண்கள் என்று பெயர். உலகிற்கு இந்த அரிய எண் வடிவங்களை வழங்கிய அரபு வட்ட நாடுகள்தான் சூயஸ் கால்வாய் தங்களுக்கே சொந்தம், அகாபா வளைகுடா தங்களையே சேர்ந்ததென்று கூறுகிறது. 1, 2, 3 முதலிய எண்களையும், அவை தங்களுக்கே சொந்தம், பிறர் அவற்றை உபயோகிக்கக் கூடாதென்று முரண்டு பிடித்தால் நாம் ஒன்று இரண்டு எழுத முடியாமல் மிகவும் திணற வேண்டியதுதான்! 22-ம் நம்பர் பஸ்ஸில் போகிறவர்கள் வேண்டுமானால் தப்பித்துக் கொள்ளலாம். ஏனெனில் தமிழ் எண் 22ம் அரபு எண் 22ம் தோற்றத்தில் ஒரே சாயலாக இருக்கின்றன. மற்ற பஸ்களில் போகிறவர்கள் பாடு என்னவாகும்?



ஃ ஃ ஃ

இந்தியப் பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் உடல் பருத்தவர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, ''பீமசேன எம். பி.க்கள் சங்கம்'' என்று ஒரு சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


தங்களுக்கு அளிக்கப்படும் உணவு அலவன்ஸ் வயிற்றுக்குப் போதவில்லை, அதிகரிக்க வேண்டும் என்று பீமர்கள் கேட்கப் போகிறார்களாம்.



உடல் வளர்ச்சிக்கு மருந்துகள், டானிக்குகள் வாங்கிச் சாப்பிட வேண்டும். அதற்கும் சேர்த்துக் கூடுதலாகப் படியைக் கொடுக்க வேண்டும் என்று மெலிந்தவர்கள் அரசாங்கத்தைக் கேட்கப் போகிறார்களாம்! இவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறினால் நாளைக்கே ''நெட்டை எம். பி.க்கள் சங்கம்'' ஒன்றும் ஏற்படலாம். நெட்டை எம். பி.க்கள் கால்கள் உயர்ந்த நாற்காலி மேஜைகள் வேண்டும் என்று கேட்கலாம். குட்டை எம். பி.க்கள் கலா நிகழ்ச்சிகளில் பிறர் தலை மறைக்காமல் தங்களுக்கு முதல் வரிசையில் 'ஸீட்டு'களை ஸ்பெஷல் ரிசர்வ் செய்து கொடுக்கும்படி வற்புறுத்தலாம். இப்போதுள்ள அரசாங்கப் போக்கில் இந்தக் கோரிக்கைகள் நிறைவேறினால்கூட ஆச்சரியமில்லை.

ஃ ஃ ஃ

எவ்வளவு செலவானாலும் சரி, சென்னையில் நெளிந்தோடும் கூவம் நதியின் துர்நாற்றத்தைப் போக்கிச் சுத்தமான தண்ணீர் பாய விட்டு அதில் மோட்டார் படகுகள் விடப் போவதாக அமைச்சர் திரு கருணாநிதி அறிவிக்கிறார். இதைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ளாத சென்னைவாசிகள் இருக்க முடியாது. நதியின் அருகில் சென்றாலே மூக்கைப் பிடித்துக் கொண்டு ஓட வேண்டிய நிலைமைதான் இன்னும் நீடித்து வருகிறது. துர்நாற்றம் மறைந்தால் விரைந்து செல்லும் மோட்டார்ப் படகுகள் கூட விடத் தேவையில்லை. மெதுவாகச் செல்லும் உல்லாசப் படகுகள் விட்டாலே போதும்!



ஃ ஃ ஃ

''மொரார்ஜி தேசாய் என்றால் வரி என்றே பொருள் ஏற்பட்டுவிட்டது''—லோக சபையில் திரு நாஞ்சில் மனோகரன்.

பொருளை விளக்குவதென்றால், அதற்குப் பல வரிகள் வளருமே என்று இதோடு விட்டுவிடுகிறோம்.

ஃ ஃ ஃ





இஸ்ரேல் — அராபிய யுத்தம் பற்றிய செய்திகளைப் பத்திரிகையில் படித்துக் கொண்டிருந்த சிறுவன், தகப்பனாரைப் பார்த்து, ''அதிசயம்தான்! நாலே நாட்களிலே சண்டை முடிஞ்சுட்டுதாம் அப்பா!'' என்றான்.

தாயார் முன்வந்து, ''எந்தச் சண்டை?'' என்று கேட்டாள்.

பையன் குறுக்கிட்டு, ''உன்னைப் பற்றிப் பேசவில்லை அம்மா!'' என்றான்.








பஸ் வழிகண்ட பாரதம்

ஐம்பது நபர்கள் பஸ்ஸில் ஐயாயிரம் மைல்களுக்குமேல் சுற்றித் தாங்கள் அடைந்த அனுபவத்தை ஐந்து பக்கங்களில் வடித்துத்தருகிறார்கள்.

ஐந்தாறு நண்பர்களாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறிய யோசனை உருவாயிற்று. அதே யோசனையை மேலும் பத்துப் பதினைந்து நண்பர்களாகக் கூடி அலசிப் பார்த்தார்கள். அந்த யோசனையின் சாயம் கொஞ்சம்கூட வெளுக்காமல் அப்போதும் பளிச்சென்றே நின்றது. உடனே அவர்களில் சிலர், யுத்த முகாம்களில் முன்னேற்றத்தை ஆராயும் தளபதிகள் போல் தங்கள் முன் பெரிய பெரிய படங்களாக விரித்துப் போட்டுக் கொண்டு ஏதேதோ குறிக்க ஆரம்பித்தார்கள்.

அதன் விளைவு என்ன தெரியுமா? ஏழு பெண்மணிகள் உட்பட, ஐம்பது நபர்களாகச் சேர்ந்து ஒரு நாள் காலையில் பிரத்தியேக பஸ் ஒன்றை அமர்த்திக் கொண்டு உற்சாக







புகைப் படங்கள்:

1. பஞ்ச் மஹால் ஜெய்பூர். 2. ஜெய்ப்பூர் அரண்மனையில் ஓர் அலங்காரத் தூண். 3. கஜுராஹோ கோவில்.

மாகக் கிளம்பினார்கள். விஜயவாடா, ஹைதராபாத், சேவா கிராமம், ரீவா, காசி, ரிஷிகேசம் வழியாக டில்லியை அடைந்து, பிறகு ஜெய்ப்பூர், உதயபூர், உஜ்ஜயினி, அஜந்தா, ஹம்பி, பேலூர், பெங்களூர் வழியாகச் சென்னை வந்து சேர்ந்தார்கள். முப்பது நாட்களில் ஆந்திரா, மத்தியப் பிரதேஷ், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், மைசூர் முதலிய ஆறு ராஜ்யங்களில் ஐயாயிரம் மைல்களுக்கு மேலாகச் சுற்றிவிட்டுப் புறப்படுமுன் போட்ட திட்டத்திலிருந்து கொஞ்சமும் பிசகாமல் முதல் நாளில் இருந்த உற்சாகத்துடனேயே முப்பதாவது தினத்தில் சென்னைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

'பஸ் வழி கண்ட பாரதத்'தைப் பற்றி அவர்களில் சிலரிடம் பேசிக் கொண்டிருந்த போது சுவையான தகவல்கள் கிடைத்தன.

''நீங்க ஹைதராபாத் பக்கம் போனால் அவசியம் ஸாலர்ஜங் மியூசியத்தைப் பாருங்கள். குறிப்பாகக் குழந்தைகளுக்கு என்று ஒரு பெரும் பகுதி அங்கே இருக்கிறது. அந்தப் பகுதிக்குள் நம் குழந்தைகளை ஒரு தடவை அழைத்துக்கொண்டு போய்ச் சுற்றிக் காண்பித்து விட்டு வந்தால், அவர்களை உலகைச் சுற்றி அழைத்துக் கொண்டு போய்த் திரும்பிய பெருமிதம் நமக்கு ஏற்படலாம். பலவேறு நாடுகளின் குழந்தைகளைப் பற்றிய படங்கள், ஆங்காங்கு நடைமுறையில் இருக்கும் விளையாட்டுச் சாதனங்கள், பொம்மைகள் எல்லாம் அங்கு இருக்கின்றன.

கோல்கொண்டா கோட்டையிலே ஓர் அதிசயம், சுற்றிவர இருக்கும் கோட்டைச் சுவருக்கும், நடுவில் இருக்கும் உயர்ந்த வட்டவடிவமான மண்டபத்துக்கும் நடுவிலே, மூன்று மைல் இடைவெளி இருக்கும். ஆனாலும் அந்த மண்டபத்திலிருந்து கல்தான் கையை ஒருதடவை தட்டினால் கோட்டைச் சுவரிலிருக்கும் ஐந்து கதவுகளின் காப்பாளர்களும் கதவுகளை ஒரே நேரத்தில் சாத்தி விடுவார்கள். அந்தக் கைதட்டல் ஒலி அவ்வளவு தூரம் பரவ வேண்டும் என்பதற்காகவே அந்த மண்டபத்தின் வட்ட வடிவக் கூரையில் ஏதோ விசேஷ அமைப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தேச பிதா காந்திஜி வசித்த சேவாகிராமம் அமைதிக்கு உறைவிடமாக இருக்கிறது. ஆசிரமத்தைச் சுற்றி வேப்ப மரங்கள், மருதாணிச் செடிகளாலான காம்பௌண்டு

தான். வேறு கவர் கிடையாது. காந்திஜி உபயோகித்த ராட்டை, கைத்தடி, மூக்குக் கண்ணாடி, ஜபமாலை எல்லாவற்றையும் ஓர் அறையில் வைத்திருக்கிறார்கள். அந்த அறைக்குள் நுழைந்ததுமே உடம்பு புல்லரிக்கிறது. காந்திஜி முன்னாலே நிற்கிறோமோ என்ற பிரமை ஏற்படுகிறது.

ஜபல்பூர் அருகே உள்ள பளிங்குப் பாறைகள் பார்க்கப் பரவசமூட்டுகின்றன. அந்தப் பாறைகளை ஒட்டி ஓடும் நர்மதை ஆற்றின் ஆழம் அங்கேதான் அதிகமாம். அந்த இடத்தில் படகில் போய் வருவது மனத்துக்கு ரம்மியமாக இருக்கிறது. மற்ற இடங்களில் வழிகாட்டிகள் அந்த அந்த ஊர் சம்பந்தப்பட்ட ஸ்தல புராணங்களை விளக்குகிறார்கள். ஆனால் இங்கே வழிகாட்டிகள் விளக்குவதெல்லாம் சினிமா ஸ்தல புராணங்கள்தாம். 'போன வாரம் அந்த ஸ்டார் வந்திருந்தாங்க, போன மாசம் இந்த ஸ்டார் வந்திருந்தாங்க' என்றுதான் பேசுகிறார்கள். இந்த இடம் பல திரைப் படங்களுக்கு 'லொகேஷ'னாக விளங்குகிறது'' என்றார் **குமாரி ராஜேசுவரி.**

* * *

''**எ**ன்ன மிஸ்டர், **கல்யாணராமன்!** உங்களுடைய இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் மனதைக் கவர்ந்த அம்சங்கள் என்னென்ன?'' என்று கேட்டதற்கு அவர் ஆரம்பித்தார்.

''நாங்கள் பார்த்துக் கொண்டே போன நூற்றுக் கணக்கான ஊர்களிலே எனக்கு மிகவும் பிடித்தது ஹரித்துவார்தான். அந்த நகரத்தை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள் தெரியுமா? தெருக்கள் சுத்தம் செய்யும் தொழிலாளிகள் அடிக்கடி தங்கள் பணியைச் செய்கிறார்கள். குப்பை ஏதும் கையிலேயிருந்து நழுவினாலும் அதைக் கீழே விழுவதற்கு முன்னாலேயே அகற்றி விடும் வேகம் அவர்களுக்கு!

நதி, ஆழமாகவும், வேகமாகவும் தெளிவாகவும் குளுமையாகவும் ஓடுகிறது. ஆண்களும் பெண்களும் நதியில் நாள் முழுவதும் ஸ்நானம் செய்து கொண்டே இருக்கிறார்கள். நதிப்பக்கம் யாரும் காமிராவுடன் போகக் கூடாது என்ற கட்டுப்பாடு உண்டு. பிரயாணிகள் தங்க வசதியான சத்திரங்கள் நிறைய உண்டு. ஒவ்வொரு சத்திரத்தின் பின்பக்கச் சுவரும் நதிக் கரையின் மேலே அமைந்திருக்கிறது. அங்கிருந்தே தாராளமாகத் தண்ணீர் மொண்டு கொள்ளலாம்! நதியில் பிடித்துக் கொண்டு ஸ்நானம் செய்ய ஆங்காங்கு சங்கிலிகளைத் தொங்கவிட்டிருக்கிறார்கள். சங்கிலிகளைப் பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்வதுதான் நல்லது. எங்கள் பஸ் கண்டக்டர் சங்கிலிப் பிடியைக் கை நழுவ விட்டு விட்டுத் திணறிவிட்டார். நல்ல வேளையாக, எங்கள் குழுவில் ஸ்ரீமதி கோவிந்தம்மாள், ஈரத் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தவர், கண்டக்டர் தண்ணீரில் தவிப்பதைப் பார்த்து ஓடி வந்து அவர் கைக்கு எட்டுமாறு சங்கிலியைப் போட்டார்.

ஹரித்துவார் நூற்றுக்கு நூறு சைவ ஊர். அதாவது அங்கு அசைவ உணவு கிடையாது! கிடைக்காது! இங்கே உள்ள மெட்ராஸ் கபேயில் ஒன்னே முக்கால் ரூபாய்க்கு பஸ்டு க்ளாஸ் அரிசிச் சாதத்துடன் சாப்பாடு போடுகிறார்கள். இந்த ஓட்டல் மசாலா தோசைக்கு வடக்கத்திக்காரர்களிடையே மகா கிராக்கி!

அடுத்தபடியாக என் மனத்தை மிகவும் கவர்ந்த இடம் மேவாரிலுள்ள சித்தூர் ராணியின் கோட்டை. இந்தக் கோட்டையைச் சுற்றிக் காண்பிக்க வழிகாட்டியாக வந்த கன்யாலால் சர்மா என்பவர், உணர்ச்சி பொங்க ஒவ்வோர் இடமாக விளக்கிக் கொண்டு வந்தார். அலாவுதீன், ராணி பத்மினியின் பிம்பத்தைப் பார்த்த கண்ணாடி என்று ஒரு கண்ணாடியை வைத்திருக்கிறார்கள். அந்தக் கண்ணாடி முன் சரிவான பாதை ஒன்று குளக்கரை வரை போகிறது. அந்தக் கரையில் நின்றால் நிற்பவர் பிம்பத்தைக் கண்ணாடியில் அதன் அருகே நிற்பவர் பார்க்கலாம். ஆனால் அங்கிருந்து கீழே நிற்பவரை நேரடியாகப் பார்க்க முடியாது. இப்படித்தான் ராணி பத்மினியின் உருவத்தை அலாவுதீன் பார்த்தானாம்.

அந்த நாட்களில் கண்ணாடி நடைமுறையில் வந்திருக்க முடியாதே என்ற சந்தேகத்துக்குரிய சர்ச்சை எழுந்தபோது வழிகாட்டி அந்த நாட்களில் மெருகு ஏற்றிய உலோகம் உபயோகப்பட்டிருக்கலாம் என்றாரே, பார்க்கலாம்!

சித்தூர்க் கோட்டையின் உள்ளே, பாதைகள் வளைந்து வளைந்து செல்கின்றன. எதிரிகள் யாரும் திடீரென்று உள்ளே நுழைந்துவிட்டால் அவர்களை ஒளிந்திருந்து தாக்க இந்த ஏற்பாடாம்!''

திரு கல்யாணராமனைத் தொடர்ந்து நண்பர் **திருவரங்கம்** சில ருசிகரமான தகவல்களைக் கொடுத்தார்.

''உஜ்ஜயினியிலிருந்து ஔரங்கபாத் வரும் வழியிலே 'மாண்டு' என்னும் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே இடிந்துபோன கோட்டை ஒன்று இருக்கிறது. சிற்பங்களும் உண்டு. நம் பக்கத்துக் கயத்தார் கட்டபொம்மன் போலே அங்கே பாஜ்பகதூர்னு ஒரு ராஜா இருந்தானாம். பாஜ் பகதூர், அவன் காதலி ரூப்மதி பற்றிய சரித்திரத்தைப் பெரிய காதல் காவியமாகவே பாடுகிறார்கள்.

மாண்டுவில் நாங்கள் ஓர் இரவு தங்க நேரிட்டது. சிறிய கிராமம் போல்தான் அது. வெயிற்காலமாதலால் நாங்கள் எல்லோருமே எங்களுக்கான ஜாகை முன் இருந்த வெளியில் படுத்துக் கொண்டோம். அந்தக் கிராமத்தில் ஓரளவு புலி நடமாட்டம் உண்டாம்! புலி, புலி வேட்டை சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு அப்படியே கண்ணயர்ந்தோம். நள்ளிரவு வேளையில் ஒரு நண்பர் 'புலி! புலி!' என்று அலறிக்கொண்டே எழுந்திருந்தார். மற்றவர்களும் திடுக்கிட்டு எழுந்து விட்டார்கள். அப்புறம்தான் அலறி எழுந்த நண்பர் முகத்தருகில் ஒரு முரட்டு நாய்தான் நின்றது என்று தெரிய வந்தது. நாங்கள் போட்ட கூப்பாட்டில் அது ஓடியே விட்டது!

ஹம்பியில் உள்ள சிற்பங்களைப் பார்த்து விட்டு, ஹாஸ்பெட்டிலிருந்து பேலூருக்குக் கிளம்பினோம். அன்றைக்கு ஒரு நாள்தான் இந்த முப்பது நாள் பிரயாணத்தில் எங்கள்

திட்டத்தைச் சரிவரக் கடைப்பிடிக்க இரவு முழுவதும் பிரயாணம் செய்யத் தயாரானோம். நள்ளிரவில் பெல்லாரி மாவட்டத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்த எங்கள் பஸ் ஒரு குக்கிராமத்தில் நின்றது. அந்த ஊருக்குப் பெயர் குட்லிகே என்று அப்புறம் தெரிந்து கொண்டோம். டிரைவர் காரணமில்லாமல் நிறுத்தவில்லை. ஓர் அசல் கிராமக் கல்யாண ஊர்வலம் பாதையில் வந்து கொண்டிருந்தது. காடிலாக் காரிலும் பாண்டியாக் ரேரிலும் பிரம்மாண்டமான ஊர்வலங்களைப் பட்டினங்களில் பார்த்து அனுபவப் பட்டிருக்கும் எங்களுக்கு அந்த நள்ளிரவுத் திருமண ஊர்வலம் அதிகப் பிரமிப்பை அளித்தது. நல்ல பழைய பாரமேற்றும் திறந்த கட்டை வண்டி. வண்டியின் மேல் வலைவாகப் பல்லக்கு மாதிரிக் கட்டியிருந்தார்கள். வண்டி மேல் மாப்பிள்ளையும் பெண்ணும்! வண்டி முன்னும் பின்னும் உற்றார் உறவினர். இந்த மாதிரி ஊர்வலம் சாதாரணமாகக் காணக் கிடைக்கக் கூடியதில்லையே! ஆறு புதுத் தம்பதிகளல்லவா இப்படி ஒரே நேரத்தில் ஊர்வலமாக வந்தார்கள்!''

* * *

''வடக்கே போகப் போக வெற்றிலை கிடைப்பது கஷ்டம் என்று பயமுறுத்தினார்கள். எனக்கோ வெற்றிலை புகையிலையை மென்று கொண்டேயிருக்க வேண்டும். புறப்படும்போது கொஞ்சம் தயக்கமாக இருந்தது. ஆனால் நான் இப்படி நடுங்கியிருக்க வேண்டாம்! 'தம்பாகூ பான்' என்று கேட்டால் எல்லா ஊர்களிலுமே ஒரு மடக்கு மடக்கிக் கொடுத்து விடுகிறார்கள். வெற்றிலைதான், பார்க்க ஒரு மாதிரி இருந்தது!

சாப்பாட்டுக்குச் சில இடங்களிலே கொஞ்சம் சிரமம் இருந்தது. சில இடங்களிலே அரிசி வாங்கிக் கொடுத்துத் தனியாகச் சாதம் வடிக்கச் சொல்லிச் சாப்பிட்டோம். பன்னா என்னும் இடத்தில், இதற்குக்கூட வசதி இல்லை. வெள்ளரிக்காயைத் தின்று ஒரு வேளையைக் கழித்தோம்.

ஜபல்பூரிலிருந்து ரீவாவுக்குப் போகிற வழியிலே கஜுராஹோ என்கிற ஊர் இருக்கிறது. அங்குள்ள சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அந்த ஊரில் தயிர் நிறையக் கிடைக்குமாம்! கட்டித் தயிர்! அளவும் ஏகப்பட்டது. ஆவலாகக் குடிக்கக் கையில் எடுத்தபோது 'ராபனு'ன்னு ஒரு விஷயத்தைச் சொல்லி வைத்தான். அந்தத் தயிருக்கான பாலிலே நாலிலேமூன்று பங்கு ஆட்டுப் பாலாம்! மீதிதான் எருமைப் பாலாம்! அப்புறம் அந்தத் தயிரைக் குடிக்கப் பிடிக்கலியே!

ஜபல்பூரை நெருங்கும்போது நள்ளிரவுக்கு மேலாகி விட்டது. அதற்கு மேல் எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாகையைத் தேடிப் போக முடியாது என்ற பயத்தில் ஊருக்கு நான்கு மைல் தூரத்தில் வழியில் உள்ள பெரிய பெட்ரோல் பங்கில் படுக்க இடம் பிடித்தோம். பிரும்மானந்தமாகத் தூங்கினோம்.

ஆனால் ஜெய்ப்பூரில் எங்களுக்கு ஏற்பாடு செய்திருந்த இடத்தின் மொட்டை மாடியில் நிம்மதியாகப் படுத்துத் தூங்க ஆரம்பித்தோம். ஆனால் அந்த ஊர் மயில்களுக்கு நாங்கள் தூங்குவது பிடிக்கவில்லை போலும்! கத்த ஆரம்பித்தன. ஒரு மயில் குரல் கொடுத்தால் சில விநாடி இடைவெளி விட்டு மற்றொரு மயில் எங்கிருந்தோ பதில் குரல் கொடுக்கும். இரண்டுக்கும் சேர்த்து மூன்றாவது எங்கிருந்தாவது அலறும். அவ்வளவுதான். ஒரே மயில் குரல் ஆர்க்கெஸ்டிரா! அப்புறம் தூக்கம் எங்கே வரும்?

ஜெய்ப்பூரிலே எது மலிவோ கிராக்கியோ தெரியாது. மயில் நிச்சயம் மலிவான விஷயம். எங்கே பார்த்தாலும் மயில்கள் உலாவுகின்றன. இப்படிச் சொன்னவர் நண்பர் எஸ். **பாலசுப்பிரமணியம்.**

நண்பர் **வேங்கடராமன்** என்ன சொன்னார் தெரியுமா?

''வடக்கே போகப் போக, சாப்பாட்டு விஷயத்தில், முறையில் வித்தியாசங்களைக் காணுவது போல் தெய்வ வழிபாட்டு விஷயத்திலும் நிறைய மாறுதல்களைப் பார்க்க முடிகிறது. கோவில்கள் எல்லாமே அநேகமாகப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் நாமே மூலஸ்தானம் வரை போய் ஆராதனை செய்து கொள்ளலாம்.

ஆஜ்மீரிலிருந்து உதயபூர் போகும் பாதையில் புஷ்கர் என்ற ஊர் இருக்கிறது. இந்த ஒரே ஊரில்தான், வடநாட்டில் பிரும்மா



ஏ. எஸ். கல்யாணராமன்

குமாரி ராஜேஸ்வரி





ஸ்ரீமதி கோவிந்தம்மாள்

மந்திரிகள் உலகம்



''என்னுடைய காலை உணவு, பகல் உணவு, இரவு போஜனம் ஆகியவையெல்லாம் தங்கு தடங்கலின்றி அவ்வப்போது, எனக்குத் தயாராகக் காத்திருக்கும் என்ற உறுதிமொழி இப்போதே கிடைத்தாலன்றி என்னால் பஞ்சப் பிரதேசங்களில் சுற்றுப் பயணம் செய்யப் போக முடியாது!''

வின் சிலைக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் பிரும்மாவுக்குக் கோவில் உள்ள ஊர்களில் இதுவும் ஒன்று. இந்த ஊரில் மற்றொரு விசேஷம் என்னவென்றால், அசல் தமிழ் நாட்டுப் பாணியில் இங்கே ரங்கநாதஸ்வாமியின் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். காஞ்சிபுரத்திலிருந்து வந்திருக்கும் அர்ச்சகர் பூஜைகளைக் கவனித்துக் கொள்ளுகிறார்.

பீஜப்பூர் பிராந்தியத்தில் பாதாமி என்ற ஊர் இருக்கிறது. இங்குள்ள குகைச் சிற்பங்கள் பிரசித்தமடைந்திருப்பது போல் இங்குள்ள 'வனசங்கரி' கோயில் குளமும் புகழ் வாய்ந்ததாம். மக்கட் பேறு கிடைக்காத தாய்மார்கள், குழந்தைகள் வேண்டி இந்தக் கோயிலுக்குப் பிரார்த்தனை செய்து கொள்ளுவார்கள். குழந்தை பிறந்தவுடன், அதை ஒரு பெரிய வாழை இலையில் வைத்து அந்த இலையைக் குளத்தில் மிதக்க விடுவார்கள். குழந்தையைத் தாங்கிய இலை குளத்தை ஒரு சுற்றுச் சுற்றி வர வேண்டும். சில சமயங்களில் விபரீதமாகக் குழந்தை மூழ்கிவிடுமாம். அப்பொழுது தெய்வத்தின் அருள் இல்லை என்று பெற்றோர்கள் தங்கள் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்வார்கள். இப்போது இந்த வழக்கத்தை அதிகாரபூர்வமாகத் தடுத்து விபத்துக்கள் ஏற்படாமல் கவனித்துக் கொள்ளுகிறார்கள். ஆனாலும் பிரார்த்தனை செலுத்துபவர்கள், சம்பிரதாயத்துக்காகக் குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு வாழை இலையை மிதக்க விடுகிறார்களாம்!''

பக்தி வழியிலேயே பேசிய நண்பர் வேங்கடராமனைத் தொடர்ந்து **ஸ்ரீமதி கோவிந்தம்மாள்** அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள மாதர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

''எல்லா இடங்களிலுமே எங்களிடம் அன்பாகப் பழகினார்கள். மொழி வித்தியாசம் அவ்வளவாகத் தொந்தரவு கொடுக்கவில்லை. சமிக்ஞை மூலம் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டோம். அந்தப் பக்கத்துப் பெண்களிடம் தங்க ஆபரணங்களையே பார்க்க முடியாது. ஆனாலும் அவர்கள் நிறைய ஆபரணங்கள் அணிந்து கொள்கிறார்கள். அத்தனையும் வெள்ளி.

''உதயப்பூர் நடுவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் செயற்கை ஏரியும் அதன் நடுவே உள்ள மாளிகைகளும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. அந்த மாளிகை ஒன்றை நவீன ஹோட்டலாக மாற்றியிருக்கிறார்கள். அதிலிருக்கும் 'குஷ்மகால்' என்ற ஓர் அறைக்குத் தினசரி வாடகை இருநூற்றி ஐம்பது ரூபாய்களாம்! ஸ்ரீமதி கென்னடி இந்தியாவுக்கு வந்தபோது இங்கு தங்கியிருந்தார் என்ற காரணத்தினால், இந்த ஹோட்டலின் ஸ்தல புராண மதிப்பு உயர்ந்து விட்டது!

பீஜப்பூர் பகுதியில் வரும்போது ஒரு பிரும்மாண்டமான பீரங்கி ஒன்றைப் பார்த்தோம். அந்தப் பீரங்கியைச் சுடுபவன், பீரங்கி வெடிக்கும் வேகத்தில் பின்நோக்கித் தூக்கி எறியப்படுவானாம். பீரங்கியின் அனல் பின்னாலும் அடிக்கும். அந்த ஆசாமி உயிர் பிழைக்க வேண்டுமானால் அவன் குளுமையான ஏதாவது திரவத்தில் விழுந்தாக வேண்டும். இதற்காகவே அந்த பீரங்கிக்குப் பின்னால் சற்றுத் தள்ளி ஒரு பெரிய பள்ளம் தோண்டி வைத்து அந்த நாட்களில் அதில் தயிரைவிட்டு நிரப்பி விருப்பார்களாம். சரித்திரத்தில் ஒரே ஒரு தடவைதான் அந்தப் பீரங்கி உபயோகப்பட்டதற்குச் சான்று இருக்கிறது.''

''டில்லியிலே மாத்திரம்தான் சார், எங்களுக்கு ஓரளவு ஜாகைக் குழப்பம் ஏற்பட்டுத் தவித்துப் போனோம். அரசியல் குழப்பம் நிறைந்த தலைநகரல்லவா? 'வாங்கறதெல்லாம் டில்லியிலே வாங்கணும்' என்று போரும்போது தீர்மானித்துக் கொண்டு போனோம். ஆனால் எங்களுக்கு ஒன்றையும் வாங்க அவகாசம் இல்லாத நிலையும், அவசரமும் அங்கேதான் ஏற்பட்டது. அதையும் நாங்கள் ஓரளவு ரசித்தோம்! உத்தியோகத்திலிருந்து ஓய்வு கிடைத்ததும், ஹரித்துவாரத்திலேயே போய் ஆனந்தமாக உட்கார்ந்து விடலாம் என்று எனக்கு இப்போது ஆசை!'' என்று முத்தாய்ப்பு வைத்தார் **சீனிவாசன்**.

முப்பது நாட்களில் முப்பது வருட அனுபவங்களைச் சேர்த்து வந்திருக்கும் அன்பர்களல்லவா இவர்கள்! **—கோமதி சுவாமிநாதன்**

நாலும் தெரிய ஞாலம் சுற்று

□ ஸ்ரீமதி லீலா சிவமணிநாதன்
□ போகாத ஊருக்கு வழி சொல்ல
□ வில்லை; போகிற ஊருக்குத்
□ தான் வழி சொல்லுகிறார்,
□ பிரயாணிகளுக்குப் பயன் தரும்
□ முறையில். ★

''யுவான் சுவாங் என்னும் சீனப் பிரயாணி புத்த மத நூல்களைச் சேகரிப்பதற்காகவும் பௌத்த புண்ணிய தலங்களைத் தரிசிப்பதற்காகவும் இந்தியாவுக்கு வந்தார். ஹர்ஷவர்த்தனரின் ஆட்சி முறையைக் கண்டு அகமகிழ்ந்தார். பதினேந்து ஆண்டுகளுக்கு மேல் இந்தியாவில் தங்கிப் பல இடங்களுக்கு யாத்திரை சென்று, மக்களின் நடை, உடை, பாவனைகளை நேரில் கண்டார். பாரதத்தின் உயர்ந்த பண்புகள் அவர் மனத்தில் நிலையான இடம் பெற்றன.''

ஆரம்பப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சரித்திரப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு இப்படித்தான் உருப்போட்டாள் அந்தச் சிறுமி. ஆனால், கல்லூரிப் படிப்புக்காகப் பங்களூர் மகாராணி கல்லூரியில் சேர்ந்தபொழுது சரித்திரத்தை மறந்து, பூகோளத்தை மறந்து, தத்துவம், சமூக விஞ்ஞானம், ஆங்கில இலக்கியம்



ஸ்ரீமதி லீலா சிவமணிநாதன்

இவற்றைச் சிறப்பாகப் பயின்று பி. ஏ. பட்டம் பெற்றாள். அதைத் தொடர்ந்து ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலம் போதனா முறையில் புதுமையைக் கையாளும் ஆரம்பப் பள்ளி ஒன்றில் ஆசிரியையாகச் சேர்ந்தாள். தலைமை ஆசிரியையாகவும் பணியாற்றினாள்.

ஆனால் 1954ஆம் ஆண்டு வரலாற்றுப் பெருமையும் பூகோள அறிவும் பின்னிப் பிணைந்த ஒரு தொழில் இவளைக் கவர்ந்தது. பயணிகள் தகவல் நிலையத்தின் உதவி டைரக்டராகப் பங்களூரில் பதவி ஏற்றாள்.

''ஆமாம், உங்களுக்கு இந்தத் தொழிலில் நாட்டம் செல்வானேன்?'' என்ற கேள்விக்கு இவர் கூறிய பதில், ''என் வாழ்வோடும் ஒரு வரலாறு பின்னிப் பிணைந்திருக்கிறது!'' என்பதுதான்.

இவர் புதிர் போட்டுப் புதிரை விடுவிக்கும் அழகைப் பாருங்கள்:

''என் பெயர் லீலா. என் தந்தையின் பெயர் பிங்களே. அஞ்சல் துறையில் பணியாற்றியவர். மராட்டிய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட எங்களுக்குத் தாயகமாக விளங்குவது தமிழ் மண்தான். மைசூர் பரோடா சமஸ்தானங்களில் திவானாகப் பணியாற்றிப் புகழ் பெற்ற மாதவ ராவ் எங்கள் முன்னோர்களில் ஒருவர் என்று கூறிக் கொள்ளும் பெருமை எங்கள் குடும்பத்துக்கு உண்டு. தமிழும் மராட்டியும் தாய் மொழி என்றால் பங்களூர்ப் படிப்பு எனக்குக் கன்னடத்தைக் கற்றுத் தந்தது. என்னோடு பிறந்தவர்கள் இரு சகோதரிகள்.

''என் வாழ்க்கைத் துணைவர் ஸ்ரீ சிவமணிநாதன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எங்கள் குடும்பத்துக்கு எப்படித் தமிழ் மண்ணோ, அப்படி அவர் குடும்பத்துக்கு மராட்டிய மண். ஆம், பூனாவில் பல ஆண்டுகள் அவரது குடும்பம் வாழ்ந்திருக்கிறது. நாங்கள் சமைத்துக் கொண்ட இல்லறப் பூங்காவில் இரு மலர்கள். மீனா, யமுனா என்று பெயரிட்டிருக்கிறோம்.

''திருமணம் ஆன பின் 1956ம் ஆண்டில் சென்னைக்கு என் வேலையை மாற்றிக்கொண்டேன். இந்த உத்தியோகம் எனக்கு ஓர் அரிய வாய்ப்பை அளித்தது. அமெரிக்க நாட்டுக்குச் சென்று தகவல் நிலைய உதவி டைரக்டராகப் பணியாற்றினேன். 1962 முதல் 1966 வரை நியூயார்க் நகரில் குடும்ப வாழ்க்கை நடத்தினோம். அப்பொழுது அங்குள்ள பல குடும்பங்களுடன் பழகவும், அவர்களுடைய வாழ்க்கை முறை, கலாசாரங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளவும் முடிந்தது. அதோடு நம் நாட்டைப் பற்றியும் அவர்களுக்குப் பல தகவல்கள் தர முடிந்தது. அறியாப் பருவத்தில் உருப்போட்டுப் படித்த சரித்திர நூல்கள் கை கொடுத்து உதவின. இந்த ஆண்டு அகில உலகப் பயணிகள் ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, எத்தனையோ வெளி நாட்டவர்கள் நம் நாட்டின் புராதனப் பெருமையைக் கண்டு களித்துச் செல்ல

வருகிறார்கள். இதில் அணியின் பங்கென என் பணியும் இடம்பெறக் கூடும் அல்லவா?''

''பாரதத்துக்கு வரும் அயல் நாட்டவரை வரவேற்றபின் உங்கள் பணி என்ன?''

''பரந்த இந்தப் பாரத பூமியிலே பல மொழிகள் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். மொழியால் பிரிந்திருந்தாலும் கலாசார—பூகோள உறவால் நாங்கள் பிரிந்திருக்கவில்லை என்பதைக் காட்டுவதுபோலக் காசியையும் ராமேசுவரத்தையும் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். துவாரகையையும் பூரியையும் பிணைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாழ்க்கையில் ஒரு முறையாவது பாரதத்தின் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் சென்று நீராடி மகிழ வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எத்தனை எத்தனை க்ஷேத்திரங்கள் உருவாகியிருக்கின்றன! இங்குள்ள சிற்பச் சித்திரங்கள் கலைச் சிகரங்களாகக் காட்சி தருகின்றன! இவற்றையெல்லாம் அந்நிய நாட்டினரும் கண்டு களிக்கும்படி செய்வதுதான் எங்கள் பணி.''

''அந்நிய நாட்டினர் நம் நாட்டுச் சிற்பங்களையும், சித்திரங்களையும் கோயில்களையும் குளங்களையும் கண்டு ரசிக்கிறார்களா?''

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நம் நாட்டின் கலை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் அவர்களிடையே நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. தாஜ்மஹாலைத் தவிர வேறு எதையும் ஒரு காலத்தில் அறியாதிருந்தவர்கள் இன்று மாமல்லபுரத்தையும் மதுரை மீனாட்சிகோயிலையும் கண்டு மகிழக் காத்திருக்கிறார்கள்.''

''இவையெல்லாம் மதச் சார்பு கொண்டவைகளாயிற்றே.''

''மக்காவும் மதீனாவும், பாலஸ்தீனமும் ஜெருசலமும் கூட மதச் சார்பில்தான் உருவாகியிருக்கின்றன. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்பொழுது இந்தப் புனித யாத்திரைகள் மதத்தோடு தொடர்பு கொண்டவையாகத் தோன்றினாலும், ஊன்றிக் கவனித்தால் மனித மனம் மக்கள் சமுதாயத்துடன் கலந்து பழகவும் இந்த யாத்திரைத் தலங்கள் உதவி புரிகின்றன என்பது தெளிவாக விளங்கும். ஒரு நாட்டை மற்ற நாடு புரிந்து கொள்வதற்காக ஆதி காலம் தொட்டே எத்தனையோ யாத்திரிகர்கள் புறப்பட்டிருக்கிறார்கள். நம் நாட்டின் பழக்க வழக்கங்களையும் அருமை பெருமைகளையும் ஹுவான் சுவாங், பாஹியான், மெகாஸ்தனிஸ் போன்ற யாத்திரிகர்கள் படம் பிடித்தாற்போல் எழுதி வைத்திருப்பதிலிருந்தே இது விளங்கவில்லையா?''

''அயல்நாட்டினரைப் போல் நம் நாட்டினரும் இப்படி ஒரு பயணத்தை மேற்கொண்டதுண்டா?''

''உண்டு. சரித்திர ஏடுகள் பல, வேண்டிய சான்றுகள் பகருகின்றன. 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று சொன்னவன் நம் தமிழன். சொன்னதைச் செய்தும் காட்டியிருக்கிறான் அவன். 'திரவியம்' என்னும் சொல்லுக்குக் குறுகிய பொருள் கொள்ளாமல் பார்த்தால், கடல் தாண்டிச் சென்று அவன் நமக்குச் சேமித்து வைத்திருக்கும் திரவியத்தின் மதிப்பை எடை போட முடியாது. நம் நாட்டவர் அந்தக் காலத்தில் மேற்கொண்ட யாத்திரை புனித யாத்திரையோடு நல்லெண்ணத் தூதுகோஷ்டியாகவும் அமைந்திருக்கிறது. அசோக சக்கரவர்த்தி தமது மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பி வைத்ததும் விவேகானந்தர் அமெரிக்க மக்களைச் சகோதரர்களாக்கி உரையாற்றியதும் எதற்காக என்கிறீர்கள்?''

''மெய்தான். பயணங்கள் பல நன்மைகளைப் பயக்கின்றன என்பது மெய்தான். ஒருவர் எந்த நாட்டினராயினும் எந்த மதத்தினராயினும் பழகப் பழக சௌஜன்ய பாவத்தைப் பெறுகிறார்கள். பிறரது சுக துக்கங்களைத் தங்களுடையனவாகப் பாவித்துத் தங்களால் இயன்றவரை உதவ முன் வருகிறார்கள். சண்டை சச்சரவைத் தடுத்துச் சமாதானம் நிலவச் செய்யப் பிரயாணம் ஒரு சாதனம்தான். ஆமாம், இந்த 1967ம் ஆண்டை அகில உலகப் பயணிகள் ஆண்டாகச் சொல்கிறார்களே, அந்நிய நாட்டினர்கள் நம் நாட்டை நாடி வர என்ன என்ன வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள்?''

''விசா — பர்மிட் பெறும் விஷயத்தில் விதிகளைத் தளர்த்தி யிருக்கிறார்கள். 'சிவப்பு நாடா'வுக்கு அதிக வேலை கொடுக்காமல் உடனுக்குடன் அனுமதி வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரு பிரயாணி முன்னறிவிப்பு ஏதுமின்றி ஏழு நாட்கள் வரை ஓரிடத்தில் தங்கலாம். முன்பெல்லாம் எழுபத்திரண்டு மணி நேரத்துக்கு மேல் பிரயாணத்தை ஒத்திப் போடக் கூடாது. வெளி நாட்டினருக்கு ரயில்வே நிர்வாகம் பிரயாணச் சலுகை கூட வழங்குகிறது.''

இந்தியாவைப் பற்றிய டெலிவிஷன் நிகழ்ச்சியில்



''இதனால் நமக்கு அந்நியச் செலாவணி பெருகுமா?''

''பிரயாணத்திலிருந்து பொருளாதாரத்துக்குத் தாவுகிறீர்களே! — நம் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு அவர்கள் தம்மோடு எடுத்துச் செல்லும் நல்லெண்ணமேகூட அந்நியச் செலாவணிப் பெருக்கம்தானே?''

''பொருளாதார விஷயத்தில் உங்கள் வாயைக் கிளறுவதில் பொருள் இல்லை. அதனால்

இதைச் சொல்லுங்கள், நீங்கள் பல வெளி நாட்டவர்களுடன் பழகி யிருப்பீர்களே, அவர்கள் எத்தகையவர்கள்?''

''பொதுவான கேள்வி. எனவே பொதுப் படையாகவே பதிலளிக்கிறேன். நான் கண்ட வரை அமெரிக்கர்கள் எதையும் பார்த்த மாத்திரத்திலேயே மகிழ்கிறவர்கள். தாங்கள் கண்டு மகிழ்வதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளத் தயங்க மாட்டார்கள். ஆங்கிலேயர்கள் ஆள்-அழுக்கர்கள். ஒன்றைக் கண்டு மகிழ்ந்தார்களா, இல்லையா என்பதை ஒருவராலும் சட்டென்று எடை போட முடியாது. ஜெர்மானியர்களும் பிரஞ்சுக் காரர்களும் எதையும் கருத்தாகக் கவனிப்பவர்கள். பார்க்கப் போகும் ஓரிடத்தைப் பார்க்கப் போவதற்கு முன்பே அந்த இடத்தைப் பற்றி நன்றாகப் படித்து அலசி ஆராய்ந்து வைத்திருப்பார்கள். மாமல்லபுரத்துச் சிற்பங்களில் நாம் ஒன்றைக் காட்ட மறந்து விட்டால் அந்தச் சிற்பத்தை நீங்கள் காட்டவில்லையே, அது எங்கே இருக்கிறது என்று நம்மையே கேட்டு மடக்கும் அளவுக்கு விஷயமறிந்தவர்களா யிருப்பார்கள்!''

''பேஷ்! நீங்களும் ஆளை நன்றாக எடை போடுபவராய்த்தான் இருப்பீர்கள் போலிருக்கிறது! — அமெரிக்காவில் நீங்கள் இருந்திருக்கிறீர்களே, அந்த நாட்டைப் பற்றி உங்கள் அபிப்பிராயம்...?''

''நல்ல பணக்கார நாடு. வசதிகள் ஏராளம். இந்தப் பணத்துக்கும் சௌகரியத்துக்கும் காரணம் உழைப்பு. ஆண் — பெண் அடங்கலாக வேலை செய்கிறார்கள். கணவன் மேற்படிப்புப் படிக்கும் காலத்தில் மனைவி குடும்பப் பொறுப்பை ஏற்று உழைக்கிறாள். கணவனின் படிப்புக்கும் கைகொடுத்து உதவுகிறாள். தக்க பிராயத்தில் தாய் தந்தையரே தங்கள் குழந்தைகளைத் தன் காலூன்றி நிற்க வேண்டும் என்பதற்காகப் பிரித்து விட்டு விடுகிறார்கள். நம் நாட்டைப் போல் ஒருவருக்கு ஒருவர் பாரமாக இருப்பதில்லை. இங்கு பல குடும்பங்களில் சம்பாதிப்பவன் ஒருவன், சாப்பிடுபவர்கள் பத்துப் பேர் என்ற நிலை இருக்கிறதல்லவா? அதை அங்கே காண முடியாது. ஆட்சி முறையும் அதற்கேற்ப அமைந்திருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை முறையைக் கண்டு நாம் அதிசயப்படுகிறோம் என்றால், நம் வாழ்க்கை முறையைக் கண்டு அவர்களும் வியக்கின்றனர், எப்படித்தான் நீங்கள் இத்தனை குடும்பப் பற்றோடு இருக்கிறீர்களோ என்று!''

''எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சை என்கிற கதைதான். அவர் அவர் பாடு தனித் தனி என்று இருந்து விட்டால் குடும்பப் பூசல் என்று ஒன்று இராதல்லவா? அப்பொழுது பாசமும் பற்றும் அதிகமாகத்தானே இருக்கும்?—அது சரி, அந்த நாட்டுப் பெண்கள் எப்படி...?''

''நம் நாட்டுப் பெண்கள் எப்படியோ, அப்படித்தான். ஒருத்தி மற்றொருத்தியின் நகை நட்டையும் ஆடை அணியையும் இங்கு ரசிப்பது போலவே அங்கும் ரசிக்கிறார்கள். நம் நாட்டுப் பெண்கள் மூக்குத்தி அணிந்திருப்பதைக் கண்டு அவர்கள் மூக்கின் மேல் விரலை வைக்கிறார்கள். எப்படி உங்



அமெரிக்காவில் பிறநாட்டுப் பிரயாண அலுவலகச் சிப்பந்திகளோடு

களால் மூக்குக் குத்திக் கொள்ள முடிகிறது? எதற்காக இந்த மூக்குத்தி அணிகிறீர்கள்? இப்படியெல்லாம் கேள்வி கேட்டுத் துளைத்தெடுக்கிறார்கள். நாம் சொல்லும் காரணங்களைக் கேட்ட பின் அவர்களுக்கும் மூக்குத்தி அணிய ஆசை ஏற்படுகிறது. நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளத் தோன்றுகிறது. என்ன முயன்றும் நம் நாட்டுப் பெண்மணிகளைப் போல் புடவை உடுத்த வராததால், 'ரெடி மேட்' புடவை தயாரிக்க வழி செய்து கொண்டு விட்டார்கள். கவுன் போலப் போட்டுக் கொண்டாலும் புடவை அணிந்திருப்பது போலவே தோன்றும்.''

''பேஷ்! அதே நாகரிகம் நம் நாட்டுப் பெண்களையும் பிடித்துக் கொண்டால்...?''

''ஆச்சரியப்படுவதற்கில்லைதான்!''

''வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் இதுபோல எந்த விஷயத்தையும் துருவித் துருவிக் கேட்பார்களே, அவர்களுக்கு விளக்கிக் கூற நீங்கள் வழிகாட்டிகளைப் பயிற்றுவித்திருக்கிறீர்களா?''

''பட்டப் படிப்புப் பெற்றவர்களுக்கு இத்துறையில் ஒரு பயிற்சி நிலையம் நடத்துகிறோம். பிரபல அறிஞர்களைக் கொண்டு பயன்படக் கூடிய சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறோம். பிரயாணிகளுடன் பழக வேண்டிய முறைகளைப் போதிக்கிறோம். இப்பயிற்சி மூன்று மாதங்கள் வரை தருகிறோம்.''

''நல்ல காரியம்தான் செய்கிறீர்கள். இத்தனை நேரமும் உங்களுடன் பேசிக்கொண்டிருந்ததில் எங்களுக்கு நாலு தேசங்களைச் சுற்றி வந்தது போன்ற உணர்வும் மகிழ்வும் ஏற்படுகின்றன!''

''நல்ல வேளை! என் பேச்சைக் கேட்டு நாலு தேசங்களைச் சுற்றி வந்த களைப்பு ஏற்பட்டு விட்டது என்று சொல்லாமல் விட்டீர்களே!''


— ரா. வீ.

சூரன் பீட்டர் 11 வால்ட் டிஸ்னி




பீட்டருக்கு ஒரே ஆத்திரம். குட்டித் தேவதை தான் குறிப்பிட்ட கெடுவுக்குள் அங்கு வந்ததுமல்லாமல் தன்னிடமிருந்து வெண்டியின் பரிசையுமல்லவா பறித்துத் தூர எறிந்து விட்டது. டிங்கர் பெல் தன் உயிரைக் காப்பதற்கே அப்படி அந்தப் பெட்டியைப் பறித்துத் தூர எறிந்தது என்பதைச் சற்றைக்கெல்லாம் பீட்டர் உணரும்படியானதொரு நிகழ்ச்சி நடந்தது.

தன் தோழன் பீட்டரிடமிருந்து டிங்கர் அந்த வெடி குண்டுப் பெட்டியைப் பறித்துத் தூர எறிந்ததும், அது வெடிக்க வேண்டிய வேளை வந்து விட்டது. வெடித்தும் விட்டது. அந்தத் தீவே குலுங்கும் ஓசையுடன் அது பயங்கரமாக வெடித்தது.






















ORIENT
ALL-PURPOSE

வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்



கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 24

நள்ளிரவில் கலவரம்

மீண்டும் ஒரு முறை தலையை நிமிர்த்தினான். என்ன ஆச்சரியம்! அவள் பார்வை, அவனைத் தான் துளைத்துக் கொண்டிருந்தது. பார்வை இரண்டும் மோதிக் கலந்தன.

ரங்கமணியின் நினைவு எங்கோ அலைந்தது. புடைவையை முன்னிருந்துஎடுக்கும் வேகம் குறைந்து விட்டது.

''என்ன செய்கிறீர்கள்? புடைவையை எடுப்பதாகத் தெரியவில்லையே!'' என்றாள் கமலவாசகி. ரங்கமணி சிரித்தான். பிறகு சொன்னான்: ''பழைய கதையில் ஒரு கட்டம் நினைவுக்கு வந்தது.''

''என்ன கட்டம்?''

''வாழ்நாள் முழுதும் பெண்ணை மனத்தாலும் நினைப்பதில்லை என்று பீஷ்மர் சபதம் செய்த கட்டம்தான். இப்போதுதான் தெரிகிறது. அது ஒரு பயங்கரமான, இலகுவில் நிறைவேற முடியாத சபதம் என்று.''

கமலவாசகியின் முகம் நாணத்தால் சிவந்தது. உதட்டில் குறுநகை மின்னியது. ஓரக் கண்ணாலும் ரங்கமணியை நோக்கினாள். பார்வை ஆழமாகப் பதிந்து ரங்கமணியின் இதயம்வரை சென்று தாக்கியது.

''ரொம்ப வந்தனம்'' என்று கூறிவிட்டு ஒரு முல்லைச் சிரிப்பையும் உதிர்த்து விட்டுச் சென்றாள் கமலவாசகி. சற்றுத் தூரம் சென்ற பிறகு ஒரு திருப்பத்தில் திரும்பும்போது, கீழே எதையோ எடுப்பது போல் குனிந்து ஒருமுறை தலையைத் திருப்பி ரங்கமணியைப் பார்த்தாள். அவன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்களால் கவ்வுவது போல் சில சமயங்களில் விழுகிறதே அந்தப் பார்வை பலாப்பிசின் மாதிரிதான்— ஒருமுறை ஒட்டிக் கொண்டால், கையை எடுத்தாலும் பிசின் நூல் இழை மாதிரி நீளும்.

பிரிந்த பிறகும், அவர்கள் பார்வை நினைவில் ஒன்றி நீண்டு கொண்டிருந்தது.

இப்படிச் சட்டக் கல்லூரி முன் செடியில் ஆரம்பித்த பார்வை, தன் தொடர்பை விடாது பல இடங்களிலும் நீடித்தது. ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருக்க முடியாது என்ற நிலைகூட வந்து விட்டது. மதுவை அருந்தினால்தான் போதை ஏறும். ஆனால் பெண்ணின் பார்வை தூரத்திலிருந்தே போதையை ஏற்றி விடுகிறதே!

ரங்கமணிக்கு இந்தக் காதல் இனித்தது. ஆனால் இதயத்தின் அடித்தளத்தில் முன்போல் இருந்து உறுத்தவும் தொடங்கியது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகுதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்திருந்தவனுக்கு இந்தக் காதல் விரசமாகக் கூடத் தோன்றியது. மணமாகாதவள் கர்ப்பத்தைத் தாங்கியது மாதிரிப் பதறினான். ஆனால் திருமணம் செய்து கொள்ளவில்லையே என்று தன்னைத் தேற்றிக் கொண்டான். என்னதான் தேற்றினாலும், அவளை அவன் நினைக்கும்போதும், பக்கத்தில் அவள் இருக்கும்போதும் அவன் மனம் ஏன் படபடவென்று துடிக்கிறது? ஏதோ லட்சியத்தைப் பற்றிக் கொண்டு உயரேயே கோபுரத்தின் தீபமாக யாருக்கும் எட்டாதவாறு இருந்துவிடவேண்டும் என்றிருப்பவன்; திடீரென்று மண்ணுக்கு வந்து, உணர்ச்சிக் குட்டையை அளையத் தொடங்கி விடுகிறானே ஏன்? ஆனால் நல்லவேளையாக அந்தக் குட்டையில் மூழ்கித் தன்னை இழந்து விடாமல் காப்பாற்றிக் கொண்டான். அவன் அறிவு தூங்கிவிடவில்லை. லட்சியம் செத்து விடவில்லை. கடமையை அவன் மறந்து விடவில்லை.

கமலவாசகியின் பேச்சில், அன்பில், துணையில், ரங்கமணிக்குத் தெம்பு உண்டாகியது. அவளை

அவன் நெருங்கியது வெறும் காதலுக்காக மட்டுமல்ல; அவனுக்கு ஒரு துணைவேண்டும்; அதில் இனிமை வேண்டும்; அந்த இனிமையில் அவன் மனம் நிறைய வேண்டும். இவ்வளவையும் அவன் கமலவாசகியிடம்தான் உணர்ந்தான்.

ஒருநாள் கமலவாசகி கேட்டாள்: ''அன்று போட்டியிலிருந்து விலகிய மாணவரை ஏசினீர்களே, இன்று நீங்கள் என்னிடம் பல்லை இளிக்கிறீர்களே?''

''ஆனால் சுயமரியாதையை இழந்துவிடவில்லையே. உன்னுடைய சிரிப்பின் சக்திக்கு என்னை விலை கூறவில்லையே. என்னுடைய இதயராணிதான் நீ. ஆனால் என்றுமே நான்தான் ராஜா என்பதை நான் மறந்துவிடவில்லையே?'' என்று கூறி அவள் கன்னத்தில் தட்டினான் ரங்கமணி.

''அப்படியானால் ராணிக்கு அதிகாரமே கிடையாதா?'' என்று சிணுங்கினாள்.

''ஏன் கிடையாது? என் உள்ளத்தில் குடியிருக்கும் அதிகாரம் உனக்குண்டே. அதில் வேறு யாரும் புகுந்துவிடாமல் பார்த்துக் கொள்ளும் அதிகாரமும் உனக்குண்டு'' என்றான். முத்துப் பல் தெரியக் 'களீர்' என்று சிரித்தாள் கமலவாசகி.

''எனக்கென்னவோ உன்னைக் கமலவாசகி என்று நீட்டி முழக்கிக் கூப்பிடவே பிரியமில்லை'' என்றான்.

''பின்னே எப்படிக் கூப்பிட இஷ்டமாம்?''

''ராணி என்று கூப்பிடப் போகிறேன்.''

''ராணியுமாச்சு, தோணியுமாச்சு.''

''தோணி என்றுகூடக் கூப்பிடலாம். வாழ்க்கைச் சாகரத்தைக் கடக்க எனக்கு ஒரு தோணியாக இருப்பாய் என்பதில் நம்பிக்கை இருக்கிறது.''

''ஐயோ, அதற்காகத் தோணி என்று கூப்பிட்டு விடாதீர்கள். ராணி என்றே கூப்பிடுங்கள்.''

''நீ என்ன சாதாரண ராணியா? அழகு ராணி, என் இதய ராணி'' என்றான் ரங்கமணி, அவளை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே.

அவனுடைய முரட்டுத்தனமான பேச்சிலும், அவள் ரசனையை உணர்ந்தாள். கூர்மையான பனிக்கட்டி கையில் குத்தினாலும் அதன் குளிர்ச்சி இதமாக இருக்கிறதல்லவா? அவனுடைய வெள்ளை உள்ளமும் குறும்புத்தனமும் அவளை மயக்கின. அவனுடைய வாக்கு, செயல், எண்ணம் அனைத்திலும் ஒரு வேகமும், சூதற்ற தன்மையும் இருப்பதை உணர்ந்து உள்ளம் சிலிர்த்தாள். எல்லாவற்றுக்கும் மேலாக அவனுடைய களை சொட்டும் அழகிய முகம் அவள் நெஞ்செல்லாம் நிறைந்து விட்டது.

சில சமயங்களில் அவனைப் புரிந்துகொள்ள முடியாமல் திணறினாள். எத்தனையோ சமயங்களில் அவனுக்காகக் கடற்கரையில் காத்திருந்து ஏமாந்திருக்கிறாள். அப்போது ஏற்படும் கோபமும் எரிச்சலும் மறுநாள், அவனுடைய சிரித்த முகத்தைக் கண்டதும் மறைந்து விடும். தன்னைப் பார்க்க வரமுடியாத அளவுக்கு அப்படி என்னதான் அவனுக்கு வேலை வந்துவிடும் என்று புரியாமல் மனம் குழம்புவாள்.



சட்டக் கல்லூரிக்கென்று தனியாக மாண வர் விடுதி அப்போது இல்லாததால் ரங்கமணி தம்புச் செட்டித் தெரு காளி கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு வீட்டு மாடியை வாடகைக்கு எடுத்துத் தங்கினான். கமலவாசகி, கடற் கரைப் பக்கத்திலிருந்த ஒரு பெண்கள் கல் லூரியைச் சேர்ந்த மாணவிகள் விடுதியில் தங்கியிருந்தாள்.

ஒருநாள் இரவு, கமலவாசகி, தன் அறைக் குள்ளிருந்தபோது, கடற்கரை வீதியில் பலர் ஓடும் சத்தம் கேட்கவே, சன்னல் பக்கத்தில் வந்து வெளியே பார்த்தாள். தெரு விளக்குகளின் ஒளியில் இரண்டு போலீஸ்காரர்கள் யாரையோ விரட்டிக் கொண்டு போவது தெரிந்தது. சிறிது நேரத்தில் போலீஸ்காரர்கள் இருளில் மறைந்து விட்டார்கள். அவர்கள் மறைந்த சிறிது நேரத்தில் பக்கத்திலிருந்த சந்துக்குள் ளிருந்து ஓர் இளைஞன் வெளிப்பட்டு, அங்கும் இங்கும் பார்த்துவிட்டு, நிழலிலேயே பதுங் கிப் பதுங்கிச் சென்றதை கமலவாசகி கவ னித்தாள். அவளுடைய சன்னலுக்குப் பக்கத் தில் அவன் வந்தபோது அவன் தலை நிமிர்ந்து சன்னலைப் பார்த்தான் தெரு விளக்கு ஒளியில் ஒரு கணம் அவன் மு தெரிந்தது. கமலவாசகி திடுக்கிட்டாள். ரங்க மணி மாதிரி அவளுக்குத் தோன்றியது. மறுகணம் அவன் நிழலில் பதுங்கி மறைந்து விட்டான்.

மறு நாள் மெரினாக் கடற் கரையில் அவனைச் சந்தித்தபோது இதுபற்றி விசாரித்தாள்.

"பயந்து விடாதே ராணி. துண்டுப் பிர சுரங்களை விநியோகித் தேன். போலீஸ் விரட் டியது. தப்பிவிட்டேன்" என்றான் ரங்கமணி, வெகு அலட்சியமாக. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தாள்.

"என்ன பிரசுரம்? உங்களை ஏன் போலீஸ் துரத்த வேண்டும்?"

"தூங்கிக் கொண்டிருக்கும் இந்த நாட்டை விழிக்க வைக்க வேண்டாமா? அந்தப் பணி யில்தான் நாங்கள் பலர் இறங்கியிருக்கிறோம். ராணி, உன்னுடைய உதவியும் இருந்தால் எங்கள் பணி இன்னும் தீவிரமாக நடக்கும்" என்றான் ரங்கமணி. ஆவலோடு அவளைப் பார்த்தான். அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது. சற்றுப் பதற்றத்துடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"நீங்கள் பயங்கர இயக்கத்தைச் சேர்ந்த வர்கள் என்று எனக்குத் தெரியாமல் போய் விட்டதே" என்றாள்.

"ஏன்? தெரிந்திருந்தால், என்னைக் காத லித்திருக்க மாட்டாயோ?" என்று கேட்டான் ரங்கமணி, சிரித்துக்கொண்டே.

"அப்படி இல்லை. ஆனால் நீங்கள் இப் படி என்று நினைத்துப் பார்க்கவே முடிய வில்லையே" என்று கூறி அவனை உற்றுப் பார்த்தாள். அவள் கண்களில் பயத்தின் சாயல் தெளிவாகத் தெரிந்தது. அவள் கையை வாஞ்சை யோடு தன் கைக ளுக்குள் வைத்துக் கொண்டு ரங்கமணி சொன்னான் :

"ராணி! என்னு டைய லட்சியம், சிந்தனை இவைக ளுக்கு நீ ஆதரவா யிருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை."

"இந்த மாதிரிப் பயங்கர வாழ்க்கை யில் ஈடுபட்டுக் கொண்டு, இப்படி ஒளிந்து ஒளிந்து



வாழ வேண்டும் என்கிறீர்களா?" என்று பரிதாபமாகக் கேட்டாள் கமலவாசகி.

"போகங்களில் மூழ்கிச் சோம்பேறியாக நெளிவதை விட இந்த மாதிரியான வாழ்க்கையில்தான் ரசனை இருக்கிறது; சுறுசுறுப்பிருக்கிறது."

"கொள்ளைக்காரனுக்கும் திருடனுக்கும் கூடத்தான் அந்தப் பரபரப்பும், ரசனையுமிருக்கும்" என்று வெடுக்கென்று பதில் சொன்னாள்.

"என்னைத் திருடன் என்கிறாயா?"

"போலீஸ்காரனுக்குப் பயந்து பதுங்கி ஒளிபவரை வேறு எப்படி உலகம் நினைக்கும்?"

இதைக் கேட்டு ரங்கமணி அதிர்ந்துவிட்டான். அவனுடைய புரட்சி வாழ்க்கையை அவள் ரசிக்கவில்லை, அதை நினைத்துப் பயப்படுகிறாள் என்பதை உணர்ந்தபோது, அவன் மனம் தவித்தது.

"ராணி, நீ ஜான்ஸி ராணி மாதிரி இரத்தத்தைக் கண்டு பொங்கி எழ வேண்டாமா? அரண்மனையில் தூங்கி வழியும் அந்தப்புரப் பெண் போலவா இருப்பது? இந்த நாடு அமுங்கிக் கிடப்பது உனக்குத் தெரியவில்லையா? நாமெல்லாம் வெள்ளைக்காரர்களிடம் அடிமைகளாகச் சீரழிவது புரியவில்லையா?" என்று பரிவோடு கேட்டான்.

"எனக்கென்னவோ பயமாக இருக்கிறது" என்றாள் கமலவாசகி. அவள் உடம்பு நடுங்கியது. அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு ரங்கமணி சொன்னான்:

"பயப்படாதே, என்னுடைய லட்சியம் தான் உன்னுடைய லட்சியம்; என்னுடைய பாதைதான் உன்னுடைய பாதை. தைரியமாக என் கைகளைப் பற்றிக் கொண்டு என்னைத் தொடர்ந்து வா, ராணி. இந்தப் பணியில் நான் வெற்றி பெறுவதாயிருந்தால், அது நீ தரும் தெம்பினால்தான் பெற வேண்டும்.... சொல்லு ராணி... நீ எனக்குத் துணையாக நிமிர்ந்து நிற்பாயா? வாழ்வு கிடைத்தால் சுதந்திர நாட்டில் இன்ப வாழ்வைத் தொடங்குவோம். இல்லையென்றால், விடுதலைக்காகப் போரிட்டுச் சேர்ந்தே அழிந்து விடுவோம். எனக்குத் துணை நிற்பாயா? சொல்லு... சொல்லு ராணி...." அவளுடைய முகத்தைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு அவளையே பார்த்தான். அவள் வாயிலிருந்து வரப்போகும் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தான். கமலவாசகியோ ஒன்றும் புரியாமல் திகைத்தாள்.

"என்னை விடுங்கள். எனக்கு யோசிக்க நேரம் கொடுங்கள்" என்று கூறி அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு எழுந்து சென்றுவிட்டாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டு மணலில் அயர்ந்து உட்கார்ந்திருந்தான் ரங்கமணி.

மறுநாள் கடற்கரையில் ரங்கமணி வருவதற்கு முன்பே கமலவாசகி வந்து உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் ரங்கமணி. அவன் வந்துவிட்டதை உணர்ந்த பிறகும், அவன் பக்கம் திரும்பாமல் அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ராணிக்கு என்மீது கோபமா?" என்று கேட்டான் ரங்கமணி.

"கோபம் ஒன்றுமில்லை, பயம்தான்" என்றாள் முகத்தைத் திருப்பாமலே. ரங்கமணி மெதுவாகச் சிரித்தான்.

"ராணி! உண்பதும், உறங்குவதும், பருவத்தில் மணம் புரிவதும், காலத்தில் மறைந்துவிடுவதுந்தான் வாழ்க்கையா? ஒரு நாள் வாழ்ந்தாலும் மின்னலைப் போல் ஜொலித்து விட்டு மறையலாமே. என்னை நீ புரிந்து கொள்ளவில்லையா ராணி?"

"நன்றாகப் புரிந்து கொண்டேன். உங்களுடைய பாதையில் எனக்கு நம்பிக்கை விழவில்லையே. நடைமுறையைச் சிந்தித்து, எது முடியுமோ அதை முயல்வதுதான் விவேகம். இப்படிப் பயங்கரவாதியாக, புரட்சியாளராகத் திரிவதில் என்ன லாபம்? வெற்றி நிச்சயம் என்ற நம்பிக்கைக்கே இப்போது இடமில்லை. உங்களைப் போல் ஒரு சிலர் இப்படி மறைவாகக் காரியங்களைச் செய்துவிட்டால் என்ன ஆகிவிடப் போகிறது? யானையைக் கொசு கடித்த மாதிரிதான்" என்றாள் கமலவாசகி. இதைக் கேட்டுச் சோர்வுடன் அவளைப் பார்த்தபடியே இருந்தான், ரங்கமணி. கமலவாசகி தொடர்ந்து சொன்னாள்:

"மேலும் நான் இந்த மாதிரிப் பயங்கரமான வாழ்க்கையில் பழகியதும் இல்லை. எனக்கு இது, புதுப் பாதை. இதில் விருப்பமும் இல்லை."

"எனக்காக என் பாதையில் நீ வர முடியாதா? நீ ஜமீன்தாரின் மகள் என்பதற்காக மாளிகை வாழ்விலும், படாடோபத்திலும் தான் நீ பிரியம் வைத்து, அலங்காரப் பொம்மையாக இருக்க வேண்டும் என்று உன் அப்பா விரும்புகிறாரா?"

"அப்பாவைப் பற்றிக் கவலை இல்லை. அவர்கள் விரும்புவதெல்லாம் என்னுடைய சுதர்மத்துக்குத் தகுந்த வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். பொய்யாக நூறு ஆண்டுகள் வாழ்வதை விட உண்மையுடன் ஒரு நாள் வாழ்ந்தாலும் போதும் என்பார்கள்."

"இவ்வளவு சுதந்திரம் உனக்கு அப்பா கொடுத்திருக்கும்போது நீ, என் திசையில் வருவதில் சங்கடமில்லையே."

"என்னுடைய மனம் உங்களுடைய புரட்சிப் பாதையில் வர மறுக்கிறதே" என்றாள் கமலவாசகி.

அன்று பிரிந்தபோது ரங்கமணியின் மனம் மிகுந்த வேதனைப் பட்டிருந்தது. காதல் ஒருபுறம் இழுத்தது. லட்சியம் வேறுபுறம் இழுத்தது. இந்த இழுப்புக் கிடையில் சோர்ந்துவிட்டான். கமலவாசகியின் நினைவு, அவனைப் பைத்தியமாக்கியது. நாலைந்து நாட்களுக்கு அவளைச் சந்திக்காமல் தனியே இருந்தான். அதற்கு மேல் அவனால் முடியவில்லை. அவளை விட்டு விலகவும் முடியவில்லை, லட்சியத்தை உதறவும் முடியவில்லை. ஆனால் அவளோ, அவனுடைய புரட்சிப் போக்கைக் கண்டு நடுங்கினாள்.

அவளுக்கு ரங்கமணி வேண்டும், அவன் காதல் வேண்டும். ஆனால், அவனுடைய லட்சியம் மட்டும் வேண்டாம். லட்சியத்தை விட்டுத் தன்னைப் பிரிக்க முடியாதவனாகி விட்டவனைக் காதலித்து மனம் புழுங்கினாள்.

கல்லூரியிலும், கடற்கரையிலும் வளர்ந்த காதல், வைரம் பாய்ந்துவிட்டது. ஆனால் உடையில் வாரியல் புல்லிருந்து குத்துவது போல், ரங்கமணியின் புரட்சி நடவடிக்கை, அவளுடைய இனிமைக் கனவுகளை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அவனுடைய பயங்கர இயக்க நடவடிக்கை, நாளுக்கு நாள் தீவிரமாவதைக் கண்ட கமலவாசகி, ஒரு நாள் அவனிடம் சொன்னாள்:

''உங்களுடைய போக்கை நினைக்கவே பயமாயிருக்கிறது. உங்களையே நான் இழந்து விடுவேனோ என்று மனம் நடுங்குகிறது.''

''ராணி, என்ன நடந்தாலும் சரி, நாம் சேர முடியாமல் போய்விட்டால்கூட நம்முடைய காதல் சிரஞ்சீவியானது'' என்றான் ரங்கமணி உணர்ச்சிப் பெருக்குடன்.

''என்னவோ, என்னிடமிருந்து நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் செல்வதாக உள்ளூறப் பயம் தோன்றுகிறது'' என்று கூறிக் கண் கலங்கினாள்.

''என்னுடைய ராணி சாதாரணப் பெண்களைப் போல் அற்ப ஆசைகளை நெஞ்சில் நிரப்பிக் கொண்டு, வாழ்க்கையை ஓர் அளவுக்கு மேல் எட்டிப் பார்க்க இயலாமல், முடமாகிக் கிடப்பாள் என்று நான் நினைக்கவில்லை. ராணி, நீ ரங்கமணியின் காதலி. இந்த ரங்கமணியின் லட்சியங்கள், கோபுரத்தின் விளக்கு மாதிரி ஒளி வீச வேண்டும். அந்த விளக்கை ஏந்தும் பாவையாக நீ கோபுரத்தின் உச்சியிலிருக்க வேண்டும். இதுதான் நான் காணும் கனவு. இதைச் சிதைத்து விடாதே, ராணி'' என்று கமலவாசகியின் கைகளைப் பற்றிக் கொண்டு கூறினான் ரங்கமணி. இதைக் கேட்டுக் கமலவாசகி பொங்கிப் பொங்கி அழுதாள்.

அவளால் அவனுடைய பாதையை எட்டிக் கூடப் பார்க்க முடியவில்லை. அவள் விரும்பியதெல்லாம், அமைதியான இன்ப வாழ்க்கை. ரங்கமணி துணை இருக்க, வாழ்க்கைத் தொட்டிலில் நிம்மதியாக உறங்கத் துடித்தாள். அவனோடு சண்டையிட்டாள், அழுதாள், கோபம் கொண்டாள், கெஞ்சினாள். ஒன்றுக்கும் அவன் அசையவில்லை. அவனுடைய போக்கில் சாயவும் அவள் இசையவில்லை. இரண்டும் இரண்டு துருவங்களாகி, ஒன்றை ஒன்று ஆகர்ஷித்துக் கொண்டிருந்தன.

சட்டக் கல்லூரியில் இரண்டாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோதுதான் அந்தச் சம்பவம், நடக்கக் கூடாதது நடந்து விட்டது —

ஒரு நாள் இரவு நடுநிசியிருக்கும்; கமலவாசகி தூக்கம் வராமல் விளக்கையும் எரியவிட்டுக் கொண்டு அறைக்குள் நாற்காலியில் சாய்ந்து கிடந்தாள். வெடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து சிலர் தூரத்திலிருந்து ஓடி வருவதும் கேட்டது. அறை விளக்கை அணைத்து விட்டு வீதி ஓரமிருந்த சன்னல் பக்கம் போய் நின்று கவனித்தாள்.

தெருவில் நாலைந்து இளைஞர்கள் ஓடுவது தெரிந்தது. சற்றுத் தள்ளிப் போலீஸ்காரர்கள் ஓடி வருவதும் தெரிந்தது. கமலவாசகியின் வயிற்றில் சங்கட உணர்ச்சி தோன்றியது.

தலைவலி வரும்போலிருந்தால் கூட காரியாலயத்துக்குச் சிலர் போகவே மாட்டார்கள். ஆனால் அவருக்கு அன்று, வாழ்க்கையில் தாங்கொணாத் துயர நாள். ஆம், வாழ்க்கைத் துணைவியார் பிரிந்துவிட்ட தினம். அந்தச் சடங்குகள் யாவும் காலையிலேயே முடிந்து விட்டன.

காலை பதினோரு மணியளவில் அவர் நீதி மன்றத்துக்கு நடுவர் உடையுடன் வந்ததைக் கண்ட இன்னொரு நடுவர் திகைத்து விட்டார்! அன்று அவர் வரமாட்டார் என வழக்குகளைத் தம்முடைய வழக்கு மன்றத்துக்கு மாற்



அன்றும் வந்தார்!

றிக் கொண்டிருந்தார். மிக்க நெருங்கிய நண்பருங்கூட.

''என்ன? இன்றைக்குக் கூடவா நீங்கள் வரவேண்டும்?'' எனவும் கேட்டு விட்டார்.

''அதனாலென்ன? என் வருத்தம் என்னோடு இருக்கட்டும். என்னால் ஏகப்பட்ட பேர் வழக்குத் தள்ளி வைத்து அவதிப்படக் கூடாது என்றுதான் வந்தேன். தவிர இங்கே வந்தால் துன்பத்தை மறக்கவும் முடியும்!'' என்று பதிலளித்தார் அந்த மனிதர். அவர் யார் தெரியுமா?

நாடகப் பேராசிரியர் - ''நாடகத் தந்தை'' பம்மல் சம்பந்த முதலியார் தான்!

—ஏ. கஸாமிநாதன்

'ஓடி வருபவர்களில் அவரும் இருப்பாரோ? கடவுளே, நீதான் காப்பாற்ற வேண்டும்'— அவள் வாய் முணுமுணுத்தது. சன்னல் வழியாகக் கீழே பார்த்தாள். வியப்புடன் அவள் வாயடைத்து நின்றாள்.

ஒரு போலீஸ்காரரும் ஓர் இளைஞனும் சற்றுத் தூரத்தில் கட்டிப் புரண்டார்கள். மங்கலான தெருவிளக்கின் ஒளியில் அந்த இளைஞனின் முகம் நன்றாகத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் அந்த இளைஞன், போலீஸ்காரரை அடித்து ஒரு பள்ளத்தில் உருட்டிவிட்டு, மாணவிகள் விடுதியின் வெளிச் சுவர் பக்கத்திலிருந்த மரத்தின் இருளடர்ந்த நிழலில் மறைந்தவண்ணம் சுவர் மீது ஏறி விடுதித் தோட்டத்துக்குள் குதித்தான்! அதைக் கண்ட கமலவாசகி, கூச்சலிட முயன்றாள். ஆனால் அதே சமயம், அந்த இளைஞன் ரங்கமணியாக இருப்பானோ என்ற சந்தேகம்தோன்றவே மௌனமாகிவிட்டாள். விடுதித் தோட்டத்துக்குள் இருட்டாயிருந்ததால், குதித்தவன் எங்கே சென்றான் என்பது தெரியவில்லை. சுவருக்கு மறுபக்கமிருந்த கடற்கரை வீதியில் போலீஸின் ஆர்ப்பாட்டம் அதிகரித்தது. பள்ளத்தில் விழுந்த

முடி வெட்டவா? தோல் உரிக்கவா?



ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு முறை வரி உயர்த்த விரும்பினர். அப்போது மூலி டௌட்டன் என்பவர் "ஆட்டிலிருந்து வருஷத்துக்கு ஒருமுறை ரோமம் கத்தரிக்கலாம். ஆனால் ஒரே ஒரு முறையே தோலை உரிக்க முடியும்" என்றாராம்!

ஆதாரம் : "டைம்" ● தகவல் : 'ரமணன்'

போலீஸ்காரர், முக்கி முனகிக் கொண்டு எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு கமலவாசகியின் அறைக் கதவை யாரோ மெதுவாகத் தட்டும் சத்தம் கேட்டது! பரபரப்புடன் ஓடிச் சென்று விளக்கை ஏற்றிவிட்டு, கதவைத் திறந்தாள். வேகமாக அறைக்குள் பாய்ந்து, கதவைத் தாளிட்டான் ரங்கமணி!

"விளக்கை அணை, சீக்கிரம்" என்று படபடத்தான். கமலவாசகி, விளக்கை அணைத்தாள். ரங்கமணி சன்னல் கதவுகளையெல்லாம் சாத்திவிட்டு விளக்கை ஏற்றினன். கமலவாசகி திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் உடல் முழுவதும் வியர்வையால் நனைந்திருந்தது. தலைமுடி கலைந்து, நெற்றியில் புரண்டது. ஆடையெல்லாம் புழுதி. புறங்கையில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவனைப் பார்க்கவே கமலவாசகிக்குப் பயங்கரமாக இருந்தது. நாற்காலியில் கிடந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தான்.

"இதெல்லாம் என்ன?" என்று கமலவாசகி கேட்டாள்.

"சுற்றிப் போலீஸ்காரர்கள் நிற்கிறார்கள். நான் சுவர் ஏறி உள்ளே குதித்தது யாருக்கும் தெரியாது" என்றான் ரங்கமணி.

"என்ன நடந்தது ?"

"வெடிச் சத்தம் உனக்குக் கேட்கவில்லையா ?"

"கேட்டது."

"அதுதான் காரணம். பக்கத்தில் ஒரு வெள்ளைக்காரப் போலீஸ் அதிகாரி குடியிருக்கிறன். அவன் மீது எறிந்த குண்டுதான் அது. குறி தவறி விட்டது" என்றான் ரங்கமணி சாவதானமாக. கமலவாசகியின் உடல் சிலிர்த்தது.

"நான் இரவு வெளியேற முடியாது. இங்கேயே தங்கலாமா?....அல்ல...து" என்று இழுத்தான் ரங்கமணி.

"விடுதிச் சட்டப்படி இப்படித் தங்குவது குற்றம்.... யாருக்கும் தெரியாமல் அதிகாலையில் சென்று விடலாம்" என்றாள் கமலவாசகி. ரங்கமணி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

அவன் பக்கத்திலிருந்த ஒரு நாற்காலியில் அவளும் உட்கார்ந்துகொண்டாள். அவனையே உற்றுப் பார்த்தாள். அவன், எந்தச் சலனமும் இல்லாமல் எதையோ சிந்தித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். "எப்போதுமே இப்படி ஆபத்து சூழத்தான் வாழப் போகிறீர்களா?"

"நாடு சுதந்திரம் அடையும் வரைக்குந்தான்" என்று சாவதானமாகப் பதில் சொன்னான் ரங்கமணி.

"நல்ல வேளை, கடல் அலை ஓயும் வரை என்று சொல்லவில்லை" என்றாள் அவள் எரிச்சலுடன்.

"சுதந்திரமே கிட்டாது என்கிறாயா ?"

"கிட்டும் என்பதற்கு ஓர் அறிகுறியும் இல்லையே. நடக்காத போர்க்களத்தில் வீரனாகத் தோன்ற முயலுகிறீர்கள்!"

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்" என்றான் ரங்கமணி அலட்சியமாக.

"எனக்கு இன்று ஒரு முடிவு தெரிய வேண்டும்" என்று திட்டமாகச் சொன்னாள் கமலவாசகி. ரங்கமணி, நிமிர்ந்து உட்கார்ந்து அவளை உற்றுப் பார்த்தான்.

"என்ன முடிவு ?"

"நீங்கள் இந்தப் பயங்கர இயக்கத்தை விட்டு விலகி, மற்றவர்களைப் போல் வாழ வேண்டும்" என்றாள் கமலவாசகி அழுத்தம் திருத்தமாக.

"அதாவது உல்லாச மாளிகையில் உன்னுடைய அந்தப்புரத்தில், நீ விளையாடுவதற்கு ஏற்ற அலங்காரப் பொம்மையாக இருந்துவிடும்படி என்னைக் கேட்கிறாய். அப்படித்தானே ?"

"எனக்கு வாழ்வளியுங்கள் என்றுதான் கேட்கிறேன்."

"அதற்கு அர்த்தம் இதுதான். உன்னுடைய அப்பாகூட இதற்குச் சம்மதிக்க மாட்டார். அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தாலும், வாழ்க்கையில் சில கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார். என்னுடைய லட்சியமும் போக்கும் அவருக்குப் பிடிக்காவிட்டாலும் என்னுடைய கதர்மப்படியே என்னை வாழ ஆசி கூறிய உத்தமர். அவருடைய மகனாகப் பிறந்துவிட்டு என்னை உன்னுடைய கொலுப் பொம்மையாக வந்து இருஎன்கிறயே, அப்படியிருக்க உன் தந்தையே சம்மதிக்கமாட்டார்."

"வரப் போகும் மருமகன் இப்படி ஒளிந்து கொண்டு திரிகிறரே என்று அவருக்கு வருத்தந்தான்."

"அதே சமயம் நான் ஒரு லட்சியத்தை நாடிச் செல்லுகிறேன் என்பதில் அவருக்கு எவ்வளவோ திருப்தி, பெருமையும்கூட."

அவர்களுடைய விவாதம் நீண்டது.

(தொடரும்)

வண்ணாருக்கும் வரி! அவர் துவைக்கும் கல்லுக்கும் வரி!

தமிழ் நாகனர்

''‘கல்கி’ இதழில் ‘மொரார்ஜி தேசாய்க் குச் சில யோசனைகள்’ என்ற கட்டுரையைப் படித்துச் சுவைத்தேன். உடனே நம் தமிழக வரலாற்றுக் காலத்தில் வழங்கப்பட்ட விநோத வரிகளைப் பற்றிய நினைவு என் உள்ளத்தில் எழுந்தது!'' என்கிறார் இக் கட்டுரை ஆசிரியர்.



பல்லவ மன்னர்கள் பாராண்ட காலத்தில் பல விநோத வரிகள் போடப்பட்டிருந்தன.

தென்னை, பனை முதலிய மரங்களைப் பயிரிடுவோருக்கு வரி விதிக்கப்பட்டது. இம் மரங்களிலிருந்து கள் இறக்குவோருக்கும் வரி விதிக்கப்பட்டது. வெட்டப்பட்ட மரங் களின் அடிப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வரியாக அரசாங்கம் பெற்றுக் கொண்டது. பனம்பாகு செய்வோரும் வரி செலுத்த வேண்டியதாயிற்று. பாக்குக்கும் வரி விதிக்கப்பட்டது. கல்லால மரம் என்ற ஒரு வகை ஆலமரத்தைப் பயிர் செய்யக் ‘கல்லால் காணம்’ என்ற வரி விதிக்கப்பட்டது!

புண்களை விரைவில் ஆற்றும் ஆற்றலை உடைய மருந்துச் செடி செங்கொடி வேலி அல்லது சித்திரமூலம் என்பது. இதைப் பயிரிடுவோர், ‘செங்கொடிக் காணம்’ என்றவரியைச் செலுத்த வேண்டியவர் ஆயினர். இவ்வாறே கருசாராங் கண்ணி என்ற செடியைப் பயிரிட்டோர், ‘கண்ணிட்டுக் காணம்’ என்ற வரியைச் செலுத்தி வந்தனர். மருக்கொழுந்து பயிரிடவும் வரி! நீலோத்பலம் எனப்படும் குவளைச் செடிகளை நட, ‘குவளை நடு வரி’ அல்லது ‘குவளைக் காணம்’ என்ற வரியைச் செலுத்தியாக வேண்டும் பல்லவர் காலத்திலே! செங்கழுநீர் பயிரிடவும் வரியே!

ஆடு, மாடுகளாகிய கால்நடைகளால் பிழைப்பவர், புரோகிதர், குயவர், பல வகைக் கொல்லர், வண்ணார், ஆடை விற்பவர், ஓடக்காரர், தரகர், செக்கார், ஆடை நெய்பவர், நூல் நூற்பவர், வலைஞர், பனஞ்சாறு எடுப்பவர், நெய் விற்பவர், திருமண வீட்டவர் முதலியோர் வரி செலுத்த வேண்டியவர் ஆயினர். சிற்றூர் வாழ் மக்கள் அச் சிற்றூர்த் தலைவனுக்கு அளித்த வரி, ‘விசக் காணம்’ அல்லது, ‘வியவன் காணம்’ எனப்பட்டது. நெல், அரிசி முதலிய பதினெட்டு வகைத் தானியங்களை விற்போரிடம் இருந்தும் வரி வாங்கப்பட்டது. அரசரின் முத்திரையிடப்பட்ட கடிதங்களை வாங்குவோருக்குத் ‘திருமுகக் காணம்’ என்ற வரி விதிக்கப்பட்டது. கத்தி செய்வோர் செலுத்திய வரி, ‘கத்திக் காணம்’ எனப்பட்டது. பறை அடிப்போர் செலுத்திய வரி, ‘நெடும் பறை’ என வழங்கப்பட்டது. அறுவடைக் காலங்களில் வரிக்குப் பதிலாக நெல் வாங்கப்பட்டது. இதனை வாங்க வரும் அரசியல் அதிகாரிக்கு உணவளிப்பதற்று என்று செலுத்தப்பட்ட வரி, ‘எச்சோறு’ எனக் கூறப்பட்டது. ஊர் நியாய மன்றங்களில் வழக்காளிகள் செலுத்திய தண்டம், ‘மன்று பாடு’ எனப்பட்டது!





இவ்வரிகளில் பல பல்லவர் ஆட்சிக்கு முற்பட்ட - பிற்பட்ட சோழர் ஆட்சிக் காலத்திலும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கன்னட நாட்டிலோ வைக்கோல், விறகு முதலிய எல்லாப் பொருள்களுக்கும் வரி விதித்தனர். தென்னிந்திய அரசுகளில் குயவர்க்கும் வரி! அவருடைய சக்கரத்துக்கும் வரி! வண்ணாருக்கும் வரி, அவர் துவைக்கும் கல்லுக்கும் வரி! நாவிதர்க்கோ தொழில் வரியும், கத்தி வரியும்! கள்ளிறக்குவோர் பயன்படுத்திய ஏணிக்கும் வரி! நாட்டிய மகளிர் தொழில் வரியோடு தாம் முகம் பார்க்கும் கண்ணாடிக்கும் வரி செலுத்த வேண்டியவர் ஆயினர்.

இவ்வரிகளை நோக்கும் போது மொரார்ஜி தேசாய் கூடக் கற்பனையில் குறைந்தவராகவே விளங்குகிறார்.!

(இச் செய்திகளுக்கு அடிப்படை: பல்லவர் வரலாறு: தென்னிந்திய வரலாறு.)

மூன்றாவது பரிசு நாவல்

மணக் கோலம்

பி. வி. ஆர்

அத்தியாயம் 12

"ஒரு நாளிலே செய்து முடிக்கிற காரியமில்லே, சந்தானத்தை அந்த வீட்டை விட்டுத் தூரத்துவது!" என்று அவளுடைய திடத்தைக் குலைப்பது போல் கூறினான் ரகுபதி.

"உனக்குத் தெரியாது! பாகீரதி ஒரு பூஞ்சை. என்ன சொன்னாலும் நம்பிவிடுவாள். அதுவும் இப்போ இந்த வரனை முடிச்சுக் கொடுக்கிறேன்னு நான் சொன்னதிலிருந்து கேட்கவே வேண்டாம். என்னைத் தெய்வமாக அவள் ஸ்தோத்திரம் செய்கிறாள்."

"அதனாலே, ஒரு மாடு ஆட்டுக் குட்டியைப் பெற்றுவிட்ட துங்கிற செய்தி மாதிரி ஏதும் சொல்லி விடாதே.... அவ பூஞ்சையாக இருக்கலாம். வெகுளியாக இருக்கலாம். ஆனால் அவளுக்கு மூணு பெண்கள் இருக்கு. எல்லாம் படிச்சதுகள். உன் வாய்க் கலகம் அவர்களிடம் பலிக்காமல் போனாலும் போய் விடும்......"

தன் சாமர்த்தியத்தில் நம்பிக்கை யில்லாதவனைப் போல் அவன் பேசியதைக் கேட்ட போது அலமேலுவுக்குக் கோபம் வந்தாலும், அதைச் சுய நலம் காரணமாக அடக்கிக் கொண்டாள். "சரி, ஜாக்கிரதையா யிருக்கேன்....."

"இந்தச் சந்தானம் அரிசிக்காரன் தெருவை விட்டு வெளியேறினால்...." என்று அவன் நிறுத்தி அலமேலுவையே கூர்ந்து பார்த்தான்.

அப்பார்வையில் ஏதோ ஓர் அர்த்தம் ஒளிர்ந்திருப்பதைப் புரிந்து கொண்ட அலமேலு, "வெளியேறினால்?" என்று கேட்டு அவனைப் பார்த்தாள்.

"அதுக்குத் தனியா ஒரு பச்சை நோட்டு." — இப்போது ரகுபதி இலேசாகச் சிரித்தான்.

"நீ இதைச் சொன்னால்தான் நான் உனக்காகச் செய்வேனா?" என்று சமாளித்த அவள், "நம்முடைய உறவும் பந்தமும் விட்டுப் போய் விடுமா?" என்று முடித்தாள்.

"இதோ பார்..... நாலு பேர்கிட்ட காரியத்தைச் சாதிக்கிறதுன்னு வர்ற போது நான் உன் தம்பி, அண்ணா பிள்ளை, தங்கை பிள்ளைன்னு என்ன வேணுமானாலும் சொந்தம் கொண்டாடிக் கொள். நான் குறுக்கே நிற்க வில்லை. ஆனால், என்கிட்டேயே நாம ரெண்டு பேரும் சொந்தம்னு மட்டும் உரிமையாடாதே. என்ன சொந்தம்? உன்னுடைய அப்பாவுக்கு நீ இரண்டாம் பெண்டாட்டியின் பெண். நான் அவருடைய மூத்தாளின் தாய்வழிப் பாட்டியின் ஒண்ணுவிட்ட தம்பியின் பேரன்..... என்ன சொந்தம் இது? சொந்தமா...? இப்படிச் சொல்லிச் சொல்லி, உருவேத்திக் கடைசியிலே என் தலையிலேயே கை வைப்பே!"

ரகுபதியின் வார்த்தைகள் சாட்டை கொண்டு அடிப்பது போல் இருந்தாலும், இந்த வலியெல்லாம் தனக்குப் பழக்கமானவை என்று அலமேலுவின் முக பாவம் சொல்லிற்று.

"சரிடா, ரகு! இன்னமே உன்கிட்டே சொந்தம் கொண்டாடமாட்டேன். போதுமா? நீ இவ்வளவு கோவையாச் சொன்னப்புறம்தான் எனக்கே இத்தனை தூரமா நம்முடைய சொந்தம்னு மலைக்கிறேன்!"

"அப்போ நான் கிளம்பறேன்!" என்று ரகுபதி கிளம்பி இரண்டு அடி சென்றதும் திரும்பி நின்றான். பிறகு, "பெண் கண்ணாடி போட்டிண்டிருக்காள்னு சொன்னியே, சோடா பாட்டிலா?" என்று கேட்டான்.

புறப்பட்டு இரண்டு அடி நடந்த பிறகு அவன் கேட்ட கேள்வி ஒரு கணம் அலமேலுவை உலுக்கியது. ஏதோ ஒரு பாதையிலேயே இத்தனை நேரம் சென்றிருந்த கவனம், வேறு திசையில் இழுக்கப்படவே, அவளால் உடனே பதில் கூற முடியவில்லை.

"என்ன கேட்டே, சோடாவா?"

அலுத்துக் கொண்ட ரகுபதி கேள்வியை இன்னொரு தரம் கேட்டான்.

"சேச்சே.... தலைவலிக் கண்ணாடி. கொஞ்சம் ஒல்லியா இருப்பா... கலியாண மானால், பூசணி மாதிரி, ஆயிடுவா. மூக்கும் முழியுமா லட்சணமா

யிருக்கும். சிவப்பு நிறம்தான் அழகுன்னு நெனைக்கிறவா, சீதாவின் மாநிறத்தைப் பார்த்தால் அபிப்பிராயத்தையே மாத்திண்டு போயிடுவா !''

''சரி..... சரி....'' என்று மீண்டும் திரும்பினான்.

''ரகு.... அவர் காஞ்சிபுரத்துக்குப் போயிருக்கார்'' என்று மெதுவாக இழுத்தாள்.


''அதான் அப்போதே சொன்னியே.''

''ராத்திரிதான் வருவார்....''

''வரட்டும். அதுக்கென்ன ?'' ரகுபதி பொறுமை இழந்தான்.

''அரிசி சுத்தமா இல்லை. அடிக்கடி மூச்சு அடைக்கிறதுன்னு டாக்டர்கிட்ட போனேன். அவன் என்னடான்னு, ஆறேமுக்கால் ரூபாய்க்கு ஒரு இருபது மாத்திரை எழுதிக் கொடுத்திருக்கான்.'' அலமேலு ஏதோ எதிலும் அக்கறை இல்லாதவளைப் போலப் பேசினாள்.

''எதுக்கு ஊரைச் சுத்தறே....? உனக்குப் பணம் வேணும்....!'' என்று கடிந்த ரகுபதி, பர்ஸிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அதை நீட்டிக் கொண்டே, ''சில்லறை சில்லறையாக் கேட்டுக்



கேட்டு என்னைச் சும்மா தொந்தரவு பண்ணினால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. இதோடு எழுபது ரூபாய் ஆகியிருக்கிறது!'' என்றான். அடுத்தகணமே அவன் வெளியேறினான்.

பத்து ரூபாய்க் காகிதத்தை அலமேலு கைநீட்டி வாங்கிக் கொண்ட போது, அவள் மனம் கறுவியது. அது கூட எதையெல்லாமோ புதைத்து வைத்திருந்தாலும் இந்த இகழ்ச்சியைச் சகிக்கவில்லை.

ஃ ஃ ஃ

தேவி கம்பெனியில் பணியாற்றும் சேஷனை எப்படிச் சந்திப்பது என்று யோசித்தான் ரகுபதி. இரண்டு தினங்களுக்கு முன்னால்தான் அவன் வந்து போயிருக்கிறான். கண்டதையெல்லாம் தின்றுவிட்டு, போதையில் தலை கால் தெரியாமல் ஆடிவிட்டுக் கடைசியில் ரகுபதியின் படுக்கை அறையை 'பினையில்' போட்டுச் சுத்தமாக்கும் அளவுக்கு நாசம் செய்திருந்த சேஷன் இன்னும் ஐந்தாறு நாட்களுக்கு வர மாட்டான். சொல்லப் போனால் இன்னும் பத்து நாட்களுக்கு வராமல் இருக்க அன்று ரகுபதியே தான் வெளியூர் செல்ல இருப்பதாக அவனிடம் போய் சொல்லியிருக்கிறான். இப்போது எப்படிச் சேஷனை வரவழைப்பது?

சேஷன் திருவல்லிக்கேணியில் நான்கு ஐந்து தனிக்கட்டைகளுடன் ஏதோ ஒரு சந்து வீட்டில் தங்கியிருக்கிறான் என்றுதான் ரகுபதிக்குத் தெரியுமே ஒழிய, எந்த சந்து, எத்தனையாவது நம்பர் வீடு என்ற விவரங்கள் ஒன்றும் தெரியாது. சேஷனைச் சந்திக்க வேண்டுமானால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. தேவி கம்பெனிக்கு 'போன்' செய்து அவனிடம் பேச வேண்டும்.

ஆனால் தேவி கம்பெனியில் உதவி மானேஜர் அறையிலும், முதலாளி வந்து போனால் உட்காரும் அறையிலும் தான் போன்கள் இருக்கின்றன. முதலாளி அறை எப்போதும் சாத்தப்பட்டே இருக்கும் என்று ரகுபதிக்குத் தெரியும். உதவி மானேஜர் அறையில் போன் மணி அடித்தால் சந்தானமல்லவா அதை எடுப்பான்? என்னதான் தன்னுடைய பெயரைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாமலிருந்தாலும், சேஷன் அதே அறைக்கு வந்து பேசுகையில் ஏதாவது உளறிவிட்டால் என்ன செய்வது? இந்தச் சேஷனுக்கு உடம்புதான் கோவில் மாடு மாதிரி வளர்ந்திருக்கிறதே தவிர, இங்கிதம் தெரியாதவன். சம்பந்தா சம்பந்தமில்லாமல், இடத்தையும் அக்கம் பக்கத்தையும் பார்க்காமலேயே பேசுகிறவன். இப்போது ஏற்பட்டிருக்கும் சிக்கலை நீக்கச் சேஷனைப் போல ஒரு முழு முட்டாளின் உதவியை நாடுவதே முட்டாள்தனம்தான். ஆனால் தேவி கம்பெனியில் சேஷனைத் தவிர வேறு யாரும் இல்லையே? புதிதாக ஒரு டைபிஸ்டு வந்திருக்கிறாள் என்று தெரியும். ஆனால் அவளால் என்ன பிரயோசனம்?

போன் செய்தால் காரியம் குட்டிச் சுவராகப் போய்விடும் என்று கருதின ரகுபதி அன்று முழுதும் என்ன செய்வது என்று விழித்தான். ஐந்தரை மணிக்குத் தேவி கம்பெனி மூடியதும் வெளியே வரும் சேஷனைச் சந்தித்துத் தன் வீட்டுக்கு அழைத்து வருவதுதான் சிறந்த வழியாகத் தோன்றியது.


அன்று அவனுக்குத் தோல்வி. ஆறு அடித்து ஆறரையும் ஆயிற்று. நான்கு அடுக்குக் கட்டிடத்தில் மூன்றாவது மாடியில் இருக்கும் தேவி கம்பெனி மூடியிருக்கிறதா, திறந்து இருக்கிறதா என்றுகூட, எதிர்ப் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்த ரகுபதிக்குத் தெரியவில்லை.

இரண்டாம் நாள் ரகுபதியால் தன் ஆபீசை விட்டு நகரக்கூட முடியவில்லை. பம்பாயிலிருந்து வந்திருந்த மானேஜிங் டைரக்டர் அவன் எதிர்பாராத கேள்விகளையெல்லாம் கேட்டுக் கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தார். மாதாந்திரச் செலவுப் பட்டியலையும், ரகுபதி பிரயாணங்களுக்காக எடுத்துக் கொண்டிருந்த சலுகைகளையும் அலசி அலசி அவனைப் பதில் சொல்ல முடியாமல் திணற அடித்தார்.

கடைசியாக மானேஜிங் டைரக்டர் அவன் முகத்தில் அடித்த வசைமாரியைத் துடைத்து விட்டு, அவரையும் மீனம்பாக்கத்தில் விமானம் ஏற்றிய பின் அந்த விமானம் பம்பாய் போவதற்கு முன் ஏதேனும் ஒரு மலைமேல் மோத வேண்டும் என்று சபித்துக் கொண்டே ரகுபதி தேவி கம்பெனி இருக்கும் இடத்தை அடைந்தான். அன்று எப்படியும் சேஷனைச் சந்தித்து விடுவது என்று மனம் சங்கற்பித்துக் கொண்டது. 'ஆறு அடித்து விட்டதே, ஒருவேளை சேஷன் வீட்டுக்குத் திரும்பியிருப்பானோ?' என்ற பயம் நடுநடுவே எழுந்தாலும், அவனைச் சந்திப்போம் என்ற நம்பிக்கை மாறவில்லை. அவன் கால் கடுக்க நின்று கொண்டிருந்தான். பாழாய்ப் போன கார் இன்னும் ஓர்க்

காத்திருக்க நேரமில்லை





விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

வலிதான் எங்கள் பிரச்னை: [illegible]

மைக்ரோஃபைன்ட் என்றால் என்ன? [illegible]

வேகமாக செயல்புரிகிறது — நீடித்த பயனைத் தருகிறது. [illegible]

நீக்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள் [illegible]

சாப்பிடும் அளவு: [illegible]

'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் புதிய மைக்ரோஃபைன்ட் அதி நவீனமான வலிநிவாரணியாகும்.



புதிய

மைக்ரோஃபைன்ட்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

A.G. 15.67 TA.

ஷாப்பிலிருந்து வராதது வேறு அவனுடைய வெறுப்பை அதிகமாக்கியது. கார் இருந்தால் அதில் இருந்தபடியே காத்திருக்கலாமே!

கடைசியாக ஒரு கலியாணப் பூசணிக் கீாய் உருண்டு வருவது போல் சேஷன் தன் பூதாகாரமான உடம்புக்கு ஒத்து வராத விரைவுடன் கட்டிடத்தை விட்டு வெளியே வருவது தெரிந்தது. ரகுபதி நிதானித்தான். பின்னலேயே சந்தானமும் தொடர்ந்து வந்துவிட்டால்?

தான் இறங்கிய பிளாட்பாரத்தின் வழியாகவே சேஷன் நடந்து செல்வதைக் கண்ட ரகுபதி அதே திசையில் நடக்கலானன். இரண்டு மூன்று பெரிய கட்டிடங்களைத் தாண்டிய பிறகு, ரகுபதி திரும்பிப் பார்த்து, சந்தானம் தெருவில் எங்கும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்ட பின், ''சேஷா!'' என்று கத்தினன்.

பழக்கப்பட்ட குரல் காதில் விழுந்ததுமே சேஷன் நின்று, அழைப்பு எந்தத் திசையிலிருந்து வருகிறது என்று திரும்பினன். ஆனல் அவன் கண்டு பிடிப்பதற்குள், ரகுபதியே விரைந்து, தெருவைக் கடந்து, அவனைச் சந்தித்தான்.

''ஓ நீங்களா சார்? ரகுபதி சாரா? இருங்கோ. கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்க்கிறேன். யாரோ நீங்க ஹைதராபாத்துக்குப் போயிருக்கிறதாச் சொன்னர்களே!'' என்றன் அவன். உள்ளூற அவன் மனம், 'முட்டாள் மனம்' வேலை செய்து கொண்டிருந்தது. சந்தானம் யாரைப் பற்றிய தகவல்களைக் கேட்டிருந்தானே, யார் வெளியூர் போயிருப்பதாகத் தன்னுள் அப்போது முணுமுணுத்துக் கொண்டிருந்தானே அவனே இப்போது கண் முன் நிற்கிறன். சேஷனுக்கு இரண்டு பக்கத்திலும் ஆதாயம்! சந்தானம் ஏதோ சந்தேகிக்கிறன் என்று ரகுபதியைப் பயமுறுத்த நல்ல வாய்ப்பு! இல்லாத தகவல்களை யெல்லாம் மாற்றி மாற்றி இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை சந்தானத்திடம் சொல்லிப் பத்து இருபது என்று அம்மா பெயரைப் பயன்படுத்திக் கறந்துவிட வேண்டும். இனிமேல் ரகு தான் வழங்கும் 'கிர் கிர்' பானத்துக்குக் கண்டிப்பும் கருருமாகப் பணம்கூடக் கேட்க மாட்டான்! ஒரு பிளுயல் பாட்டிலுக்குக்கூட ஒரு ரூபாய் வாங்கினவன் அல்லவா இந்த ரகுபதி!

''என்னடா, ஆணி அடிச்சவன் மாதிரி நின்னுட்டே? வா என்னேடு.''



டூத் பிரஷ் 1870-ம் ஆண்டில் வில்லியம் ஆடிஸ் என்ற சிறைக் கைதி ஒருவரால் கண்டு பிடிக்கப் பட்டது. எப்படி? அவருடைய சாப் பாட்டில் அகப்பட்ட எலும்புத் துண்டு ஒன்றில் தரை தேய்க்கும் பிரஷ் ஒன்றிலிருந்து சில நார்களை எடுத்துப் பொருத்திப் பல் தேய்த்துப் பார்த்தாராம். பிறகு விடுதலை ஆனாலும் பிரஷ்கள் செய்து விற்கத் தொடங்கினராம்.

'பாபு'

''ஸயன்ஸ் டைஜெஸ்ட்''

''டூரிலே நீங்க போகலேன்னு தெரிஞ்சவுடன் என் புத்தி எங்கேயெல்லாமோ போக ஆரம்பிச்சுடுத்து!''

''அது இப்போ எங்கே போயிருக்கோ அங்கேதான் போகப் போகிறேம். வா, போகலாம்.''

''முதல்லே 'லைட்டா' ஏதாவது டிபன் சாப்பிடணும்.....'' என்று செல்லப் பெட்டியைத் திறந்தான் சேஷன்.

''சரி வா.... அதுக்கு இப்பவே ஏன் சீவலை எடுக்கறே?''

''ஞாபக மறதி!'' என்று சேஷன் சிரித்தான். தன் எதிர்பாராத அதிர்ஷ்டத்தையும், மனத்தில் உருவாகிக் கொண்டு வரும் திட்டத்தையுமே நினைத்து, நினைந்து அவன் பரவசமடைந்தான்.

டிபன் சாப்பிட்ட பிறகு இருவரும் நுங்கம்பாக்கத்துக்கு ஒரு டாக்ஸியில் சென்றர்கள். பின் ஸீட்டு முழுவதையும் அடைத்துக் கொண்டு சேஷன் உட்கார, டாக்ஸியே பாரம் தாங்காமல் கண்ணீர் சிந்திப் பெருமூச்சு விடுகிறது என்று எண்ணின ரகுபதி, டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான். என்ன வந்தாலும் இந்தச் சேஷனை மட்டும் அவன் தன்னுடைய சொந்தக் காரில் ஏற்றிக் கொள்ள மாட்டான்!

வீட்டை அடைந்ததும், சேஷனைப் பார்த்துப் பார்த்துப் பழகி இருந்த 'ராஜபாளையம்', 'இந்த ஆளிடம் ஒரு மாதத்துக்கு வேண்டிய சதை இருக்கிறதே' என்று பெருமூச்சு விட்டு விட்டு, பழைய தோஷத்துக்காக வாலை ஆட்டியது. என்னதான் அது அவனை அறிந்து வைத்திருந்தாலும் சேஷன் அதை நம்பத் தைரியமில்லாமல் ஒதுங்கியே நடந்தான்.

படுக்கை அறையில் பிரம்பு நாற்காலியில் 'பொத்'தென்று சேஷன் உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் சாத்தப் பட்டிருந்த அலமாரியையே

வெறித்துப் பார்த்தன. அதற்குள் என்னென்ன புதுச் சரக்குகள் இப்போது இருக்கின்றனவோ?

கால் மணி நேரத்துக்கு ரகுபதி வரவில்லை. உடுப்புக்களை மாற்றிவிட்டு, யாரோ ஒருவருக்கு போன் செய்து கொண்டிருந்தான் அவன்.

பொறுமை இழந்து கொண்டிருந்த சேஷனுடைய மனத்தில் திடீரென்று ஒரு கேள்வி எழுந்தது. என்றும் இல்லாத திருநாளாக இன்று ஏன் இந்த ரகுபதி ஆபீஸ் வரையில் வந்து, காத்துக் கொண்டிருந்து அவனை இங்கே அழைத்து வந்திருக்கிறான்? சந்தானம் அங்கே இவனைப் பற்றிய தகவல்களைக் கேட்டிருக்கிறான்! ரகுபதியைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று பொய் சொல்லி வந்து அரை மணி நேரம் கூட ஆகவில்லை! ரகுபதியே அல்லவா கண் முன் நிற்கிறான்!

ஒருவேளை சந்தானத்துக்கும் ரகுபதிக்கும் இடையில் ஏதாவது பூசல் இருக்கிறதோ? அல்லது தேவி கம்பெனியிலிருந்து 'டிஸ்மிஸ்' ஆன இந்த ரகுபதியின்மேல் தீர்க்கப்படாத கேஸ் ஏதாவது பாக்கி இருக்கிறதோ? அதை இப்போதுதான் கம்பெனியிலே முதலாளியும் சந்தானமும் கண்டுபிடித்திருக்கிறார்களோ? அப்படியெல்லாம் இல்லாவிட்டால் திடுதிப்பென்று சந்தானம் விசாரிப்பானேன்?

'இங்கே ரகுபதி இழுத்து வந்திருக்கிறான்!

அங்கே ரகுபதியைப் பற்றி விசாரிக்கிறார்கள்!

ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும்! அது என்ன?'

எந்த அளவுக்குச் சேஷன் இதையெல்லாம் தன் சாதகத்துக்கும் அனுகூலத்துக்கும் லாபத்துக்கும் பயன்படுத்திக் கொள்ள முடியும்?

திடீரென்று, ''ஐ ஆம் வெரி ஸாரி!'' என்று கூறிக்கொண்டே ரகுபதி பிரவேசித்தான். ஆனால் குரலில் மன்னிப்பின் எதிரொலிகூட ஒலிக்கவில்லை. 'முட்டாள்' சேஷனும் அவனுடைய 'வெரி ஸாரி'யில் மயங்கிப் போய்விடவில்லை.

''பரவாயில்லை சார்! எனக்கு ஒரு வேலையும் கெட்டுப் போறதுக்கு இல்லை!'' என்றான் அவன்.

''பர்ஸ்ட் ஸீன் முக்கியமான பேச்சு; ஸெகண்ட் ஸீன்லே 'உன்' விஷயம்!'' என்றான் ரகுபதி.

''ஸீனை மாத்த முடியாதா?''

''ஊஹூம்.... இரண்டாம் ஸீனை முதலிலே வைச்சண்டா, முதல் ஸீனே நடக்காது.... நீ உருண்டு புரள ஆரம்பிச்சுடுவே!'' என்று சிரித்த அவன்

''சந்தானம் எப்படி இருக்கிறான்?'' என்று கேட்டான்.

கேள்வியே ஒரு கணம் சேஷனை அதிர வைத்தது. அன்றுதான் சந்தானமும் ரகுபதியைப் பற்றி விசாரித்திருக்கிறான்!

''நன்றாகத்தான் இருக்கார்...''

''அவனுக்குக் கலியாணம் ஆகவில்லை இல்லியா?''

''எனக்குத் தெரிஞ்சு ஆகவில்லை..''

''கலியாணம் ஆகாத பெண்கள் இருக்கிற வீட்டிலே அவன் பேயிங் கெஸ்டாயிருக்கிறான், இல்லியா?''

''ஆமாம்...''

''அவர்களிலே ஒருத்தியை அவன் கலியாணம் பண்ணிண்டாலும் பண்ணிக்கொள்ளுவான்....இல்லையா?''

''ஊஹூம்... அந்த மாதிரி எண்ணம் இருப்பதாகத் தெரியல்லே.''

''என்னமாச் சொல்றே?''

''இந்தக் கேள்விக்கு என்னாலே ஒரு வார்த்தையிலேபதில் சொல்லமுடியாது. ஒரு ராத்திரி முழுதும் வேணும்...''

''உனக்கு ஒரு ராத்திரி கொடுத்தால், வாயிலேந்து பேத்தல்தான் வரும்!'' என்ற ரகுபதி, ''இப்போ அந்த மூணு பேரிலே மூத்த பெண்ணை எனக்குப் பார்த்திருக்கிறார்கள்!'' என்றான். நிதானமாக வந்தன வார்த்தைகள்.

''என்ன, உங்களுக்கா!'' அதிர்ச்சியினால் சேஷன் நாற்காலியிலிருந்து எழுந்து விட்டு, மீண்டும் விழுந்தான்.

''உனக்குத் தூக்கி வாரிப் போடறதா? ஏன், நான் கலியாணம் பண்ணிக்கொள்ளக் கூடாதா?''

'' உங்களுக்கு .... உங்களுக்கு.....'' ஏதோ ஆரம்பித்தவன், நாக்கைக் கடித்துக்கொண்டான். திடீரென்று ஒரு யோசனை மின்னலைப் போல் எழுந்தவுடன் பிறகு ''ஏன் பண்ணிக்கொள்ளப்படாது! அவசியம் பண்ணிக்கணும். நீங்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் வேறு யார் பண்ணிக் கொள்ளுவார்கள்... சொல்லுங்கள் ஸார், மேலே சொல்லுங்கள்'' என்றான்.

''அந்தக் குடும்பத்துக்கும் இஷ்டம் இருக்கு... பெண்ணை அவன் வேலை செய்கிற ஆபீஸிலே பார்த்த எனக்கும் ஒரு பிடித்தம் இருக்கு... ஆனால்...''

''என்ன ஆனால்?... சந்தானம் முட்டுக்கட்டை போடப் பார்க்கிறானா?''

''ஆமாம்!'' என்று தலையசைத்த ரகுபதி அலமாரிப் பக்கம் போனான்.

சேஷன் நாக்கில் ஜலம் ஊறப் பொறுமையைக் கையில் பிடித்துக் கொண்டு, ரகுபதி அலமாரியை எப்போது திறப்பான் என்று எதிர்பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். **(தொடரும்)**


உங்கள் குழந்தையின் அழுகையை
நிறுத்தி, சிரிக்கச் செய்ய,
மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுங்கள்.
அனுபவமிக்க அன்னையர் குழந்தையின்
முதல் வயதில் ஏற்படும் சாதாரண உடற்
கோளாறுகளைச் சரி செய்ய மானேர்ஸ் க்ரைப்
மிக்ஸரையே நம்புகின்றனர். ஒரு டீ ஸ்பூனளவு
மானேர்ஸ் க்ரைப் மிக்ஸர் ஒழுங்கான
இடைவேளைகளுக்கிடையே தரப்படுவதால்
குழந்தையின் மென்மையான ஜீரண சக்தி
சீரான நிலையில் இருக்க முடிகிறது
• வயிற்று உப்புசத்தையும் காற்றையும் அகற்றுகிறது.
• அஜீரணத்தை—குறிப்பாக பல் முளைக்கும் பருவத்தில்—தடுக்கிறது.
• குடல் வலியையும், வயிற்று வலியையும் குணப்படுத்துகிறது.
• ஜீரணேந்திரியங்களைச் சமனப்படுத்தி, நித்திரையை அளிக்கிறது.
Geoffrey Manners & Company Limited



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 11

ஞான நிலவு!

வேலவன் கோதையும் அழலாடியும் நடுகல்லுக்கு முன்னால் நின்று ஒரு விநாடி தயங்கினார்கள். உயிரற்றுச் சரிந்த சூலபாணிக் கிழவரின் உடலை அப்படியே தாங்கிப் பிடித்து அந்த நடுகல்லுக்கு அருகிலே சாத்தினார்கள். அவர்கள் இருவருக்கும் உடம்பு புல்லரித்தது.

இதயத்தில் அமைதி உண்டாகி அந்த அமைதியும் உள்ளத்தின் நிறைவுமே ஆன்ம விடுதலைக்குக் காரணமாக அமையுமானால், அந்த



கைய மரணத்தின் தன்மையை எப்படிச் சொல்வது! கிழவரின் மரணம் அப்படியிருந்தது!

''தம்பி! கிழவரின் முகத்தில் தவழ்கிற அமைதியைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் துயரத்துக்கு மாறாக ஒரு பேரன்பு மேலிடுகிறது! சென்ற வினாடி வரை நம்முடைய கண்ணுக்கு முன்னால் மனித உருவிலே நின்ற கிழவர் இப்போது கடவுளாகக் காட்சி தருகிறார்!''

அழலாடியிடம் இவ்வாறு கூறினான் வேலவன்.

கிழவரின் உடம்பைத் தொட்டு அந்த மனிதக் கடவுளுக்கு வணக்கம் செலுத்தினார்கள் அரச வீரர்கள்!

கோசர்குலத் தலைவனின் நடுகல்லுக்குக் காணிக்கை செலுத்தி வழிபாடு நிகழ்த்துவதற்காகக் காட்டுக்குள்ளே சென்ற வீரர்கள், இப்போது இன்னொரு நடு கல் நாட்டுவதிலே ஈடுபட்டார்கள்.

காட்டின் எல்லையிலே நின்ற பல வீரர்களும் இப்போது அங்கு வந்து கூடினார்கள்.

வேலவன் கோதை அழலாடியை நோக்கிச் சொன்னான் :

''தம்பி! இந்த நடுகற்காடு இனிமேல் கோசர் குலத்துக்கு மட்டுமல்லாமல், சேரர் குலத்துக்கும், கிளைச் சுற்றங்களுக்கும், நம்முடைய உறவினர் அனைவருக்குமே வழிபாட்டுக்குரிய ஒரு புண்ணிய நன்னிலமாக நின்று நிலவும். அரசர்களும், போர் வீரர்களும், மல்லர்களும் இனி இந்த நடுகல் நிலத்துக்கு வந்து வழி வழியாகத் தங்கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்தி வழிபடுவார்கள். மும்முனைப் போரின் வெற்றியோடு சேர்த்து, இந்த நடுகல் வழிபாட்டுத் திருவிழாவும் அன்


மகிழ்ச்சியூட்டும்
பஜாஜ் பிரெஷர் குக்கர்
உபரியாகவே சமைக்க வசதியுடையதும் ஒரே துண்டாகவுள்ளதுமான குக்கர், மூன்று நிலையிலுள்ள காற்றழுந்த ஒழுங்கு விசை மற்றும் நய உலோகத்தில் செய்த ஸேப்டி பிளக்.
ஐந்து ஆண்டுகளுக்கு உத்தரவாதமுடையது.
பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர்நாரிமன் ரோடு, பம்பாய்-1.
இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு.
heros' BE-4 TAM

போடும் ஆர்வத்தோடும் இந்தப் புண்ணியத் திருவனக்கிலே கொண்டாடப் பெறும். கோசர் குலத்துக்கு என்றோ ஒரு நாள் நேர்ந்த பெண் பழி, அரசக் குற்றங்களையெல்லாம் சேர்த்து வளைத்துப் பிடித்துத் தன் புறத்தாதவாறு இனிமேல் நம்முடைய வழிமுறைக்கெல்லாம் பாதுகாப்பாகவும் உறுதுணையாகவும் இந்த நடுகல் வீரர்கள் அருவமாகவும் கல்லுருவமாகவும் நின்று விளங்கி வாழ்த்திக் கொண்டே இருக்கப் போகிறார்கள்! இது உறுதி!''

இவ்வாறு கூறினான் வேலவன் கோதை.

வழிபாட்டுச் சடங்குகள் எல்லாம் முறைப்படி முடிந்ததும், வீரர்கள் துளுநாடு திரும்பினார்கள். அதைத் தொடர்ந்து, சந்திரனுடைய வளர்ச்சியும் தேய்வுமாக வான மண்டலத்திலே நிகழும் பதினைந்து இரவுகளிலும், தமிழர்களின் தொன்மையான முறைப்படி சூலபாணிக் கிழவருக்கு அழலாடி ஆன்ம வழிபாடு நிகழ்த்தினான். பதினாறுவது நாளன்று நடுகல்லுக்கு வந்து இறுதிக் கடமைகளை முறைப்படி நிறைவேற்றினார்கள் வேலவனும் அழலாடியும்! அன்று இரவு ஆதன் ஆசிரியரும் இவர்களோடு உடனிருந்தார்.

'அறுபது நாழிகை நேரத்துக்குள் ஆதனார் அல்லது அவருடைய சாம்பல் தன் முன்பு வந்தாக வேண்டும்' என்றல்லவா தன்னுடைய வீரர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான் மிஞிலி. அந்தக் கொடிய நிகழ்ச்சிதானே, மும்முனைப் போருக்குக் கட்டியமாக அமைந்தது! அதன் முதிர்ச்சிதானே நிலைச் செருவாக நடந்து இத்தனை பெரிய வெற்றிக்கு வித்தாகப் பதிந்தது! இப்போது அதே அந்த ஆதன் ஆசிரியர் தமது மற்கூடம் பாதுகாக்கப் பெற்றதோடு தமிழ்நாடு முழுவதுமே கொடுங்கோன்மையிலிருந்து தப்பியது என்ற மாபெரும் வெற்றியை மாணவர்களோடு கொண்டாடி மகிழத் துளுநாட்டு அரண்மனைக்கு வந்தார்.

''தம்பி! நிறைந்த வயதில் நிறைந்த மனத்தோடு நம்மைப் பிரிந்து சென்றிருக்கிறார் சூலபாணிக் கிழவர். அது ஒரு புண்ணிய மரணம். அது பற்றித் துயரம் அடையாதே. கோசர்குலத்துக்கு நேர்ந்த பழியைத் துடைத்து நன்னனை உனது வாளுக்கு ஈந்து உன் உறுதியை நீ நிறைவேற்றி விட்டாய். ஆனால் மிஞிலியின் உடம்பிலே புகுந்த வாள் யாருடைய வாளாக இருக்கும் என்பதுதான் உங்களுக்குப் பெரிய புதிராக இருக்கிறது. அப்படித்தானே?'' என்று கேட்டார் ஆதனார்.

''ஆசிரியரே! எனக்கு ஒன்று தோன்றுகிறது. துளுநாட்டு அரண்மனையின் உட்செய்திகளை அறிந்துள்ள முறையிலே எனக்குத் தோன்றுகிறது என்னவென்றால், தப்பி ஓட முயன்ற மிஞிலியைத் துளுநாட்டு இளவரசர் இளநன்னரே தம்முடைய வாளுக்கு இரையாக்கியிருப்பார். ஊழ்வினை மிஞிலியை இளவரசருடைய கையிலே கொண்டு அப்படி மாட்டியிருக்கும் என்று நினைக்கிறேன்!'' என்றான் அழலாடி!

''கொன்று தீர்த்த இளநன்னன் அந்த வாளை எங்கோ ஒரு மறைவிடத்திலே கொண்டு பேணி வைப்பதற்காக அரண்மனைக்குள் சென்றிருக்கிறான். அந்த வேளையிலேதான் இளவரசனை எங்கே என்று தேடியிருக்கிறார் கொங்குச் சேரர். இளவரசன் இளநன்னன் உங்களையெல்லாம் போல் போர் முறைகளில் நன்கு பயின்றவனில்லை. என்றாலும் அவனுக்கும் மிஞிலியைப் பழி வாங்க வேண்டும் என்ற ஓர் எண்ணம் எங்கோ உள்ளத்தின் ஓர் ஓரத்தில் உறுதியோடு பதிந்திருக்கிறது. அதை எப்படி நிறைவேற்றி, அந்த வாளை எங்கே எதற்காக மறைத்து வைத்திருக்கிறான் என்பதும் எதிர்காலத்திலேதான் தெரியவரும். எனக்கு இதிலே ஒரு பெரிய மனக்களிப்பு என்னவென்றால், மூன்று பேருடைய வீழ்ச்சிகளிலும் மூன்று வகையான பொருத்தம் இருக்கிறது. இந்தத் தமிழக அரச அரங்கிலே மூன்று கொடுங்கோலர்கள், மூன்று வகையிலே கயமை நிகழ்த்தினார்கள். இப்போது இந்தத் தமிழக மறுமலர்ச்சிக்காக மூன்று கொடுங்கோலர்களையும் போர்க் கடவுளுக்குக் காவு கொடுத்திருக்கிறோம். அந்த மூன்று உயிர்களையும் மூன்று வெவ்வேறு வீரக் கரங்கள் பழி தீர்த்திருக்கின்றன. மூன்று வீரக் கைகளுக்கும் இந்த மூன்று உயிர்களுக்கும் இடையே ஒரு வஞ்சினம் இருந்து, அந்த வஞ்சினமே மும்முனைப் போரிலே நமக்கு வெற்றியைத் தேடித் தந்துள்ளது என்று எண்ணி எண்ணி நான் களிப்படைகிறேன்!'' என்றார் ஆதனார்.

வேலவன் கேட்டான் :

''ஆசிரியப் பெருந்தகையே! கோசர் குலத்தின் சூளுரையை நிறைவேற்ற எண்ணி, அழலாடி தனது வாளால் நன்னனுடைய உயிரைக் களைந்தது சரி என்பதைத் தமிழகம் முழுதும் அறியும். அதுபோல —''

ஆதனார் இடைமறித்தார்.



அரை நிமிஷத்தில் ஆறு சப்பாத்திகள்!

அரிசி கிடைக்காத இந்தச் சப்பாத்தி யுகத்தில் மணிக் கணக்காய் ஒவ்வொரு சப்பாத்தியாக இடுவதைத் தவிர்க்க ஒரு சுருக்கு வழி:

குழவியின் நீட்டத்திற்குத் தக்கபடி வரிசைக்கு 2 அல்லது 3 உருண்டைகளாய் 2 அல்லது 3 வரிசை வைத்து ஒரே சமயத்தில் 4 முதல் 9 உருண்டை வரை இடலாம். முதலில் சற்று சிரமமாயிருந்தாலும் நாளடைவில் கை பழகப் பழக இம்முறை சுலபமாகி விடும். இப்படி உருண்டைகளை உள்ளங்கை அகலத் திற்கு இட்டபின் சப்பாத்தியானால் ஒவ்வொன்றிலும் தனித்தனியே நெய் தடவி முக்கோணமாய் செய்து கொள்ளவும். சாதாரண ரொட்டியானாலும் சின்னஞ்சிறு வட்டங்களை மேலே சொன்னபடி செய்து வைத்துக் கொள்ளவும்.

கடையிலிருந்து சாமான் கட்டி வரும் நடுத்தர அளவான பாலிதீன் (பிளாஸ்டிக்) கவர்களில் ஒன்று அல்லது இரண்டு எடுத்து ஒவ்வொன்றுக்குள்ளும் ஒரு முக்கோணம் அல்லது வட்ட உருவத்தை வைக்க வும். இவை எல்லாம் ஒரே அளவில் இருப்பது மிகவும் அவசியம்.

முதலில் ஒரு முக்கோண சிறிய ரொட்டியை மாவு தோய்த்துப் பலகை மேல் வைக்கவும். இதன் மேல் ஒரு பாலிதீன் கவரை (அதற்குள் சிறிய ரொட்டி யுடன்) வைத்து, கவரின் மேல் மீண்டும் ஒரு ரொட்டி பண்ணவும். அதன் பின் மூன்றையும் எடுத்து மாவு தோய்த்துத் திருப்பிவைத்து முன் போலவே ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து இடவும். இம்முறையால் ஒரே சமயத்தில் சுலபமாய் ஒன்றோடொன்று ஒட்டாமல் 3 ரொட்டிகள் தயாரிக்க முடியும். கை பழகப்பழக 5, 7 ரொட்டிகள் கூட ஒரே சமயத்தில் இடலாம்.

இப்படி இட்ட ரொட்டிகளில் முதலில் ஒன்றைக் கல்லில் போட்டு 2 பக்கமும் திருப்பி அது சற்றே பொரிந்ததும் அதன் மேல் மற்றொன்றையும் போட லாம். இதுபோல் இரண்டிரண்டாய், கல்லில் போட்டுப் பிறகு அடுப்பில் வாட்டிச் சுலபமாய், குறைந்த நேரத்தில் ரொட்டி தயாரிக்கலாம்.

(அனுபவத்தில் கண்டு எழுதியது) - மீனு சங்கர்

"பொன்மனியிடம் சூள்உரைத்துப் புறப்பட்டான் அழகாடி. அவனுடைய வாளுக்கு இரையாயிற்று நன்னன் உயிர். அதுபோலவே வேலவன்கோதை யின் அம்புக்குக் கடம்பன் பலியானதும் ஊழ்வினை செய்த சூழ்ச்சி! தந்தை யைக் கொன்ற கடம்பன் தனய னுடைய அம்புக்குத் தன் உயிரை ஈந்தான். நம்முடைய தமிழகத் துறவிகள் எல்லாம் ஊழ்வினையின் விளைவு என்று சொல்வதன் பொருளே இதுதான். இது போலவே இளநன்ன னுடைய வாளுக்கு மிஞிலி இரை யானதிலும் ஏதோ ஒரு நுட்பம் இருக்கிறது. அது படிப்படியாகத்தான் தெரிய வரும். ஒரு வேளை செவ்வந்தி அடிகளை நாம் எல்லாரும் சந்திக்கும் போது ஊழின் இந்த விளைவுகளை யெல்லாம் நமக்கு அவர் விளக்கமாக எடுத்துச் சொல்லுவார் என்று நினைக் கிறேன். ஏனென்றால் பெருந்துருத்தித் தீவிலும், வெள்ளைத் தீவிலும் உள்ள சாக்கியப் பள்ளிகளிலும், சமணக் கழகங் களிலும் இந்த ஊழ்வினையின் அடிப் படையை விளக்கம் செய்கிற எத்தனையோ பல ஏட்டுச் சுவடிகள் அறிவுக் கருவூலங்களாகத் திகழ் கின்றன. இந்தச் சுவடிகள் எல் லாம் வருங்காலத்தில் அழிந்துவிடாத படி இவற்றைப் பகைவரைக் கனல் எரித்து விடாமலும், காலப் புனல் அடித்துக் கொண்டு போய்விடாம லும் காப்பாற்ற வேண்டிய பணிதான், நீங்கள் இந்தத் தீவுகளின் மறுவாழ் வுக்காகச் செய்யப் போகும் அரிய அரசப் பணிகளிலே முதன்மையான பணியாகும். மும்முனைப் போர் நடந்து நாடெங்கும் போராட்டப் புகை சூழ்ந்து கவிந்து நின்ற நேரத்தில் எல்லாம், நம்முடைய துறவிகளையும் நம்முடைய அரசச் சுற்றத்தார்களை யும், பெண்டிர்களையும் முதியோர்களை யும் காப்பாற்றிய பெருந்துருத்தித் தீவு, இனி நாது தமிழகத்து ஞானச் செல்வங்களையெல்லாம் பாதுகாத்து நிற்கக்கூடிய காவற்றீவாக விளங்க வேண்டும் என்பதே என்னுடைய மனப்பூர்வமான ஆசை!"

ஆம்; ஆதனூர் சொன்னபடி மும் முனைப் போரின் போது அரசச் சுற்றத் தார்களுக்கும் அரண்மனைச் சுற்றத்தார் களுக்கும், பாதுகாப்புத் தந்து நின்ற மாநிலம் பெருந்துருத்தித் தீவேயாகும்.

மும்முனைப் போர் நடந்து கொண் டிருந்த அத்தனை காலமும் செவ்வந்தி அடிகளுடைய தலைமையிலே இயங்கிய அறச் சாலைகளும் தவக் கூடங்களும் போரின் வெற்றிக்காக வழிபாடு நடத்திய வண்ணம் இருந்தன. தமிழ் நாட்டின் சமயப் பிரிவுகள் பலவற்றை யும் சார்ந்த பெரியோர்கள் தமிழ் மன்னர்களின் அறம் வெல்ல வேண்டும் என்று வானத்துக் கடவுளரை வையத் திலே வரவேற்று வழிபட்டார்கள்!

பெருந்துருத்தித் தீவைச் சுற்றிப் பல சிறிய சிறிய பவளத் தீவுகள் இருந்தன. இந்தத் தீவுகளில் எல்லாம் சேர மன்னர்களும் இவர்களுடைய கிளைச் சேரர்களும் குறுநில மன்னர்களும் வேனிற்காலத்திலே வந்து தங்குவதற் காக என்றே பல மாடங்களும் இலவந்திகைகளும் இருந்தன. இவற்

வெற்றி பெறுங்கள் ரூ.12,000

176 ரொக்கப் பரிசுகளாக:

கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டி!



உங்கள் குழந்தையின் புகைப்படம் உங்களிடம் உள்ளதா? இப் போட்டியில் கலந்துகொண்டு 176 பரிசுகளில் ஒன்றைப் பெறலாமே! அனுப்பவேண்டியவை இரண்டு பிரிவுகள்: 1½ வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் புகைப்படங்கள். 1½ முதல் 3 வயதுவரை உள்ள குழந்தைகளின் புகைப்படங்கள்! **ஒவ்வொரு பிரிவிலும் 88 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:**

முதல் பரிசு – ரூ. 1,000; இரண்டாம் பரிசு – ரூ. 500;
மூன்றும் பரிசு – ரூ. 250;

85 பரிவுப் பரிசுகள் – ஒவ்வொன்றும் ரூ. 50

இப் போட்டியில் கலந்துகொள்வது எளிது:
இத்துடனுள்ள விதிகளையும் முறைகளையும் கவனமாகப் படித்த பின், கீழேயுள்ள பிரவேச கூறுவைக் கத்தரித்தெடுத்து, அதனைப் பூர்த்தி செய்து, கூடவே புகைப்படத்தையும் ரொக்க ரசீதையும் இணைத்து, தபாலில் அனுப்பினால் போதும்!

வெற்றிபெறும் அரிய வாய்ப்புக்கள் ஏராளம்! இப்போதே இவ் விளம்பரத்தைக் கத்தரித்து வைத்துக் கொள்ளுங்கள் — உடனே கலந்துகொள்ளுங்கள்!

விதிகளும் முறைகளும்

1. இந்திய யூனியனில் வசிப்போர் மட்டுமே இப் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

2. கால்கேட்-பாமாலிவ் (இந்தியா) லிமிடெட், மற்றும் கிராண்ட் அட்வர்டைசிங் இன்டர்நேஷனல் இன்கார்பொரேடெட் ஆகியவற்றின் ஊழியர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. 1967-ல் எடுத்த புகைப்படங்களே, கீழ்க்காணும் இரு பிரிவுகளில் ஒன்றுக்கு அனுப்பப்பட வேண்டும்: (அ) 1½ வயதுக்கு உட்பட்டவை. (ஆ) 1½ முதல் 3 வயது வரை. ஒவ்வொரு பிரிவும் தனித்தனியே மதிப்பிடப்படும். ஒவ்வொரு பிரிவிலும் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்: முதல் பரிசு – ரூ.1,000; இரண்டாம் பரிசு – ரூ.500; மூன்றும் பரிசு – ரூ.250; 85 பரிவுப் பரிசுகள், ஒவ்வொன்றும் ரூ.50.

4. புகைப்படங்கள் மொத்தக் கவர்ச்சி உள்ளதா என்ற நோக்கிலேயே மதிப்பிடப்படும்.

5. 8அங்.×6அங். அளவுக்கு மேற்படாத, சாதாரண (Black & White) புகைப்படங்களே அனுப்பப்பட வேண்டும். புகைப்படத்தின் பின்புறம் குழந்தையின் வயதும் பிரிவும், கலந்துகொள்பவரின் பெயரும் விலாசமும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும். புகைப்படங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. கால்கேட் பேபி பவுடர் பெரிய டப்பாவோ, இரண்டு சின்ன டப்பாவோ வாங்கியதற்கு அடையாளமாக அவ் வியாபாரியிடம் பெற்ற (ரூ. 2-க்கு மேற்பட்ட) அச்சிட்ட ரொக்க ரசீது ஒன்று, ஒவ்வொரு புகைப்படத்துடனும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அச்சிட்ட ரொக்க ரசீது இணைக்கப்பட்டிராத பிரவேச கூறுகள் நிராகரிக்கப்படும்.

7. ஒன்றுக்கு மேற்பட்ட புகைப்படங்களை நீங்கள் அனுப்பலாம். ஆனால் தனித்தனியே ஒவ்வொன்றுடனும் ஒரு ரொக்க ரசீதும், ஒரு பிரவேச கூறும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். கூடுதலான பிரவேச கூறுகள் தேவைப்பட்டால், பிரவேச கூறுவிலுள்ள விவரங்களை அப்படியே ஒரு சாதாரணத் தாளில் நகல் எடுத்து, அதையே பிரவேச கூறுவாகப் பயன்படுத்தலாம்.

8. பிரவேச கூறு ஆங்கிலத்திலேதான் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

9. உங்கள் பிரவேச கூறு/கூறுகள் 1967 ஜூன் 30க்கு முன்னதாய் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

10. மகாராஷ்டிர மாநில மாதர் மன்றத்தின் உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று, புகைப்படங்களை மதிப்பிட்டுத் தீர்ப்பு அளிக்கும். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது, கட்டுப்படுத்துவது — இது சம்பந்தமாக யாதொரு கடிதப்போக்குவரத்தும் மேற்கொள்ளப்படமாட்டாது.

11. பரிசு பெறுவோருக்குத் தபால் மூலம் தகவல் தரப்படும்.

ENTRY FORM

PLEASE FILL IN ALL THESE PARTICULARS IN ENGLISH USING BLOCK LETTERS:
Age Group: Under 1½ years, 1½ to 3 years. (Cross out whichever not applicable)

Name of Baby: ______________________ Date of birth ____________

Name of Parent/Guardian: ______________________

Address: ______________________

____

I have read the Rules and Regulations and agree to abide by them.

Signature: ______________________

YOUR ENTRY MUST REACH THE FOLLOWING ADDRESS BEFORE JUNE 30, 1967:
Colgate Baby Powder Photographic Contest K, Post Bag No. [illegible], Bombay 1

CBP-G-8 TM.

றில் எல்லாம் இப்போது அரசச் சுற்றத்தார்கள், முக்கியமாகப் பெண்டிர்கள், தக்க பாதுகாவலோடு வந்து தங்கியிருந்தார்கள்.

இவர்களிலே வஞ்சிச் சேரருடைய உற்ற உறவினர்கள் இருந்தார்கள். கொங்குச் சேரரின் சுற்றத்தார்களும், இவர்களைச் சேர்ந்த குறுநில மன்னர்களின் குடும்பத்தார்களும் பலர் இருந்தார்கள். உணவுப் படகுகளும், அரச மரக்கலங்களும் அடிக்கடி பாதுகாவற் படையோடு இந்தத் தீவுகளுக்கு வருவதும் போவதுமாக இருந்ததால், இந்த வட்டாரத்தில் நேரடியாகப் போர் நிகழா விட்டாலும் போரின் புகை, இந்தக் கடற்றீவுகளையும் கவிந்து நின்றது என்றே சொல்ல வேண்டும். ஆனால் இத்தகைய மன வேதனைகளுக்கும் போர் நடுக்கத்துக்கும் இடையிலே செல்வந்தி அடிகள் ஒவ்வொரு சிறிய தீவுக்கும் அடிக்கடி சென்று, அங்கிருந்த அரசச் சுற்றத்தார்களுக்கு ஆறுதலும் தேறுதலும் தந்து வந்தார். எனவே, அந்தப் பவளத் தீவுகளிலே அரசச் சுற்றத்தார்களின் கண் முன்பு செல்வந்தி அடிகள் ஒரு நடமாடும் கடவுளாகவே தோன்றினார்! அவருடைய முகத்திலே தவழ்ந்த ஞான நிலவு எத்தகைய போர் நடுக்கத்துக்கு இடையிலும் தண்மையும் அமைதியும் தந்து வந்தது!

பெருந்துருத்தித் தீவிலே தவச்சாலையின் விடுதிக் கூடத்திலே ஆதிரை அடிகளும், பொன்மணியும் அமர்ந்து போரைப் பற்றிப் பேசத் தொடங்கிப் பிறகு அதிலிருந்து மனித வாழ்வின் இன்ப துன்பங்களை வாதிடத் தொடங்கினார்கள். ஆதிரை அடிகளிடம் வழக்கம் போல் பொன்மணி தனது மன நிலையை, தனது மனக் கசப்பை எடுத்துச் சொல்லித் துறவு மேற்கொள்ள வேண்டும் என்ற தனது ஆசையை மறுபடியும் மறுபடியும், வெளியிட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். ஆதிரையம்மை வழக்கப்படியே தனது மறுப்பை மீண்டும் வலியுறுத்திச் சொன்னாள்:

''பொன்மணி, வாழ்க்கையில் ஏற்படுகிற கசப்பும் வெறுப்பும் மட்டும் போதாது, துறவு மேற்கொள்வதற்கு! துறவு என்னும் வறண்ட வாழ்க்கையில் மெய்யாகவே ஒரு நாட்டம், ஓர் ஆசை உண்டானால்தான் துறவு மேற்கொள்வதில் பொருள் உண்டு. யாரிடமோ கோபித்துக் கொண்டு துறவியாகி விட்டால், பிறகு அந்தக் கோபம் தணியும் காலத்தில் அந்தத் துறவு நிலையையும் துறந்துவிட வேண்டும் என்று ஓர் ஆசை உண்டாகிவிடும் அம்மா! கணவனிடம் சீற்றம் கொள்கிற பெண்கள் எல்லாம் துறவிகளாக மாறி விட்டால் இந்த உலகம் முழுதுமே ஒரு பெரிய துறவிகளின் சங்கமாக அல்லவா மாறிவிடும்! அது பிசகு!''

இவ்வாறு ஆதிரையம்மை சொன்னதும் பொன்மணி கூறுவாள்:

'' அம்மையே, நாளாக நாளாக என் கணவனிடம் ஏற்பட்ட சீற்றமும்



ஒரு நாட்டு அரசனின் கவனக் குறைவினால் நாடு சீரழிந்துகொண்டிருந்தது. நாட்டில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடுவதை அரசனின் கவனத்துக்குக் கொண்டுவர நினைத்தார் அமைச்சர்.

ஒரு நாள் அரசன் மகிழ்ச்சியோடு இருக்கும்போது, ''அரசே, ஒரு கதை கூறுகிறேன், கேளுங்கள்!'' என்று கூறிக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்:

''நம் தலைநகரிலே ஓர் ஆந்தை இருந்தது. அது அடுத்த நகரத்தில் உள்ள ஆந்தையிடம் 'உன் பெண்ணை எனக்கு மணம் முடித்துத் தா!' என்று பெண் கேட்டது.

அதற்கு அந்த ஆந்தை 'நூறு பாழடைந்த கிராமங்களைச் சீராகத் தருவதானால் என் மகளை உன் மகனுக்குத் தருகிறேன்!' என்றது.

உடனே பிள்ளையைப் பெற்ற ஆந்தை, 'அதற்கென்ன, கடவுளின் கிருபையால் எங்கள் நாட்டு அரசன் இன்னும் ஒரு வருடம் உயிரோடு வாழட்டும். நூறு என்ன, ஆயிரம் கிராமங்களாகவே நான் சீர் தருகிறேன். கொஞ்சம் பொறுத்துக் கொள்!' என்றது.''

மந்திரியின் கதையைக் கேட்ட அரசன் உண்மையை உணர்ந்து அமைச்சரின் சமயோசித அறிவைப் பாராட்டிவிட்டு, நாட்டு நலனில் அக்கறை காட்ட ஆரம்பித்தாரா? அல்லது ''மிண்டலா செய்கிறாய்?'' என்று கேட்டு மந்திரிக்கு மரண தண்டனை விதித்து உத்தரவு போட்டிருப்பாரா? யோசித்துக் கூறுங்கள்.

(விடை அடுத்த பக்கத்தில்)

மந்திரியின் கதி என்ன?

விடை: அரசன் அந்த இரண்டு காரியங்களையும்செய்யவில்லை. மந்திரியிடம், "நீயே நாட்டை நல்லபடியாக ஆண்டுகொள்" என்று கூறி ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக் கொண்டதாகக் கேள்வி!

தகவல்: —பார்வதி மணாளன்

நலியா ஆரம்பிக்கிறது. அன்போடு வந்து என்னைக் கைப் பிடித்த நாயகனைக் கை உதறினேன் நான். என்னுடைய குலத்தின் ஒரு கடமையைச் செய்வதற்காக அவர் நாடி வந்த சுகத்தை அவருக்கு மறுத்தேன். தவறு யாருடையது? என்னுடைய கொள்கையிலே எனக்கிருந்த உறுதியிலே அவருடைய அன்பை நான் புறக்கணித்தேன். இந்நிலையில் எதற்காக அவர் என்னிடம் அன்பு செலுத்த வேண்டும்? எனக்காக அவர் ஏன் நன்னனைப் பழி வாங்க வேண்டும்? நான் தந்த அன்புக்கா? நான் அவரிடம் பொழிந்த காதலுக்கா? திருமணம் ஆன தருணத்தில் மாலையிட்ட மன்னனைத் தொடக் கூடாது என்று கூறுரைத்தேனே, அந்தச் செயலுக்காக அவர் என்னிடம் அன்பு செலுத்தி, எனக்காக ஒரு பெரிய மன்னனைப் பழி வாங்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்தது அறிவுடைமை ஆகுமா? என்னைக் கைப் பிடிப்பதற்காக, என்னை மணப்பதற்காக எத்தனை உறுதியோடு எத்தனை ஆற்றலோடு களத்திலே பாய்ந்து ஒரு காளை மாட்டை மடக்கி, வெற்றிபெற்று அதன் பிறகு என்னைக் கைப் பிடித்தார்! அந்த அரிய செயலுக்கு அந்த மாபெரும் வீரத்துக்குப் பரிசாக நான் என்ன கொடுத்தேன்? என்னை நாடி வந்தவரை உதறினேன். அன்பைப் பொழிய வந்தவரை அசட்டை செய்தேன். என்னை அடைவதற்காக ஒரு மாக்காளையிடம் உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டது போதாது என்று, மறுபடியும் ஒருமன்னனின் உயிரைக் கொண்டு வரும்படி உறுதி கேட்டேன். சிந்தித்துப் பார்த்தால் எத்தனை சுயநலத்தோடு அவரிடம் நடந்து கொண்டிருக்கிறேன் நான்! இத்தனை தவற்றையும் பொறுத்துக் கொண்டு எனக்காக அவர் துளுநாடு சென்றார். சென்ற இடத்தில் ஏதோ எதிர்பாராத ஒரு சந்திப்பு நேர்ந்திருக்கிறது. அன்பை நாடிய இளைஞருக்கு அன்பை நாடிய இன்னொரு சந்திப்பு கிடைத்திருக்கிறது. இதில் தவறென்ன? எத்தனை நாள் என்னோடு பழகி என் உள்ளத்தைத் தெரிந்து அதன் பிறகு எனக்கு வஞ்சகம் இழைத்தார் அவர்! திருமணம் என்ற ஒரு சடங்கு நடந்தது. புண்ணியமானது, புனிதமான சடங்கு தான்! ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் சடங்குதானே நடந்தது! எங்களுடைய உள்ளங்களுக்கிடையிலே அந்தச் சடங்கைத் தவிர உணர்ச்சிகளுக்குத் திருமணம் நேர்ந்ததா? ஏதோ வாழ்வு முழுவதும் ஒன்றாகக் கலந்து பழகிவிட்டுப் பிறகு எனக்கு வஞ்சகம் இழைத்து விட்டதுபோல் அவரிடம் சீற்றம் கொள்ள எனக்கு என்ன உரிமை உண்டு? என்னுடைய குலத்தின் புகழை மறுபடியும் இந்த மண்ணிலே நிலை நாட்டுவதற்காக அந்த உத்தமரைப் பயன்படுத்த முற்பட்டேன் நான்! வாழ்வினை என்னைத் தண்டிக்கிறது! அவருடைய இல்லறத்தைவிட என்னுடைய கோசர்குலத்துப் புகழ் முதன்மையானது என்று கருதினேன் அல்லவா, அந்தச் சுயநலத்துக்கு விதி என்னைத் தண்டித்தது. அப்படித்தான் நினைக்கிறேன் நான். மற்றப்படி அவரிடம் எனக்கு இப்போது சீற்றம் இல்லை. இருந்தது ஒரு காலத்தில். நாளாக நாளாக அது நலிகிறது. உங்களைப் போன்ற துறவிகளோடு பழகிப் பழகி, உங்களைப் போன்ற தூய உள்ளம் படைத்த பெரியோர்களுக்குத் தொண்டு செய்து செய்து, என் உள்ளத்திலும் ஒரு மாறுதல் உண்டாகி வருகிறது. அதை நன்றாக உணர்கிறேன் தாயே!" என்றாள் பொன்மணி.

ஆதிரை இந்த மொழிகளுக்கு மறுமொழி பேசவில்லை. பொன்மணியின் உள்ளத்தில் கடந்த சில நாட்களாக எத்தகைய சிந்தனைக் கனல் சுடர்ந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு மௌனமாக இருந்தார் அந்த முதிய துறவி. பிறகு சொல்லுவார்:

"பொன்மணி, துளுநாட்டிலே நடைபெறும் மும்முனைப் போரிலே சேரர்களுக்குத் துணையாகக் கொங்கு மன்னர்கள் ஆனைப் படைகளை அனுப்பியிருக்கிறார்களாம். அந்த ஆனைப் படையை அழலாடியே தலைமை தாங்கி நடத்திச் செல்லுகிறாராம். சில வேளைகளில் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? நன்னனுடைய மரணம் அழலாடியின் கையினாலேயே நேரப் போகிறது!"

ஆதிரையம்மை இப்படிச் சொன்னதும் பொன்மணி கூறுவாள்:

"அப்படி நேர்ந்தால் அந்த வெற்றிக்கு யார் காரணம்? நான்தான்!

அந்த ஒரு எண்ணமே போதும் எனக்கு. இப்போதே துறவு மேற்கொண்டுவிட லாம் நான் !''

''துறவா! மறுபடியும் அதே பேச்சுத் தானு ?'' என்று கேட்டாள் ஆதிரை.

''அம்மையே, சரியோ தவருே அவ ருடைய உள்ளத்தில் நான் இருந்த இடத்தில், நான் இருந்திருக்க வேண்டிய இடத்தில். இன்னெரு பெண் புகுந்து விட்டாள். அது என்னுடைய தவறிஞலா, அல்லது அவருடைய தவறிஞலா. அல்லது அந்தப் பெண் ணின் பொய்யான அன்பிஞலா என்பது பற்றிய ஆராய்ச்சியே அவசியம்இல்லை. அப்படி ஆராய்ந்து பார்ப்பதிலே இனி என்ன பயன் உண்டு ? அந்த உத்தம ருடைய உள்ளம் என்ற தவிசிலே நான் அமர்வதற்கு இடம் தந்தார். அமர மறுத்தது என் குற்றம். இன் ெெரு பெண் அதில் வந்து உட் கார்ந்து கொண்டாள். நான் அமர்ந் திருக்கும் இடத்திலே அவள் வந்து என் னைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு அவள் அந்த இடத்தைப் பற்றிக் கொண் டாளா? இல்லையே ! இந்நிலையில் — ''

''பொன்மணி நான் ஒன்று சொன் ஞல் கோபித்துக் கொள்ளமாட்டாயே?'' என்று கேட்டார் ஆதிரையம்மை.

''கோபமா? தங்களிடமா! எத்த கைய பாவம் அது!'' என்ருள் பொன் மணி.

''துறவு நிலைக்கு வேண்டிய மன அமைதி இன்னும் வரவில்லை அம்மா உனக்கு! ஏனென்ருல், நேற்று வரை அவரிடம் கோபம் கொண்டிருந்தாய். இப்போது அந்தக் கோபம் மறைந்து உன்னிடமே நீ கோபம் கொண்டிருக் கிருய். உன்னையே நீ வெறுத்துக் கொள். கிருய். பிறரிடம் ஏற்படுகிற வெறுப்பி ஞல் துறவு மேற்கொள்வது எப்படித் தவருே, அப்படியேதான் தன்னைத் தான் வெறுத்துக் கொண்டு அந்த வெறுப்பிஞல் துறவு மேற்கொள்வதும் தவறு ! இரண்டுமே தவறு! துறவுக் காகவே துறவு மேற்கொள்ள வேண் டுமே அல்லாமல் பிற காரணங்களுக் காக மேற்கொள்வது தவறுதான்!''

''அம்மையே, ஆழமான பெருண் மையை எனக்கு நீங்கள் உணர்த்தி னீர்கள். மெய்தான், அவரிடம் ஏற் பட்ட சீற்றம் இப்போது நாளாக நாளாக என்னிடமே நான் சீற்றம் கொள்ளும்படி செய்கிறது. இரண்டுமே தவறுதான். இந்நிலையில் என்ருவது ஒரு நாள் அவரும் அந்த இளவரசியும் ஒன்ருக நிற்பதைப் பார்க்க நேர்ந் தால், அப்போது என் மனம் என்ன செய்யும்! எத்தகைய சீற்றம் எனக்கு உண்டாகுமோ, தெரியவில்லையே !''

பொன்மணி இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே விடுதிக் குள்ளே காலடி ஓசை கேட்டது.

''பழைய துறவியும் புதிய துறவி யும் சேர்ந்து என்ன ஆராய்ச்சி நடத்து கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் செவ்வந்தி அடிகள்! அந்த ஞான நிலவிலே இருவரும் எழுந்தார்கள்.

''மும்முனைப் போரில் சேரமன்னர் மாபெரும் வெற்றி பெற்றுவிட்டார் ! நம்முடைய வழிபாட்டிலே கலந்து கொண்டு நன்றி செலுத்துவதற்காகப் பவளத் தீவிலிருந்து இளவரசி இளநன்னியும் கொங்கு மன்ன ரின் சுற்றத்தார் சிலரும் இன்று இரவே இங்கே வருகிருர்கள்!'' என்று அறிவித் தார் செவ்வந்தி அடிகள்! (தொடரும்)

இடி இடித்தால் பயிருக்கு உரம்!

மழை பெய்யும்போது உண்டாகும் இடி யிஞல் நமக்கு நன்மையே உண்டாகிறது. இடி உண்டாகும் பிரதேசத்தில் உள்ள பயிர், முக்கியமாகக் கோதுமை, பார்லி, சோளம் போன்றவை மிக அதிகமாக விளைச்சலைத் தருகின்றன. அது மட்டுமல்லாமல் இருபது முதல் இருபத்தைந்து நாட்கள் வரை முன்ன தாகவே அறுவடை செய்யக் கூடிய பக்கு வத்தை அடைகிறது. இடி உண்டாகும் பொழுது ஏற்படுகிற மின் காந்தமே இவற் றுக்குக் காரணம். இதை ரஷ்யர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

ஆதாரம்: 'சோவியத் யூனியன்'
தகவல்: க. ஸ்ரீதரன்



பல்சுவைப் பக்கம்



"பையனைக் குளிப்பாட்டச் சொன்னேனே ஆச்சா?"

"ஆச்சு! உனக்குக் கண்ணு மூச்சி காட்ட, கரி மூட்டை இடுக்கில் ஒளிஞ்சிட்டிருக்கான் இப்ப!"


பச்சோந்தி சூழ்நிலைக்கேற்பத் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதாக நினைக்கிறோம் அல்லவா? அது தவறு. பச்சோந்தியின் நிறம் அது நிற்கும் இடத்தின் உஷ்ண நிலை, வெளிச்சம், அதன் உணர்ச்சிகள் இவற்றுக்கேற்பத் தான் மாறுகிறது. அந்த நிறம் அதன் சூழ்நிலையுடன் பொருந்துவது தற்செயலாக நேருவதே. —'பேஜண்ட்'

?!

தகவல்: எஸ். எஸ். எஸ்.


"திரைப் படங்களில் முத்தமிடும் காட்சியை அனுமதிக்கலாமா கூடாதா என்பது பற்றிக் கருத்தரங்கு நடத்த மத்திய மந்திரி கே. கே. ஷா தீர்மானித்திருக்கிறார்." — இந்தச் செய்தியை ஹாம்பர்க்கிலுள்ள மிருகக் காட்சி சாலையில் வசிக்கும் இந்த 'வால்ரஸ்' என்ற கடல் பிராணிகளிடம் யாரேனும் கூறியிருக்க வேண்டும். உடனே இது விஷயத்தில் தங்கள் அபிப்பிராயம் என்ன என்பதை இவை சந்தேகத்துக்கிடமின்றி வெளிப்படுத்தி விட்டன!


படம்: 'யூ. பி. எஸ்.' விளக்கம்: 'சாடா'



கோடையில்
இலேசான காலணியுடன்
வெளியே செல்லுங்கள் !







Bata

'கடகட' வென்ற ஒலி விடாமல் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.....

மௌனத்துள் புதைந்து, கண்களை மூடி உட்கார்ந்திருக்கும் என் நெஞ்சுக்குள் உதிர்கிறது அந்தச் சத்தம். ஒலிக்கும் ஓர் உருவம், கனம் எல்லாம் உண்டு என்று என்னை நானே ஏமாற்றிக் கொள்ளும் மயிப்பு என்னைச் சூழ்ந்து கொள்ளுகிறது. எனக்குள் — என் உள்ளத்து வெளியெங்கும் ஒலிச் சிதறல்கள் விழுந்து நிரம்புகின்றன.

நடுவில் 'ஓ' வென்ற அலறல். நான் அதிர்ச்சியோடு விழித்துக் கொள்ளுகிறேன்.

ரயில் ஓடிக் கொண்டிருக்கிறது.

சதுரமான ஜன்னல் வழியே தூரத்தில் உலகத்தின் ஒரு துளி தெரிகிறது. ஒவ்வொன்றாய்க் காட்சிகள் அசைந்து, அசைந்து என் பார்வையை விட்டு நகர்ந்து செல்கின்றன. ஒரு சின்ன மரத்தின் கிளைகள் காற்றைத் தாவிப் பிடிக்க முயல்கின்றன. நாலைந்து பறவைகள், எல்லையற்ற சூனியப் பரப்பில் ஏதோ இருக்கிறதாய்ப் பிரமை கொண்டு, தேடி வட்டமிடுகின்றன. அறுவடையாகி, 'வெறிச்'சென்று கிடக்கும் வயல்களிடையே வயோதிகன் ஒருவன் முடிந்த வரையில் வேகமாய் நடக்கிறான். எதைத் தேடிப் போகிறானோ?

என் கண்களில் நீர்க் கசிவு இல்லை; ஆனாலும் நான் அழ வேண்டும் என்று உள்ளூற ஆசைப்படுகிறேன். விழிக்குள் நெஞ்சின் அடி ஆழம் வரை அழுகை கண்ணீராய்த் தேங்கிக் கனக்கிறது. என்றால் அழ முடியாது. எனக்குள் தேங்கி நின்று தவம் கிடக்கும் ஏக்கத்தை நான் தாங்கிக் கொள்ளுகிறேன். வேறே வழியில்லை.

காதுகளில் ஓயாமல் அந்த ஒலி - கட கட....

எல்லா ரயில்களும் இதே ஒலியோடுதான் ஓடுகின்றன. எல்லாவற்றிலும் அதே வேதனையைத் தூண்டும் ஏக்கம் நிறைந்த தாளம்.

என் வாழ்க்கையே பல ரயில் பிரயாணங்களாகத்தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவ்வளவும் அரைகுறைப் பிரயாணங்கள். எப்பொழுதும் எனக்குப் பிடித்த — நான் ஆசைப்பட்ட என் பிரயாணத்தின் லட்சியமான இடத்தை, நான் அடைந்ததே இல்லை.

சின்ன வயதில் ஊருக்குப் பக்கத்திலே இருந்த தண்டவாளங்களின் கிட்டத்தில் போய் நின்றிருக்கிறேன். எப்பொழுதாவது அப்படி நான் நின்று பார்க்கும்பொழுது ஒரு ரயில் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஓடும். ஆவலோடு நான் அதைப் பார்ப்பேன். எத்தனை வேகமாய் அதில் பிரயாணம் செய்யும் ஜனங்களின் முகங்கள் மாறி மாறிக் கொண்டே வரும்! என்றாலும் முடிந்த அளவு அவசரத்தோடு அவர்களைப் பார்ப்பேன்.

ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் சலிப்பே இல்லாமல், எப்படி வெளியே தெரியும் காட்சிகளையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

ரயில் தொலைவில் ஓடி ஒரு புள்ளியாய் மாறிவிட்ட பிறகு, நெட்டுயிர்ப்புடன் திரும்பி நடந்த நாட்கள் இன்னமும் எனக்கு நன்றாய் ஞாபகத்தில் இருக்கின்றன. அந்த வேளையில் என் நெஞ்சில் ஓர் ஆசை துளும்பும்.



நானும் ஓடும் ரயிலில், ஜன்னலுக்குப் பக்கத்திலே சாய்ந்து உட்கார்ந்து கொண்டு, உலகத்தை நிறைய வேடிக்கை பார்க்க வேண்டும். அந்தப் பழைய நினைப்பு என்னை இழுத்துக் கொண்டு போகிறது. நினைப்பில் அம்மா எதிரே வந்து நிற்கிறாள்.

இளைத்துப் போய்ப் பூஞ்சையான உடம்பு. கண்களில் எதுவோ வரப் போகிறது. யாரையோ ஒரு நாள் சந்திக்கப் போகிறோம் என்ற எதிர்பார்த்தல். இதுதான் அம்மா. அம்மாவைப் பற்றி இன்னும் நிறையச் சிந்தனைகள் படர்ந்தாலும், இவை தாம் முன்னால் வந்து நிற்கிறவை.

அம்மா என்னைக் கையைப் பிடித்து எங்கள் ஊரின் சின்னஞ் சிறிய ரயிலடிக்கு அழைத்துக் கொண்டு போனாள். காற்று வேகமாய் வீசிக் கொண்டிருந்தது. ரயிலடியில் கூட்டமே இல்லை. எப்போதும் எங்கள் ஊரில் அப்படித்தான். 'எங்கே அம்மா போகிறாய் ?' என்று நான் எனக்குள் அலையாய்ப் புரண்ட கேள்வியைக் கேட்டேன். அம்மாவுக்கு அது காதிலேயே விழவில்லை.

ரயில் ஓடுகிறது!

அட்டைப்படக்கதை

கு. வேங்கடரமணி

அவள் கண்களில் மட்டும் அந்த 'எதிர்பார்த்தல்' தீவிரமாய் மிதந்து கொண்டிருந்தது. மணி அடித்து, டிக்கெட்டும் வாங்கியாகி விட்டது. அம்மா டிக்கெட்டுகளைப் புடவைத் தலைப்பில் முடிந்து வைத்துக் கொண்டாள்.

''எங்கேம்மா போகிறோம் ?'' என்று நான் நச்சரித்தேன்.

''அசடு! பேசாமல் இரேன் ! அபசகுனம் மாதிரி இது என்னடா கேள்வி?'' என்று அடக்கினாள் அம்மா.

'சமர்த்தாய்ச் சொன்னதைக் கேட்டுண்டு படுத்தாமல் உட்கார்ந்து கொண்டு வரணும்' என்று கண்டிப்போடு அம்மா சொன்னதும் எனக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக் கொண்டு வந்தன. ஜன்னலோரமாய் அமர்ந்து வேடிக்கை பார்க்கிறதாக நான் வளர்த்துக் கொண்டிருந்த ஆசை வீணாகத்தான் போய் விடப் போகிறது என்று பயந்தேன்.

▶ அம்மாவை ரயிலடியிலேயே தனியாய் விட்டு விட்டு எங்கேயாவது ஓடிப் போய்விடலாமா என்று துடித்தேன். ஊரில் எல்லாரிடமும் அம்மா என்னைத்தான் துணைக்கு அழைத்துக் கொண்டு போகிறதாய்ச் சொன்னாள். பட்டண்ணாவிடம் கழுத்துச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்துப் பணம் வாங்கினாள் அம்மா. நானும் கூடவே இருந்தேன்.

''குஞ்சம்மா, இப்போ எதுக்குப் பணம் கடன் வாங்கறே ?'' என்று விசாரித்தார் பட்டண்ணா.

''அவரைப் பார்க்கப் போறேன்.''

அம்மா சட்டென்று பதில் சொன்னாள்.

''நிஜம்மாவா? அவர் இருக்கிற இடம் தெரிஞ்சு போச்சா ?''

அம்மாவுக்கு ஒரு புதுத் தெம்பு; சந்தோஷம்.

அப்போது அவளுடைய கண்களைப் பார்க்க அவசரமாகத் திரும்பினேன். ஆனால் அம்மா தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டு விட்டாள். இப்படித்தான் அம்மாவுக்கு யாருடனாவது அப்பாவைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் நெஞ்சை அடைத்துக் கொண்டு அழுகை வந்து விடும். சந்தோஷத்தையும் பெருமையையும் துரத்திக் கொண்டு வரும் அழுகை.

''நாலு நாட்கள் முன்னால் ஒரு தபால் வந்தது. சௌக்யமாய் இருக்கிறதாய் எழுதியிருக்கார். அவர் தாமாகத் திரும்பி வரமாட்டார். நானே போகணும். நான் போனால் எப்படியும் கெஞ்சி, அவரை அழைச்சுண்டு வந்துடுவேன்.''

பட்டண்ணா அம்மாவிடம் சேதியெல்லாம் விசாரித்தார்.

''வடக்கே அவ்வளவு தூரம் போகணுமே, துணை இல்லாமல் எப்படிப் போவே ?''

''இதோ, இவன்தான் துணை'' என்று என்னைக் காட்டினாள் அம்மா.

பட்டண்ணா விளையாட்டாய்ச் சிரித்தார். அம்மா என் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். எனக்குப் பெருமை தாங்க வில்லை. நான்தான் அம்மாவுக்குத் துணை. அவளோடு நானும் ரயிலில் போகப் போகிறேன்.

ரயில் வரப் போகிற பரபரப்பு. என்னையும் அழைத்துக்கொண்டு அம்மா முன்னேறினாள்.

நான் பிடியை உதறினேன்.

''நான் வரல்லே. நீ மட்டும் போ!''

அம்மா என்னை இழுத்து அணைத்துக் கொண்டு, ''கோபமாடா குழந்தை?'' என்று கேட்டாள். அவள் அப்படிக் கேட்கிற போதெல்லாம் எனக்கு நெஞ்சை அடைக்கும். இருந்தாலும் நான் முகத்தைத் திருப்பிக் கொண்டேன் வீம்போடு.

''என் ராஜாக் கண்ணு ! நீயும் என்கிட்டே கோவிச்சுக்காதேடா. உங்க அப்பா ஒரேயடியாய்க் கோவிச்சுண்டு போயிட்டார். அவர் முகத்தைப் பார்க்க முடியாத குறையை உன்னாலேதான் நான் தாங்கிக்கிறேன். இப்போ அப்பாவைப் பார்த்து அழைச்சுண்டு வரத்தான் போகிறோம். அப்புறம் நீ எங்க ரெண்டு பேரிடமும் கோவிச்சுக்கலாம்டா கண்ணு!''

அம்மா என் கண்களைத் துடைத்து விட்டாள். ஆனால் அதே சமயம் அவள் கண்கள் கலங்கி, நிரம்பி தளும்பத் தொடங்கின.

ஃ ஃ ஃ

அத்தனை ஏமாற்றத்தையும் அம்மா எப்படித்தான் தாங்கிக் கொண்டாளோ? அவள் வாய் விட்டுப் பேசவே யில்லை. அடிக்கடி அவள் என்னைத் தன் அருகில் இழுத்து, என் முகத்தையே கூர்ந்து நோக்கினாள். அவளுடைய எதிர்பார்க்கும் கண்கள் என்னிடம் எதைத் தேடினவோ ?

அவளுடைய பார்வை என்னையும் பிடித்துக் கொண்டது. அவளுடைய பார்வையின் ஏக்கம் என்னையும் தனக்குள் இழுத்துக் கொண்டு விட்டது. நானும் எதையோ எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டேன். நினைவிலிருந்து மறையத் தொடங்கிவிட்ட அப்பாவின் உருவத்தை எண்ணிப் பார்த்தேன்.

கொஞ்சம் முன்னால் நீண்ட பற்கள், பெரிய பெரிய கண்கள், (அந்தக் கண்கள் ஒரு பெண்மணியின் முகத்துக்குப் பொருத்தமாக இருக்கும்; என் கண்கள்கூட அப்பாவின் கண்களைப் போலவேதானாம்) அழுந்திய உதடுகள் — எல்லாம் சேர்ந்து அப்பாவின் பெரிய உருவம், பார்க்கிறவர்களை நினைவழித்து போகத்தான் செய்யும்.

ஆனால் நான் அப்பாவை எதிர்பார்க்கவில்லை. ஓடும் ரயிலின் ஜன்னலுக்கு அப்பால் எத்தனையோ மனிதர்கள் தோன்றி மறைந்தார்கள். எத்தனையோ ஊர்களும் வந்து போயின. அவை எல்லாவற்றுக்கும் அப்பால், அப்பால்....

நான் வேறு யாரையோ தேடினேன்....

அந்த ஊருக்கு எப்படியோ போய்ச் சேர்ந்தோம். அந்த இடத்தைக்கூட எப்படியோ கண்டுபிடித்தாகி விட்டது.

அம்மா இத்தனை தூரம் தேடிக் கொண்டு வந்த பிறகு, அந்த ஏமாற்றம் நிறைந்த செய்தியைக் கேட்டுக் கொண்டு, ''வாடா, கண்ணு! நாம் ஊருக்குப் போகலாம். நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்'' என்று திரும்பி விட்டாள்.

அப்பா அந்த ஊரை விட்டே பத்து நாளைக்கு முன்னால் போய் விட்டாராம். அது

ஐடெக்ஸ் அழகு சாதனங்கள்

ஐடெக்ஸ் கண்மை
ஐடெக்ஸ் பிந்தி
குங்கும் சாந்து
ஐடெக்ஸ்
குங்கும பேஸ்ட்



ARAVIND LABORATORIES, P. B. 1415. MADRAS-17.

KS.G.13 TM

க்ருஷன்

எந்த வயதிலும் உங்களை இளமையோடு இருக்கச் செய்கிறது

தினமும் க்ருஷன் சாப்பிட்டு என்றும் இளமையோடு விளங்குங்கள். க்ருஷனில் சரிசமமாகச் சேர்ந்துள்ள முக்கியமான ஆறு தாது உப்புக்கள் மலச்சிக்கல், மூட்டுவலி, ஈரல் மற்றும் மூத்திரப்பைக் கோளாறுகள், கீல் வாதம், பிடிப்பு வலி முதலியவை வராமல் தடுக்கின்றன

க்ருஷன் உங்களை இளமையோடு வைத்திருப்பதன் விதம் இதுதான் : மூத்திரப் பைகளைக்கழுவுகிறது • ஈரலை நன்றாக இயங்கச் செய்கிறது • இரத்தத்தை சுத்தமாக்க உதவுகிறது • மலச்சிக்கல் அகல உதவுகிறது • ஜீரண சக்தியைப் பெருக்குகிறது • பசியெடுக்க வைக்கிறது • மூட்டு வலிகளை அகற்றுகிறது



எளிய முறையில் என்றும் இளமையோடு விளங்க தினந்தோறும் ஒரு ஸ்பூன் **க்ருஷன்** சாப்பிடுங்கள்.

நிகோலாஸ் (N) தயாரிப்பு

வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்த வேலை யைக்கூட விட்டு விட்டுப் போய் விட்டாராம். அவர் மட்டும் போகவில்லை. கூட வேலை பார்த்த ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு....

போகும்போதும், திரும்பி வரும்போதும் ஜன்னலுக்குப் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந் தேன். ரயில் கடகடவென்று ஒரே சுரவில் தான் சத்தம் எழுப்பியது. வெளியே விதம் விதமான காட்சிகள் வந்து போயின.

நான் அந்தக் காட்சிகளைக் கடந்து எதையோ தேட ஆரம்பித்து விட்டேன்.

''நம்முடைய ஞாபகம் வந்திருக்கு. தபால் எழுதியிருக்கார்'' என்று தன் நினைவுகளின் முடிவைச் சுருக்கமாய்ச் சொன்னாள் அம்மா.

நடு வழியில் ஒரு பெரிய ஸ்டேஷன். வண்டி அங்கே நெடு நேரம் நின்று கொண்டிருந்தது. பக்கத்தில் வேறொரு ரயில் வந்து நின்றது. அவசரத்துக்கும் இரைச்சலுக்கும் நடுவில் அந்த ரயிலில் ஒரு முகத்தைப் பார்த்துவிட்டு நான் திணறிப் போனேன்.

''அம்மா! அப்பா! அதோ அப்பா மாதிரி யாரோ.....!''

''எங்கேடா?'' என்று துடித்துக் கொண்டு எழுந்து வந்தாள் அம்மா. ஜன்னல் வழியே நான் காட்டிய திசையில் பார்த்தாள். பார்த் துக் கொண்டே யிருந்தாள். அவளுடைய உடம்பிலும் பார்வையிலும் அசைவேயில்லை.

ஆயிரம் மைல்கள் தேடிக் கொண்டு வந்தவள் ஏன் அப்படியே அசையாமல் நிற் கிறாள்?

''அம்மா, இறங்கிப் போய்ப் பார்க்க லாமா?''

திரும்பி வந்து தன் இடத்தில் உட்கார்ந்து கொண்ட அம்மாவிடமிருந்து பதிலே இல்லை. வெகு நேரம் கழித்து, 'வேண்டாம்' என்று தலையை ஆட்டினாள்.

''அம்மா! அது அப்பாதானே?''

''ஆமாம்டா, கண்ணு! அவரேதான்.''

''அவர் உன்னைப் பார்த்தாரா?''

''பார்க்கவில்லை.''

அந்த ரயில் முதலில் புறப்பட்டு விட்டது. கடகட வென்ற அதே ஓசை.

அது வேறே திசையில் போய்க் கொண் டிருந்தது.

வழியிலேயே அம்மாவுக்கு உடம்பு சரி யில்லை. உடம்பு நெருப்பாய்ச் சுட்டது. அவள் மெதுவாய் ஏதோ முனகிக் கொண்டே யிருந்தாள்.

'அவருக்கு என் ஞாபகம் இருக்கு.....'

ஃ ஃ ஃ

நான் விரும்பியோ விரும்பாமலோ பிர யாணம் தொடர்கிறது. பல வருஷங்கள் நான் சுற்றிக் கொண்டேயிருக்கிறேன். எதையோ, அது எது என்றே தெரியாமல் சுற்றியலைகிறேன்.

'ஜே ஜே' என்று கூட்டம், அவசரமும் இரைச்சலுமாய் மற்றொரு, பெரிய ரயில்வே ஸ்டேஷன்.

வழியெல்லாம் நளினி என்னிடம் எதையோ சொல்ல விரும்பி, ஆனால் சொல் லாமல் தயங்கிக் கொண்டே வந்தாள். அது என்ன செய்தியாய் இருக்கும் என்று நான் என்னையே குழப்பிக் கொண்டிருந்தேன். அவ ளிடம் கேட்டுவிடுகிற தைரியம் எனக்கு இல்லை. எப்படி இருக்க முடியும்? அவளைப் பார்க்கக்கூட நான் கூச்சமடைந்தேன்.

வண்டி புறப்பட இரண்டு மூன்று நிமி ஷங்கள்தான் இருந்தன. ''கண்ணன்!''

பெரிய மனிதர்!

சர்ச்சில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த சமயம், அவர் வீட்டில் நடக்கவிருந்த ஒரு விருந்தில் அவரவர் அந்தஸ்துப் படி எவருக்குப் பக்கத்தில் யாரை உட்கார வைப்பது என்ற பிரச்னை குறித்துப் பலர் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தார்க ளாம். தகவல் அறிந்த சர்ச்சில், ''விட்டுத் தள்ளுங்கள். பெரிய மனிதர்கள் தாம் உட்காரும் ஸ்தானத்தை ஒரு பொருட்டாக நினைக்க மாட்டார்கள். அதை ஒரு பொருட்டாக நினைப்பவர்கள் பெரிய மனிதர்களாக இருக்க மாட்டார்கள்'' என்று பிரச்னைக்கு முடிவு கட்டினாராம்!

— லலிதா மணாளன்

சர்ச்சிலின் அழகு!

இளைஞராக இருந்தபோது சர்ச்சில் ஒரு ஹோட்டலின் வாசலில் நின்றுகொண்டு அவ்வழியே போகும் இளம் பெண்களைக் கேலி செய்து கொண்டிருந்தார். ஒரு பெண் அவ்வழியே வந்த போது, சர்ச்சில் தமது நண்பனிடம், ஹெலன் ஆப் ட்ராய் பற்றிய வர்ணனை ஒன்றைப் பயன்படுத்தி, ''நண்பா, இந்த முகம் ஆயிரம் கப்பல்களைச் செலுத்த வல்லதோ அல்லது நூறு இல்லாவிட்டாலும் பத்து மரக்கலங்களையாவது செலுத்தாதா?'' என வினவினார்.

நண்பர் பதிலிறுக்கும்வரை அந்தப் பெண் காத்திருக்கவில்லை. நறுக்கென்று வந்தது அவளது பதில்:

''ஐயா, சர்ச்சில் அவர்களே, என் அழகு முகம் பத்துக் கப்பல் களையாவது செலுத்தும் சக்தி படைத்ததாயிருக்கிறது. உமது அழகு மின் லட்சணத்தால் ஒரு பரிசலைக்கூடக் கிளப்ப முடியாது!''



ஆதாரம்:
'சர்ச்சில் நினைவுக்
வீக் என்ட் டெலிகிராப்'

தகவல்:
பீ.டி. கிருஷ்ணு

என்று ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து அழைத்தாள் நளினி.

''ஏன், எல்லாச் சாமான்களையும் வண்டியில் வைத்தாகிவிட்டதே! ஏதாவது மறந்து போச்சா?''

''இல்லே, இல்லே.''

அவள் முதல் வகுப்பின் சுகமான ஆசனத்தில் போய் ஒரு விநாடி சாய்ந்து உட்கார்ந்தாள். நான் கீழே இருந்தபடியே வண்டிக்குள் எட்டிப் பார்த்தேன். அவளுடைய பிரயாணம் சௌகரியமாகவே இருக்கும் என்று தான் தோன்றியது. அவளுடைய அப்பாவிடம் சொல்லிவிடலாம் என்று நிம்மதியடைந்தேன். நளினி மறுபடியும் எழுந்து வந்தாள்.

''கண்ணன்....''

''உம்....''

''கண்ணன்! விவரமாய்ப் பேச நேரம் இல்லே. ஆனால் இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். அப்புறம் சொல்ல முடியாது.''

''என்ன விஷயம் நளினி?''

''எனக்குக் கல்யாணம் நிச்சயமாகப் போகிறது. அங்கே சித்தப்பா வரன் பார்த்து வைத்திருக்கிறார். நான் போனதும் எல்லாம் முடிவாகிவிடும்.

''ஆனால் கண்ணன், எனக்கு விருப்பமில்லே. அவர் ஒரு கெட்டிக்கார டாக்டராம். பெரிய குடும்பமாம்.''

''அப்புறம் ஏன் பிடிக்கவில்லே?''

''அதனால்தான்.''

''எனக்குப் புரியல்லே நளினி.''

அவளுடைய பளபளப்பான கை, மெதுவான விரல்கள்....

முதல் மணி அடித்தது.

'' புரியும்படியாய்ச் சொல்லுகிறேன், கண்ணன். எனக்கு இதெல்லாம் பிடிக்கலே இல்லே. மனசு ஒட்டவேயில்லே. உனக்குச் சம்மதம் என்றால் சொல்லு. நான் உன்னையே.....!''

''என்னையா? என்னையா?''

மனசுக்குள் கேட்டுக் கொண்டேயிருந்தேன். 'என்னையா ?'

''உனக்குத் தைரியம் இருக்கா கண்ணா?''

''உடனே, இப்போதே எப்படிச் சொல்ல முடியும் ?''

அவள் அவசரமாய் ஒரு காகிதத்தில் எதையோ எழுதி நீட்டினாள். ''இதோ இருக்கு விலாசம். உன் அபிப்பிராயத்தை எழுது. இரண்டு நாட்கள் போகட்டும். நன்றாய் யோசித்து எழுது.''

ரயில் புறப்பட்டு விட்டது.

'கடகட' வென்ற ஒலி.

நான் ஓடும் ரயிலையே பார்த்துக் கொண்டிருந்தேன். நளினியின் முகம் புத்தம் புதிய நினைப்பாய் எழுந்தது. அந்த நினைப்புக்கு அப்பால் நான் எதையோ தேடினேன்.

இரண்டு நாட்கள் ஓடியே போய் விட்டன. சுருக்கமாய் ஒரே வரியில், அவளுக்கு எழுதினேன். ''எனக்குத் தைரியம் இல்லே.''

ஊரில் பழைய வீட்டில், படுக்கையில் கிடக்கும் அம்மா. மாதா மாதம் நான் அனுப்புகிற நூறு ரூபாய்தான் அவளுக்குத் தைரியம். நான் தைரியமாய் இருந்தால், முதலில் என் வேலை போய் விடும். வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நளினியை அழைத்துக் கொண்டு போய் நான் அவள் எதிரே போய் நின்றால் ?

நளினிக்கு டாக்டர் மாப்பிள்ளை தான் மாலையிட்டான்.

ஃ ஃ ஃ

மறுபடியும் ஒரு சந்திப்பு.

தாமதமாய் வந்த ரயிலில் இருந்து நளினி எட்டிப் பார்த்தாள்.

''ஓ, கண்ணன்!''

நிமிர்ந்து அவளை நன்றாகப் பார்த்தேன். அந்த உடலின் செழிப்பும், மலர்ச்சியும், என்னை ஏக்கத்தை நோக்கி இழுத்தன.

''நளினி!''

ஜன்னல் அருகில் போய் எட்டிப் பார்த்தேன். சாமான்கள் இறங்கிக் கொண்டிருந்தன. அவள் அலட்சியமாய்ச் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். அந்த அலட்சியத்தில் அழகு வழிந்தது.

''என்ன சொல்லுகிறாய் கண்ணன் ?''

''ஒன்றுமில்லே. சாமானெல்லாம் எடுத்து வைத்தாகி விட்டது. இறங்கலாம்.''

அவள் எழுந்து வந்தாள் என்னையே பார்த்துக் கொண்டு. படிக்கட்டில் அவளுடைய கால்கள் தடுமாறின. ஓடிப் போய் அவளைப் பிடித்துக் கொண்டேன். அவள் சமாளித்துக் கொண்டு விட்டாள். உடனே கையை விட்டிருக்கலாம். ஆனால் சில விநாடிகள் நளினியின் இடையைச் சுற்றி என் கைகள் இறுகின.

அவளுக்குப் புரிந்திருக்கும். தெரியாதவளாய், சாதாரணமாய்க் கேட்டாள்.

''போகலாமா கண்ணன்?''

எனக்குப் பின்னால் கடகட வென்று ஏதோ ஒரு ரயில் புறப்பட்டு ஓடிக் கொண்டிருந்தது.

நளினி காரின் பின் ஸீட்டில் ஏறிக் கொண்டாள். ''நீயும் இங்கேயே உட்காரேன் கண்ணன்.... '' உன்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

கார் புறப்பட்டது.

''அவர் வெளிநாட்டுக்குப் போய்விட்டார் கண்ணன். இன்னும் நிறையப் படித்து, பட்டம் வாங்கணுமாம்.''

நான் பதில் சொல்ல வில்லே. என்னால் எதுவும் பேச முடியவில்லே.

''திரும்பிவர இரண்டு வருஷங்கள் ஆகும்.''

இப்பொழுதும் நான் மௌனமாய் இருந்தேன்.

''ஏன் கண்ணன் பேசவே இல்லே?''

''ஒன்றுமில்லையே ?''

'' அதை நினைத்துக் கொண்டேயிருக்கிறாயா ?''

''எதை ?''

'' அன்றைக்கு நான் உன்னைக் கேட்டதை — இப்போ நான் கீழே விழப் போனபோது —''

''ம்.... ஆமாம்....''

''நம்பிக்கையும், பற்றுதலும் நிறைந்த வாழ்க்கை வேணும் என்று ஆசைப்பட்டேன். உனக்குத் தைரியம் இல்லே.''



கலியாண சீஸன் விற்பனை !
ஈடு இணையற்ற பட்டுச் சேலை ரகங்களுக்கு
NALLI SILKS
SILK SAREES
நல்லி சில்க்ஸ்
நல்லி சில்க்ஸ்
82, ராயப்பேட்டை ஹை ரோட்
லஸ் - மயிலாப்பூர் - போன் 74862 - சென்னை - 4



தீப்தி
இல்லந்தோறும்
பிரபலமாகிவிட்ட
பெயர்
தி ஓரியண்டல் மெட்டல்
இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்,
தீப்தி லாந்தர்கள்
காஸ் ஜனதா
எனாமல் சாமான்கள்

அவளுடைய குரலே மாறிப் போயிருந்தது.

நான் தேடிய ஏதோ ஒன்று என் எதிரில் இருப்பது போலிருந்தது. ஆனால் என்னால் அதைப் பார்க்க முடியவில்லை.

நம்பிக்கை !

அம்மா எதை எதிர்பார்க்கிறாள் ? அப்படி எதிர்பார்க்க அவளிடம் என்ன நம்பிக்கை இருக்கிறது ?

அம்மாவின் ஞாபகம் வருகிறது. அப்பாவின் அத்தனை செயல்களுக்கும் அவள் ஏன் வாய் திறக்காமலே இருந்து விட்டாள் ?

ஓடிக் கொண்டிருந்த ரயில் நிற்கிறது.

வெற்றிலை பாக்கு, சோடா இன்னும் என்னவெல்லாமோ விற்கும் கடையில் கூட்டம் கசகசக்கிறது. நான் விளையாட்டாக வேடிக்கை பார்க்கிறேன். வர வர என் பார்வை தீவிரமாகிறது. ஓர் உருவம் வேடிக்கையைச் சிதற அடிக்கிறது. அதோ காப்பி விற்கும் இடத்தில் அவர் வெய்யிலையும் லட்சியம் செய்யாமல் காப்பியை அவசரமாக உறிஞ்சுகிறார்.

கொஞ்சம் முன்னால் நீண்ட பற்கள், பெரிய பெரிய கண்கள், அழுந்திய உதடுகள் அந்த உயரம் தளர்ந்து சோர்ந்து போயிருக்கிறது.

நான் அவசரமாய்க் கீழே இறங்கி, வண்டி புறப்படுகிற சமயத்தில் அவர் உட்கார்ந்திருந்த அதே பெட்டியில் ஏறிக் கொண்டேன்.

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே இருந்தோம். நாங்கள் எங்களைப் புரிந்து கொள்ளுவதற்குள் ரயில் வெகுதூரம் ஓடி விட்டது.

''அம்மாவுக்கு எப்போதும் கலையாத நம்பிக்கை. 'அவருக்கு என் ஞாபகம் இருக்கு' என்று புலம்பிக் கொண்டே இருப்பாள்.''

''நான் என்னடா பண்ணுவேன் கண்ணு? நானும் அவளை மறக்கவேயில்லே. இப்போ அங்கேதான் அவளைப் பார்க்கத்தான் புறப்பட்டேன். இனிமேல், இனிமேல் — ''

'' நானும் அம்மாவைப் பார்க்கத்தான் போகிறேன். வழியில் நீங்களும் வந்துவிட்டீர்கள். இனி மேல்....''

எனக்கும் பேச்சு வரவில்லே.

சட்டைப் பையிலிருந்து பட்டன்று கொடுத்திருந்த, தந்தியை எடுத்து நீட்டினேன். அப்பா மேல் துண்டுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினார்.

''குஞ்சம்மா — ''

நான் ஜன்னல் வழியே ஓடும் காட்சிகளைப் பார்க்க ஆரம்பித்து விட்டேன்.

வானவெளியை நோக்கித் தாவும் மரக்கிளைகள், எங்கோ தொலைவில் பறக்கும் பறவைகள்.

என் பார்வை எதற்கோ ஏங்குகிறது.

இனிமேல் காண்பதற்கு என்ன இருக்கிறது?

'கட கட' வென்ற ஒலி, வேகமாய் முறை பிசகாமல் கேட்கிறது. ரயில் ஓடுகிறது.

காந்திக்கு ஒரு குரு



எமர்சன்

ஹென்றி தோரோ சிறைச்சாலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டார் எமர்சன். உடனே நமது நண்பரைப் பார்க்கச்சென்றார்.

"ஹென்றி! நீ இங்கு இருப்பதன் காரணம் என்ன?" என்று வினவினார்.

உடனே தோரோ, "நீ இங்கு இல்லாமல் இருப்பதன் காரணம் என்ன?" என்று பதிலுக்குக் கேட்டார்.

இந்த இரு கேள்விகளும் சரித்திரத்தில் நிலையான இடம் பெற்று விட்டன. அமெரிக்காவில் அடிமைகள் விடுதலைக்குப் போராடியவர்களுள் 19ம் நூற்றாண்டின் மத்தியில் வாழ்ந்த தோரோ முக்கியமான ஒருவர். தாம் எந்தக் காரணத்துக்காகச் சிறை வாசத்தை மேற்கொள்ளத் துணிந்தாரோ, அதே காரணத்துக்காக நமது நண்பர் எமர்சனும் சிறை புகத் தயங்கக் கூடாது என்பது தோரோவின் பதிலில் தொக்கி நின்றது.


அடிமை முறையை மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் மெக்ஸிகோமீது அமெரிக்கா போர் தொடுக்கையில் தோரோ இதை எதிர்த்து சாத்துவிகப் போராட்டம் நடத்தினார். வரி கொடா இயக்கத்தையும் கையாண்டார். சிறை வாசத்தை விரும்பிச் சென்று ஏற்றார்.




தோரோ

சாத்துவிகச் சட்ட மறுப்புப் போராட்டம் பற்றி இவர் எழுதிய நூல், மகாத்மா காந்தி அடிகளின் மனத்தைக் கவர்ந்து, சிந்தனையைக் கிளறி முதலில் தென் ஆப்பிரிக்காவிலும் பிறகு இந்தியாவிலும் சத்தியாக்கிரஹ இயக்கத்துக்கு அடிகோலியது.

- வி. எஸ். வாங்கடன்கர்



FDSNLC723TM A





64. தொண்டில் தேர்ந்தவர்



திருத்தொண்டு செய்வோர் தொண்டர் எனப்படுவர். சிவத்தோடு ஒன்றி நின்ற ஞானிகளும் தொண்டு புரிவார்கள். சிவபெருமானே சுந்தரரை நோக்கி, ''வித்தகம் பேச வேண்டா, பணி செய்ய வேண்டும்'' என்று கூறித் தொண்டின் சிறப்பை வலியுறுத்துகின்றார்.

அடியார்களுக்குத் தொண்டிலேயுள்ள இனிமை தனிமையானது. தொண்டு செய்து அண்டர் போற்றும் பெருமை பெறுவர். அவர்கள் தொண்டுக்கு இடர் வருங்கால் உயிரையும் விடும் உறுதி உடையவர்கள்.

கணநாத நாயனார் தாம் தொண்டு செய்ததோடு அமையாமல், தொண்டர்கள் பலரை உண்டாக்கி, அவரவர்கள் அன்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு தொண்டுகளைப் பயிற்றுவித்து, அவர்கள் செய்யும் தொண்டுகளுக்கு உரிய சாதனங்களை வழங்கியும், வேறு பல உதவி புரிந்தும் சிவபுண்ணியம் பெற்றார்.

சீர்காழியில் மறையவர் குலத்தில் அவதரித்தவர் கணநாதர். நாடோறும் தோணியப்பருக்குரிய தொண்டுகளைப் புரிந்து வந்த அவர், பிற அடியார்களுக்கும் திருத்தொண்டுகளைப் பயிற்றி வைப்பார்.

''புண்ணியஞ் செய்வாருக்குப் பூ உண்டு, நீருண்டு'' என்பது திருமந்திரம். மலரில்லாத வழிபாடு இல்லை. அம்மலரைத் தருவது நந்தவனமாகும். ஆகவே, நந்தவனம் அமைத்தல் பெருஞ் சிவபுண்ணியமாகும். கணநாத நாயனார், திருநந்தவனம் அமைத்தல், மலர்களை முறைப்படி எடுத்தல், அவற்றை வகை வகையாகத் தொடுத்தல், திருமஞ்சனத்திற்குரிய சாதனங்களை அமைத்தல், திருக்கோயில் அலகிடுதல், மெழுகுதல், திருவிளக்கிடுதல், திருமுறைகளை எழுதுதல், படித்தல் முதலிய திருத்தொண்டுகளில் யார் யாருக்கு எது எது விருப்பமோ அவ்வப்பணியில் ஈடுபடுமாறு செய்து வந்தார். நாயனார், திருஞானசம்பந்தருடைய திருவடிகளை மூன்று காலங்களிலும் மிகுந்த அன்போடு வழிபட்டு மகிழ்வார். இவ்வழிபாட்டின் பயனாக, இருவினையொப்பு மல பரிபாகம் பெற்று சத்திநிபாதம் எய்தினார்.

65. முடிசூடா மன்னர்

களந்தை என்ற ஊரில் கூற்றுவ நாயனார் வாழ்ந்தார். இவர் பகைவருக்கு இயமன் போன்றவராதலின் கூற்றுவனார் என்ற பேர் பெற்றார். கூற்றுவர் என்பதற்குக் கூறுபடுத்துபவர் என்று பொருள். சிறந்த தோள் வலியும், வாள் வலியும் மிகுந்த வீராதி வீரராக இவர் விளங்கினார். தோள் வலி, வாள் வலி, படை வலி இருப்பினும், அஞ்செழுத்தை இடையறாது நாவில் நவிலும் நலம் படைத்தவராதலின், அருள்வலியே அவரது வெற்றிக்கு மூலகாரணம். வீராதி வீரராக விளங்கிய இவர், அடியார்கள் அன்பில் இணையற்றவராகத் திகழ்ந்தார்.

திருவருளின் வலியால் கூற்றுவநாயனார், அரசர்களும் அஞ்சி ஒதுங்க மண்ணுலக முழுதும் வென்றார். மலை போன்ற பொற்குவியலையும் சேர்த்தார். தேர், யானை, குதிரை, காலாள்

என்ற நால் வகைச் சேனைகளையும் பெற்றார். தும்பை மாலை சூடிப் போர் செய்து வெற்றி பெற்றார். மணி மகுடம் ஒன்று நீங்கலாக அரசர்க்குரிய ஏனைய சின்னங்களையெல்லாம் உடையவராகத் திகழ்ந்தார்.

மணி மகுடம், பழங்காலத்தில் சோழ மன்னர்களுக்கே உரிய சிறப்பு. இது சிதம்பரத்தின் கருவூலத்தில் தில்லைவாழ் அந்தணர்களின் பாதுகாப்பில் இருந்தது. இதனை உரிய காலத்தில் சோழ மன்னர்களுக்குமட்டுமே புனையும் நியதியைத் தில்லைவாழ் அந்தணர்கள் மேற்கொண்டிருந்தனர். நாயனார், தில்லையம்பதி சென்று தில்லைவாழந்தணர்களைப் பணிந்து, தமக்கு மணி மகுடம் சூட்டுமாறு வேண்டினார்.

''ஐயா! நாங்கள் சோழர்களது பரம்பரையில் வரும் மன்னர்களுக்கேயன்றி வேறு மற்றவர்களுக்குத் திருமுடி சூட்ட மாட்டோம்'' என்று கூறி அந்தணர்கள் மறுத்து விட்டார்கள்.

தீட்சிதர்கள் தங்கள் மரபில் வந்த ஒரு குடியினர்பால் அம்மணிமகுடத்தை ஒப்புவித்துக் காவல் புரியும்படி கூறிச் சேரமன்னன்பால் சென்று வாழ்ந்தார்கள். நீதியும் நெறியும் நிறைந்த கூற்றுவனார், அவர்களை நெருக்கியும், இடர்ப்படுத்தியும் பலாத்காரமாக அம் மகுடத்தைப் பெற முயலவில்லை. அன்றிரவு துயிலும் போது, ''அம்பலவாணா! அருட்கடலே! எளியேனுக்கு முடியாக உமது திருவடியையே சூட்ட வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு கண்ணயர்ந்தார். இறைவனது அடி ஞானத்தில் அடங்கி ஜீவபோதமின்றி, தன் செயலின்றிச் சிவமயமாக இருந்தார் என்பதே இதன் உட்பொருள்.

இறைவர் அவரது கனவில் தோன்றி அவருடைய சென்னியின் மீது தமது திருவடியைச் சூட்டி அருள் புரிந்தார். கண் விழித்து எழுந்த நாயனார் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. பேரானந்தமுற்ற அவர் இறைவனது திருவடியையே முடியாகக் கொண்டு உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் அரசாண்டு வந்தார். அரசும் செல்வமும் படைத்ததற்குப் பயனாகப் பூமண்டலத்தில் இறைவர் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் அனைத்துக்கும் தனித் தனியே நித்திய நைமித்திக வழிபாடுகள் இனிது நிகழப் பெருநிலங்களை அமைத்துச் சிந்தை மகிழ்ந்தார். இவ்வாறு இனிய திருத்தொண்டுகள் பல புரிந்து உலகைக் கருணையுடன் அரசு புரிந்து முடிவில் அரனார் அடிமலர் சேர்ந்து இன்புற்றார்.

66. பொய்யடிமை இல்லாத புலவர்

பொய்யடிமையில்லாத புலவர்கள் என்ற பொது அடியார்களும் சிவனருட் செல்வருள் இடம் கொண்டவர். கைலைபேறும் கடவுளுக்கே ஆளானவர்கள்; செய்யுட்களில் பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்வார்கள். அறிவு நிறைந்த பொது அடியார்களாகிய இவர்கள், கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல் பல கற்ற நுண்ணிய மதி படைத்த அவர்கள் ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவபெருமானையன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைத்து உணராதவர்கள். மெய் யன்புடன் இறைவனுக்கு அடிமைபூண்டு மறைநூல்களை ஓதியுணர்ந்து உருகி ஒருமைப்பட்டு நிற்பவர்கள்.

மெய்ம்மையாகச் சிவனடிக்கே தொண்டு பூண்ட அவர்கள், திருவருள் நெறி நின்று பெற்ற பெருமை அளவிடற்கு அரியது.

67. அடியவரில் இழியவர் ஏது?

பெண்ணாகடம் என்பது ஒரு பழைமையான தலம். ஒழுக்கமுடைய நற்குடி மக்கள் வாழ்கிற அப்பதியில் தரும நெறி தங்கியிருந்தது. முகில் தவழும் சோலைகள் சூழ்ந்திருந்தன.

வளம் பொருந்திய அத்திருத்தலத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர் கலிக்கம்ப நாயனார். சடைமுடியுடைய விடையவர் திருவடியை மறவாத சிந்தையராய், அளவற்ற காதல் கொண்டு திருத்தூங்கானை மாடம் என்ற திருக்கோயிலில் திருத்தொண்டுகள் பல புரிந்து வாழ்ந்து வந்தார். அரனடியார்களுக்கு அளவற்ற சேவை செய்தார் அவர்.

ஆன அன்பர் தாமென்றும் அரனார் அன்பர்க்கமுது
மேன்மை விளக்கு போனகமும் விரும்பு கறி நெய்
தயிர் தீம்பால்
தேனின் இனிய கனி கட்டி இருந்த அமுது
செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன எல்லாம் இன்புற
அளிப்பார்.

ஒரு நாள் தமது திருமாளிகையில் அமுது செய்ய வந்த அடியார்களை வழக்கம்போல் அழைத்துத் திருவடிகளை நீர் வார்த்துப் பூசிக்கலானார் கலிக்கம்பர்.

அவரது மனைவியார் வீட்டை விளக்கி, இனிய உணவுகளைச் சமைத்து, கரகத்தில் நீர் கொண்டு வந்து திருத் தொண்டர்களுக்குக் கணவனார் பாத பூசை செய்யும் போது கரக நீரைச் சொரிந்து உபசரித்தார்.

முன்பு நாயனாரிடத்தில் வேலை செய்து வந்த ஒருவர், வேலை வெறுத் துச் சென்று சிவனடியாராகி அன்ப ருடனே கலந்து, திருநீறும் கண்டிகை யும் புனைந்து அக்கூட்டத்தில் இருந்தார். அடியார்களைச் சிவமாகவே எண்ணி அவர்களது முன்னை நிலையைக் கருதி யாது அளவற்ற அன்புடன் திருவடி யைத் தொட்டுக் கரக நீரை விடுத்துப் பூசிக்கும் இயல்புடைய நாயனார் அவரது பாதம் விளக்கினார். முன்பு பணியாளாக இருந்தவரது திருவடி யைப் பூசிக்க இசையாத நாயனாரின் மனைவியார், 'இவர் நம்மிடம் ஏவல் செய்தவர்' என்று கருதி நின்றார்.

''முன்னை நிலை குறித்து அடியார்களை வழிபடாமல் இருப்பது பிழை. யாவரேயாயினும் வழிபடத் தக்க அடியார் அடிமலர் மீது நீர் வார்க்க இவள் மறுத்தாள்' என்று சினந்து வடிவாள் எடுத்து மனைவியார் கர மலரைத் துண்டித்து விட்டார் நாய னார். பின்னர் தாமே கரக நீரை வார்த்து அவருடைய அடிமலரைப் பூசித்தார். அமுது செய்யத் தாமே படைத்தார்.

68. எண்ணெயா? உதிரமா?

ஓங்கிய புகழுடைய தொண்டை நன்னாட்டில் சிறப்புற்று விளங்குகிற திருத்தலம் திருவொற்றியூர். அது தொண்டை நாட்டுக் கடற்கரையில் பூலோக சிவலோகமாக விளங்குவது. காவிரிப் பூம்பட்டினத்திலே அவதரித்த பட்டினத்தடிகள் இத்தலத்திலேதான் முத்தி பெற்றார்.

வாவியெல்லாம் தீர்த்தம்மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாங் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

என்று பட்டினத்தடிகள் இந்தத் தலத் தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

காருலவு சோலையும், தேருலவு வீதியும் உடைய அப்பதியில் செந் தமிழ்ப் பதிகம் ஒழியாது பாடும் மண்ட பங்கள் நிறைந்திருந்தன. பெண்மணி களின் நடனங்கள் ஒழியாது நிகழும் அழகிய அரங்குகளும், பல வாத் தியங்கள் ஒலிக்கும் விழா ஒழியாத தெருக்களும், அன்னதானம் ஒழியாது புரியும் திருமடங்களும், தாழை புன்னை சண்பகம் முதலிய மலர் நிறைந்த மரங்களும் நிறைந்து அழகு புரிந்தன.

இத்தகைய அத்திருத்தலத்தில் உள் ளது சக்கரப்பாடித் தெரு. எண்ணெய் வாணிகம் புரியும் வணிகர்கள் அத் தெருவிலே வாழ்ந்து வந்தனர். அவர்கள் குலம் செய்த புண்ணியத்தால் கலிய நாயனார் அவதரித்தார். அவர் மிகுந்த செல்வம் படைத்தவர். திருவருள் நெறியில் நின்றவர். சிவபெருமானுக் குரிய தொண்டுகள் புரிய முயன்றார். தொண்டுகளில் ஒப்பற்றது திருக்கோயி லில் திருவிளக்கிடுதல். ''விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமா கும்'' என்பது அப்பர் பெருமானின் வாக்கு. அணைகின்ற திருவிளக்கை அபுத்திபூர்வமாகத் தூண்டிய புண்ணி யத்தினால் எலி மாவலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது என்பர். கலியநாயனார் திரு வொற்றியூரில் திகழும் படம்பக்க நாதரு டைய திருக்கோயிலில் உள்ளும் புறமும் ஆயிரக்கணக்கான விளக்குகளை இரவும் பகலும் ஏற்றி மகிழ்வார்.

வறுமையிலும் அவர் பெருமையை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு உமைபங்கன் திருவருளால், செல் வத்தை வளர்க்கும் வியாபாரம் நின்று விட்டது. அவருடைய இருவினை மாண் டது போல், செல்வமும் அழிந்து விட்டது. கலியநாயனார், தமது குலத் தார்களிடம் எண்ணெய் வாங்கி, ஆங்காங்கு சென்று விற்றார். அதனால் வரும் கூலியைக் கொண்டு வந்து விளக்கிடும் தொண்டினைப் புரிந்து வந்தார். சில காலத்துக்குப்பின் இவா



நீந்தத் தெரியாது

பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு தேசத்தில் தூக்கு மரத்தை ஒரு ஆற்றின் கரையில் நிறுத்தி இருந்தார்கள். இரண்டு குற்றவாளிகள் அந்தத் தூக்கு மரத்தில் தூக்குப் போடுவதற்காகக் கொண்டு வரப்பட்டனர். முதல் கைதி தூக்குப் போடப்பட்ட போது கயிறு அறுந்து விடவே அவன் ஆற்றில் விழுந்தான். உடனே அவன் வேகமாய் ஆற்றில் நீந்திச் சென்று அக்கரையை அடைந்து தப்பி ஓடி விட்டான். மற்றவன் தன்னைத் தூக்கிலிட வந்தவர் களை நோக்கி, ''இந்தாருங்கள்! கெட்டியான கயிறாகப் பார்த்துக் கருக்குப் போடுங்கள்; ஆற்றில் விழுந்தால் எனக்கு நீந்தத் தெரியாது!'' என்றான்.

- தங்க சங்கர பாண்டியன்

பால் எண்ணெய் தந்து விற்கச் செய் யும் [illegible] வீடுதோறும் யால், இவருக்குக் கூலியும் கிடையா தொழிந்தது. கலியநாயனார் மனம் தளர்ந்தார். எண்ணெய் ஆட்டியும், பக்குவத்தில் எண்ணெய் இறக்கியும், செக்கு மாட்டை ஓட்டியும் அதனால் வரும் கூலியைப் பெற்று விளக்கிட்டு, தமது தொண்டை விளக்கிட்டார்.

செக்கு ஓட்டும் தொழில் புரிவார் பலர் ஏற்பட்டதனால், அத்தொழிலும் இவருக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, தமது வீட்டையும், வீட்டிலுள்ள பண்டங்களையும் விற்றுத் திருவிளக் கிட்டார். பின்னர் ஒன்றும் இன்மை யால் தமது மனைவியாரை விற்க முயற்சி செய்தார். மனைவியாரைப் பெற்றுப் பொன் தருவாரைத் தேடி னார். ஒருவரும் கிடைத்தாரில்லை.

கலிய நாயனார் படம்பக்கநாத ருடைய கோயிலுக்கு வந்தார். அன்று விளக்கிட ஒரு சாதனமும் இன்றி உள்ளம் தளர்ந்தார். ''விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை'' என்று துணிந்தார். அகல் களை வரிசையாக அமைத்தார். அகல் தோறும் திரியிட்டார். எண்ணெய்க் குப் பதிலாகத் தமது உதிரத்தையே நிரப்ப எண்ணி வாள் கொண்டு கண் டத்தை அரிந்தார்.

சிவபெருமான் நேரே வந்து அவர் திருக்கரத்தைப் பிடித்தருளினார். எம் பிரான் விடையின் மீது காட்சி கொடுத் தருளினார். அரிந்த இடம் அகன்றது. அஞ்சலி செய்து துதித்தார் அடியார். சிவபெருமான் அருளினால் அவருடன் சிவலோகம் புகுந்து ஆரா இன்ப அமுதம் அருந்துவாராயினார்.

69. நாவரிந்த நாயனார்

இறை நிந்தனையைக் காட்டிலும் அடியார் நிந்தனை கொடியது. இறை வனைப் பகைத்தவரும் ஒரு காலத்தில் உய்வு பெறுவர். அடியாரைப் பகைத்த வர் எக்காலத்திலும் உய்வு பெறார். இரணியன் ஐந்து கோடி இருபத்தைந்து லட்சத்து முப்பத்தையாயிரம் ஆண்டுகள் திருமாலை நிந்தித்து வாழ்ந்தான். திருமா லின் அடியவராகிய பிரகலாதரைச் சில ஆண்டுகள் பகைத்தே அழிந்துவிட்டான்.

அடியார் நிந்தனை எனும் பாதகத் தைப் புரிவோரை இம்மையிலே தண் டித்தால், அப்பாவம் மறுமையிலே தொடராது. தண்டிக்காதிருப்பின் செய்த பாவம் ஒன்றுக்கு ஆயிரமாக வளர்ந்து மறுமையிலே வந்து துன்புறுத் தும். அதனை முளையிலேயே களைவது நல்லது. அடியார் நிந்தனை புரிவோரை அவ்வதிபாதகத்தால் மறுமையில் பெருந் துன்பமுற்று வருந்தாதிருக்க வேண்டும் என்ற கருணையினால் தண்டித்து வந்தார் சத்தி நாயனார். அவருடைய செயல் வீர முள்ள ஆண்மையாளரே அன்றி ஏனை யோரால் மேற்கொள்ள முடியாதது. ''அன்னதாகிய ஆண்மைத் திருப்பணி'' என்று அவரது பணியைக் குறிப்பிடு கின்றார் சேக்கிழார்.

சோழ வள நாட்டிலே விரிஞ்சையூர் என்ற ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்த சத்தி நாயனார் அடியார்களைப் பழித்து யாரேனும் இகழ்ந் துரைப்பாரேல், அவர்தம் நாவைக் குறட்டினால் பிடித்து இழுத்து சத்தி என்ற ஆயுதத்தால் அரி வார். அதனால்தான் அவர் சத்திநாயனார் என்று பேர் பெற்றார்.

அடியார் நிந்தனை யின்றி உலகம் திருந்தி நல்வழிப்பட உதவிய நாயனார் முடிவில் மணி மன்றுள் ஆடுகிற அம்பல வாணருடைய திருவடி நிழலில் சார்ந்து ஆரா இன்ப நிலையடைந்தார்.

(தொடரும்)

எதிரி ராணுவத்தினர்
உயிர் விடுவதற்கு

ஒரு வாலிபன் ராணுவத்தில் சேரும் உத்தேசத் துடன் அதிகாரியைப் பார்க்கச் சென்றான்.

அந்த அதிகாரி வாலிபனின் தேச பக்தியைக் கண்டு வியந்து ''அப்பா, நம் தேசத்திற்காக நீ உயிரை விடச் சித்தமாக இருக்கிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றான் வாலிபன்.

அதிகாரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''அப்படி யானால் நீ எதற்காக ராணுவத்தில் சேருகிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டார்.

''நமது தேசத்திற்காக எதிரி ராணுவத்தினர் உயிரை விடும்படி செய்யப் போகிறேன்; அதற்காகத் தான் நான் இராணுவத்தில் சேருகிறேன்'' என்றான் வாலிபன். - தங்க சங்கர பாண்டியன்





பொறுங்கள்!

உங்கள்
துணிமணிச்
செலவு
கட்டுக்கடங்காமல்
போகிறதா?

அப்படியானால் நீங்கள் டுவின் டஸ்கர் துணிகளைப்பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே! இந்த ரக துணிகள் உங்களுக்குப் பிடிக்கும்...உறுதியானவை, நீடித்து உழைப்பவை, அதி நேர்த்தியாய் தயாரிக்கப்பட்டவை. விலையிலும் நயமானவை. இவை எல்லாம் மதுரை மில்ஸாரின் பெரிய அளவு உற்பத்தி சௌகரியங்களால் சாத்தியமாகின்றன. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்—டுவின் டஸ்கர். நயமான விலையில் தரமுள்ள துணிகள்.

ஹார்வி

டுவின் டஸ்கர்

பாப்ளின் • டிரில் • லாங்கிளாத்

நயமான விலையில்
தரமுள்ள துணிகள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மானேஜிங் ஏஜண்டுகள்:
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

பானுவுக்கா? நீலாவுக்கா?



கமலா தோதாத்திரி

வெறுமையோடிய உள்ளத்தைச் சுமந்து கொண்டு செல்லுகிறேன்!

வரும் பொழுது உள்ளத்தில்இருந்த உற்சாகம், இனு இனுப்பு — யாவும் எங்கே? அவை நான் புறப்பட்ட இடத்திலேயே நிரந்தரமாகி விட்டனவா? பின் வெறுமை தோன்றுவதற்குக் காரணம்...? கனவுகளைச் சுமந்து கொண்டு செல்ல வேண்டிய நான், வெறுமையைச் சுமந்து செல்வதற்குக் காரணம்—

நீலா!

ராணுவத்தில் பொறுப்புள்ள பதவி ஒன்றில் இருக்கும் நான், எந்தவித ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ளும் இடம் படைத்தவனாகஇருக்கவேண்டும் என்றாலும், இன்று இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாமல் தவிப்பது ஏன்? என் தனிப்பட்ட உணர்ச்சிகளுடன் சம்பந்தப் பட்டது என்பதாலா....?

'புறப்பட்டபோது வாழ்த்துச் செய்தியை என்னுடன் மூட்டை கட்டி அனுப்பியவர்கள், என் திருமண அழைப்பை எதிர் பார்த்தவர்கள், எல்லோருக்கும் ஏமாற்றம்! அவர்களுக்கு நான் என்ன பதிலைச் சொல்ல முடியும்?

'அவள் பெண்; அவளுக்குத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குச்சுதந்திரம் கிடையாது' என்ற காரணத்தைக் காட்டி, இந்தத் 'தவற்றை' அவளுடையதல்ல என்று சொன்னலாம் — தர்க்கரீதியாக. ஆனால் என்னால் அப்படி நினைக்கவே முடியவில்லை!

குழந்தைப் பிராயம் முதல் ஒருவருக்கொருவர் என்று தொடர்பு படுத்திப் பேசிய பேச்சுக்கள் எத்தனை...! இன்று அவை பொருளற்றவை; உயிரற்றவை. அவளைக் கைப்பிடித்து மணாளனாக ஒரு மாத லீவை ஒரு நொடியில் கழித்துவிட்ட ஒரு மாய அதிருப்தியுடன் திரும்புவோம் என்று இறுமாந்திருந்த எனக்கு, இது ஒரு பலத்த அடி! இதயத்தைத் தூள் தூளாக்க வேண்டுமென்றே கொடுக்கப்பட்ட வசமான அடி! இத்தனை நாட்களாக; தோன்றாத ஓர் எண்ணத்தை இன்று எடுத்து வைத்து எங்கள் இருவருக்கிடையில் ஒரு பெரிய சுவரை எழுப்பிவிட்டார், அவள் தந்தை — என் மாமா!

நான் பட்டாளத்துக்காரனும்! பட்டாளத்துக்காரனைத் தன் தமக்கை — என் அன்னை — மணந்து கொண்டு பட்ட துயர் அவருக்குத் தெரியுமாம்! வாழ வேண்டிய வயதில் வாழாமல், எங்கோ தொலை தூரத்தில் இருக்கும் கணவனை மனத்தில் சுமந்து, அவல வாழ்வு வாழ்ந்து, கடைசியில் ஒரு நாள் அவரும் 'வீர மரணம்' எய்திய

செய்தியைக் காதில் வாங்கிக் கொண்டு நடைப் பிணமாக வாழும் என் அன்னையைப் போன்று தன் ஒரே மகளின் வாழ்வும் ஆகி விடக் கூடாதே என்ற உண்மைக் காரணத்தை அப்பட்டமாகக் கூறுகிறாராம்!

என் பங்குக்கு நானும் விடவில்லை! ராணுவத்துக்குச் செல்லும் எல்லோருக்குமே மரணம் என்ற நிலைதான் என்றால், இன்று ராணுவத்தில் இத்தனை பேர்கள் சேர்ந்திருக்க மாட்டார்களே! மரணம் விதியுடன் சம்பந்தப்பட்டது என்று காரணம் காட்டினேன். போருக்குச் செல்லும் ஒரு வீரனின் உயிர், இங்கு அவன் நினைவாக வாழும் அவன் மனைவியின் மாங்கல்ய பலத்தில்தான் இருக்கிறதே தவிர, எதிரியின் குண்டில் இல்லை என்று வாதாடினேன். அவர் என்னை அனுபவம் தெரியாத சிறு குழந்தையைப்போல் பார்த்து மெல்ல முறுவலித்தார்! என் அன்னை பெண் கேட்க வந்த இடத்தில் பதில் ஏதும் சொல்லத் தெரியாத வகையில் விழித்தாள்!

உள்ளே 'அவள்' விசும்பும் சப்தம் கேட்டது. என் உள்ளம் கசந்தது. கோழைபோல் உள்ளே உட்கார்ந்து கொண்டு அழுவதில் என்ன லாபம்? அதே கசப்புடன் லீவை 'கான்சல்' செய்துவிட்டு, இதோ புறப்பட்டு விட்டேன்.

''குட்மார்னிங் ஸார்.''

''குட்மார்னிங் மோகன். என்ன இப்படித் திடீரென்று..?''

நான் தலை குனிந்து கொண்டேன். வேறு என்ன செய்ய?

மேஜர் ராம்சிங் என்னைக் கூர்ந்து நோக்கினார். அதற்கு மேல் என்னால் பொறுக்க முடியவில்லை. யாரிடமாவது சொல்லி ஆறுதல் தேடிக் கொள்ள வேண்டிய துயரம் இது. மடை திறந்தது.

ராம் சிங் இரும்பு மனிதர் என்று பெயர் படைத்தவர். ராணுவத்தில் இருந்து இருந்து தமக்குள் பலத்த கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொண்டவர். நடந்த கதையைக் கேட்டு எனக்கு ஆறுதல் கூறினார்.

''மோகன், இது உன் தனிப்பட்ட பிரச்னை அல்ல; ராணுவ வீரர்களின் பிரச்னை. ராணுவ வீரர்கள் என்றாலே, பெண் கொடுக்கப் பயப்படும் ஒரு நிலைமை... உனக்குத் தெரியுமா, இதே சூழ்நிலைதான் எனக்கும் ஏற்பட்டது. ஆனால் என் மனைவி அந்த நிலையிலும் துணிந்து என்னைக் கணவனாக ஏற்றுக் கொண்டாள். எல்லோர் விரோதத்தையும் சுமந்து கொண்டாள். அவளால்தான் அன்று சாதாரண சிப்பாயாகச் சேர்ந்தவன் இன்று மேஜராகும் உறுதி பெற்றேன் என்று நினைக்கிறேன். ஆனால், பெண்களுக்கு உரிய பயம் அவர்களை விட்டுப் போகுமா? என் உயிர் நிலைக்க வேண்டி, தன்னை வருத்திக் கொண்டு, என்னையும், என் ஒரே பெண் பானுவையும் விட்டுப் போய்விட்டாள்...'' மேஜரின் உறுதி மிக்க கண்களில் கூடப் பழைய எண்ணங்களின் நினைவு மயக்கம்!

ராம்சிங் தொடர்ந்தார். ''மோகன், நீ இனிப் பழைய எண்ணங்களை மறந்துவிட்டுப் புதிய நினைவுகளில் கவனம் செலுத்து. ஒரு ராணுவ வீரனுக்கு அது மிகவும் முக்கியம்.''

நான் அவருடைய யோசனைக்குச் செவி சாய்க்கக் கடமைப்பட்டவன்!

ராம்சிங்கின் வீடு கலகலத்திருந்தது. ராம் சிங்கின் மகள் பானு — தெற்கே ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டிருப்பவள் — விடுமுறையைத் தன் தந்தையுடன் கழிக்க வந்திருக்கிறாள். மோகனுக்கு ராம்சிங்கிடமிருந்து அழைப்பு வந்தது.

''பானு...இவர்தான் சுபேதார் மோகன்'' என்று என்னை அறிமுகப்படுத்தியவர், தொடர்ந்து அவளை எனக்கு அறிமுகப்படுத்தினார். பானு என்னைக் கூர்ந்து நோக்கினாள். என்னைப் பற்றிய விவரங்களையெல்லாம் மேலும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமோ....!

பானு வந்திருப்பதினால் எனக்கு ராம் சிங்கிடமிருந்து அடிக்கடி அழைப்பு வந்தது. என்னையும் குடும்பத்தில் ஒருவனாகவே அவர் கருதிவிட்டார் போலும்! ஆனால், ராம் சிங்கின் வீட்டில் அவரும் நானும் உரையாடுவது மிகவும் சொற்பம். பானுதான் என்னிடம் ஓயாது ஒழியாது பேசிக் கொண்டிருப்பாள். பானுவின் தோழமையில் எனக்கு ஓர் ஆறுதல்! இருந்தாலும் என்னால் 'அவளை' மறக்க முடியவில்லை. உதடுகள் பானுவிடம் உரையாடினாலும் உள்ளம் என்னவோ 'அவளை' நினைத்துக் குமுறும்!

பானுவின் பரீட்சை முடிவு தெரிந்து விட்டது. வருங்காலத்தைப் பற்றி ராம்சிங் திட்டம் வகுத்து விட்டார். அதை அவர் முன்னமேயே என்னிடம் அடிக்கடி சொல்லுவார். ''மோகன்! என் மகள் பானுவைச் சாதாரணப் பெண்களைப் போல் நான் வளர்க்கவில்லை. அவள் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலைப் போல ராணுவ வீரர்களுக்குச் சேவை செய்யப் போகிறாள்! கல்யாணம் செய்து கொள்வது — குழந்தை குட்டிகள் பெறுவது என்பது சாதாரணமான செயல்கள்தான் இல்லையா?''

ராம்சிங் உறுதி படைத்தவர் — கொள்கையிலும் செய்கையிலும் அவர் எண்ணத்தை நான் போற்றுபவன்.

அன்று, நானும் பானுவும் உலாவப் புறப்பட்டோம். என்றும்போல் இல்லாது, இன்று எங்களிடையே ஒரு மௌனம்!

என் நினைவு இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் பறந்து கொண்டிருந்தது! பானு என்ன நினைத்துக் கொண்டிருந்தாளோ....?

திடீரென்று மௌனம் கலைந்தது. அவள்தான் ஆரம்பித்தாள்.

''சுபேதார் மோகன், அப்பா உங்களைப் பற்றி நேற்றுத்தான் சொன்னார்... ஐ ஆம் ஸாரி... ஒரு பெண் ஒரு ஆணையோ அல்லது ஒரு ஆண் ஒரு பெண்ணையோ எத்தனையோ காரணம் காட்டி நிராகரிக்க முடியும். ஆனால் உங்கள் விஷயத்தில்...'' இழுத்தாற்போல் நிறுத்தியவள், என்னைக் கூர்ந்து நோக்கினாள்.

நான் புன்னகை செய்தேன். வறட்சியாக.

அவள் தொடர்ந்தாள்: ''அவள் நிலையில் நான் இருந்திருந்தால் என்ன செய்திருப்

பேன் தெரியுமா...?'' என்று என்னைக் கேள்வி கேட்பது போல் கேட்டு, என் உள்ளத்தை ஆராய்ந்தாள்.

நான், அவள் என்ன செய்திருப்பாள் என்று யோசிக்கும் நிலையில் இல்லை!

சடாரென்று ''நான் பேசாமல் உங்களைக் கல்யாணம் செய்து கொண்டுவிடுவேன்—யார் தடுத்தாலும் சரி!'' என்று முடித்து விட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்—அவள் துணிச்சலை எண்ணி! ஆனால், அவள் தாயும் அப்படிப்பட்ட துணிவு கொண்டவள்தானே!

ஆனால் பானுவின் எண்ணத்தை நான் ஆதரிக்க முடியவில்லை!

''என்ன நான் சொல்வது, உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்று குழந்தை போல் கேட்டாள் அவள்! நான் அவளை ஆதரவோடு கண்களால் அணைத்தேன்!

''பானு! இதோ பார்... என் உள்ளம் ஏமாற்றத்தால் இடிந்து போனதொன்று: செப்பனிட முடியாதது... ஒரே நினைவில்—அந்த நினைவைத் தவிர எதுவும் அறியாமல் வாழ்ந்து — அந்த நினைவின் கொடுமைக்குப் பலியானவன். நீ, சிறு பெண். என் வாழ்வுடன் உன் வாழ்வு இணைய முடியாது. மேலும் உன் தந்தை கொண்டிருக்கும் கருத்து வேறு. அவருடைய கருத்துப்படி தான் உன் எதிர்காலம் அமைய வேண்டும்'' என்றேன் நான்.

அவள் கண்கள் பனித்தன. உள்ளமோ துயரத்தைக் குவித்துக் கொண்டு, கொட்டிவிடத் துடிப்பது போல், விம்மியது!

''மிஸ்டர். மோகன்! இந்த நிலைக்கு யார் பொறுப்பாளி என்று குறிப்பிட முடியாது. முதல்வனாக, நானே இருக்கலாம்... இருந்தாலும் பானுவைப் பற்றிய என் எண்ணம் உனக்குத் தெரியும். உன்னையும் நான் அறிவேன். ஆனால்...ஆனால், நிலைமை மீறி விட்டது. நேற்றிரவு அவள் என்னுடன் பலத்த விவாதம் செய்து, 'உன்னைத்தான் மணப்பது... அல்லது சாவது' என்ற தன் எண்ணத்தைச் சொல்லிவிட்டாள். நான் அவள் வாழ்வையோ, சாவையோ பற்றிச் சிந்திப்பவனல்ல. என் எண்ணத்துக்கு மாறாக நினைப்பவள், எப்படியோ போகட்டும்...! என் பொறுப்பு கைமாறிவிட்டது!''

ராம்சிங்கின் உறுதி எனக்குத் தெரியும்.

எனக்குச் சிரிப்பு வந்தது!

பானு, தன் கண்ணீர்க் கணைகளாலும், சொல்லம்புகளாலும் நான் அவளை மணந்து கொள்ளும்படி செய்து விட்டாள்! திருமணம் செய்து கொள்ளத் துணிச்சலில்லாதவளை நினைந்து, நான் உருகுகிறேனும்! இன்று அவள் வேறொருவன் உடைமையாகக்கூட ஆகியிருக்கலாம். ஆனால் எனக்காக உருகும் தன்னை நினைக்காத கல் நெஞ்சனும், நான்! எப்படியோ...? நான் இன்று அவள் கணவன்!

ராம்சிங் இத்திருமணத்தில் மூன்றுமவர் போல் இருந்தார். ஆனால் அவர் ஆசி எங்களுக்குக் கிடைக்கத் தவறவில்லை! பானுவோ இதைப் பற்றியே கவலைப்படவில்லை! சிட்டுக் குருவி போல் உல்லாசமாகத் திரிந்தாள்! என்னையும் அலைக்கழித்தாள்!

அவளை நினைத்தால் எனக்குப் பரிதாபமாக இருந்தது. என்னை நினைத்து, பெற்ற தந்தையின் பாசத்தைக்கூடப் புறக்கணிக்கும் அவள் அளவு நம்மால் அவளை நேசிக்க முடியவில்லையே என்ற வேதனைதான்!

வார்டு வராந்தாவில் பொறுமையற்று அமர்ந்திருந்தேன். உள்ளே புது உயிர் ஒன்று வெளிவரத் தவித்துக் கொண்டிருந்தது. நான் கையில் வைத்திருந்த ஸ்வீட் பாக்கெட்டுடன் நர்ஸ் கொடுக்கப் போகும் தகவலுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன்.

உள்ளே போராட்டம்... என் உள்ளத்திலும்தான்!

நர்ஸ் வெளியே வந்தாள் — துணி போர்த்திய குழந்தையுடன்.

''ஸாரி, கபேதார் ஸாப்! இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த அன்னை இறைவனடி சேர்ந்து விட்டார்கள்!'' என்று ஆங்கிலத்தில் கூறினாள் அவள். என் தலை சுற்றியது! கையில் வைத்திருந்த ஸ்வீட் சிதறி விழுந்து, என்னைப் பார்த்து நகைத்தது. ஒவ்வொரு துண்டும் பானுவாக மாறி, என்னைப் பார்த்துக் கொக்கரித்தது. தன் சாவின் மூலம் அன்னை, என் உள்ளத்தில் பூட்டி வைத்த வெற்றி எக்காளமா? அல்லது ஒரு வாரிசைத் தன் பங்கில் விட்டுச் சென்ற பெருமையா?

ராம்சிங் கண்களை மூடித் திறந்தார். இமையோரங்களில் இருப்பது..கண்ணீரா...? அன்றி, சிகரெட் புகையின் காரமா?

தன் விரல்களை அந்தச் சின்னஞ் சிறு குழந்தையின் உதட்டருகே கொண்டு வந்தவர், இடீரென உருவிக் கொண்டார்.

இது. எனது இரண்டாவது பயணம்.

முன்னதற்கும் இதற்கும் உள்ள பலத்த வேறுபாடுகளைத் துயரத்துடன் அசை போட்டது நெஞ்சம்.

வாசற் கதவைத் திறந்ததும் தட்டியவள், என்னைப் பெற்றெடுத்தவள். என் கையிலிருந்த குழந்தையை வாங்கிக் கொண்டவள் கண்களில் நீர் சோர, என்னை நோக்கினாள்.

''மோகன், நீ துரதிருஷ்டசாலியடா...'' என்றாள் அரற்றியபடி. அடுத்த கணம் என் குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள்.

உள்ளே, ஏதோ நடமாட்டம் தெரிந்தது.

''யார் அம்மா, அங்கே?'' என்பதற்குள், அவளே, ''நீலா... இங்கே வாம்மா... சும்மா வா...அத்தான்தான் வந்திருக்கு'' என்றாள்.

நீலா — என் மாமன் மகள்.

நீலா வந்தாள். நான் பார்த்தது, அவள் பாழ் நெற்றியையும், வெறும் கழுத்தையும்! இன்னோர் அடி!

''ஆமாம், தம்பி... நான்தான் நீலாவை அழைத்துக் கொண்டு வந்தேன். இங்கே இருந்தால் அதுக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்குமேன்னுதான்....!'' இழுத்தாற்போல் கூறினாள், என் தாய்.

குழந்தை அழுதது — வயிற்றுப் பசி.

அடுத்து அது நீலாவின் கைக்கு மாறியது.

நான் அழுதேன் — நீலாவுக்கா...? பானுவுக்கா?

வட்ட மேஜை

* தலைமையினரின் தவறு
* முதல் மன்னிப்பு
* முன்னு, பின்னு ?
* விருப்பமற்ற பயிற்சி

இஸ்ரேல் என்ற மிகச் சிறிய ஒரு நாட்டைச் சுற்றிலும் இருக்கும் பல நாடுகள் பல முனைகளிலும் தாக்குதல் நடத்தி வரும் ஒரு கொடிய நிகழ்ச்சி உலக மக்கள் அனைவருக்கும் வேதனை தரும் செய்தி. ''முதன் முதலில் போரைத் தொடங்கிய நாடு எது?'' என முடிவுகூற இயலாத நிலையில் ஐ. நா. செயலாளர் இருக்கும்போது இஸ்ரேல்தான் போரைத் தொடங்கியது என்ற கருத்தில் இந்தியாவின் தலைமையினர் நடந்துகொள்ளும் ஒரு பொறுப்பற்ற தன்மையை நினைக்கும்போது நீதியே உலகை விட்டு அழிந்து விட்டதோ என நினைக்கத் தோன்றுகிறது.

அரபு நாட்டின் அதிபர் ஒருவர் இத்தனை காலமும் இஸ்ரேலை அழிப்பதற்காகத் தங்களது வலிமையைப் பெருக்கிக் கொண்டதாகக் கூறினர். வேறொரு அதிபர் உலகப் படத்திலிருந்து இஸ்ரேலை அழித்து விடுங்கள் என்று தமது படை வீரர்களுக்கு உபதேசம் செய்கிறார். இத்தகைய வெறித்தனமான போக்குகளைக் கண்ட பிறகாவது நமது நிலையை நாம் மாற்றிக் கொள்வது நம் மதிப்பைக் கூட்டுமே தவிரக் குறைக்காது.

இந்தியத் தலைமையினர் இந்திய மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்காமல் துரோகம் செய்து விட்டனர். இஸ்ரேலியத் துருப்புகள் இந்திய சமாதானப் படை வீரர்களில் எண்மரைக் கொன்றுவிட்ட நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தி ஒருசிலரின் கருத்தைத் தங்களுக்கு ஆதரவாகப் பெறத்தான் இந்தியத் தலைமையினருக்கு முடியுமே தவிரப் பெரும்பான்மையோர் கருத்துக்கள் மாறானதாகத்தான் இருக்கும் என்பது நிச்சயம்.

செண்டூர்,
6–6–67 எஸ். சுப்பா ரெட்டியார்

'கிரிக்கெட் காதல்'' என்ற கதையில் புயல் வேகத்தில் 'ஸ்பின் பௌலிங்' செய்ததாகக் கூறப்படுகிறது. இது எப்படிச் சாத்தியமாகும் என்று தெரியவில்லை! சேதுவின் பக்கம் வெற்றி பெற 43 ரன்கள்தான் உள்ளன என்ற நிலையில் சேது 'செஞ்சுரி' அடிப்பானேன்?

பட்டோடி நவாப் - ஷர்மிளா டாகூர், சோபர்ஸ் - அஞ்சு மகேந்தரு ஜோடிகள் மன்னிப்பது ஒருபுறமிருக்கட்டும். கிரிக்கெட் பற்றித் தெரிந்த வாசகர்களிடமல்லவா மன்னிப்புக் கேட்க வேண்டும், முதலில்?

புதுக்கோட்டை–1 ஆர். பாலகிருஷ்ணன்,
10–6–67 ஆர். ரமணன்

தோட்டத்தில் உள்ள மலர்களெல்லாம் மணம் தருவதில்லை. ஆனால் 'கல்கி'யின் தோட்டத்தில் எல்லா மலர்களும் மணத்தோடுதான் மலர்கின்றன. 'அவள் என் அத்தை மகள்' ரம்மியமான உணர்ச்சி மலர். நெகிழ்ந்து நீர் முத்துக்கள் கண்களிலாடக் கிடந்தேன், ஒரு கணம் அதன் முடிவில். மோகன ராகம் போல் இதயத்தில் தங்கி விட்டது.

சேலம் – 9 என். ராஜகோபாலன்
1–6–67

'வீர சொர்க்கம் எங்கே?' என்ற உண்மைக் கதையினைப் படித்தேன். 'சேப்டி காட்ச்' என்ற சாதனம் முன்னேக்கித் தள்ளப்பட்ட பின்னரே .303 ரைபிளில் சுடமுடியும். 'ரைபிள் மாகஸினி'ல் ரவுண்டுகள் இருக்கும்போது 'டிரிகரை' அழுத்தியும் வெடிக்காமல் இருக்க வேண்டுமாயின் 'சேப்டி காட்ச்' பின்னேக்கித் தள்ளப்பட வேண்டும்.

சென்னை – 20 வி. ஆர். தியாகராஜன்
1–6–67

கல்கி இதழில் வெளியாகியுள்ள 'பொன்னும் பெண்ணும்' என்ற ஜப்பானியக் கதையைப் படித்தேன். உள்ளத்தை உருக்கியது. தொழில் துறையில் போல் இலக்கியத் துறையிலும் ஜப்பானியர் எவ்வளவு உயர்ந்துள்ளனர் - உருவத்தில் குட்டையாயிருந்தாலும்!

சென்னை – 4 வி. ச. வாசுதேவன்
2–6–67

மாணவ நண்பர் திரு என். ஆர். கே. அவர்களால் 26–5–67 அன்று எழுதப்பட்டு 11–6–67 கல்கி இதழில் வெளியான 'தேசியப் படை முகாம்களில் நடப்பதென்ன?' என்னும் கடிதம் உண்மையை அப்படியே வெளியிடுகிறது என்பதை மறுக்க இயலாது.

தேசியப் படைப் பயிற்சியைக் கட்டாயமாக்கியதால் ஏற்படும் விளைவுகளை உரியவர்கள் உணரத் தவறி விட்டார்கள் என்பது வெளிப்படை. உணவு, சலவைக்கூலி, முன்பணம் முதலியவற்றில் நடைபெறும் ஒழுங்கினம் மாணவ – ஆசிரியர் நட்பினை முறிப்பதைப் பல கல்லூரிகளில் காண்கிறோம். பாடம் கற்றுத் தர வருவோருக்கும் (படையில் அநுபவம் பெற்றவர்கள்) ஆசிரியருக்கும் சில கல்லூரிகளில் பிளவு எழுந்து வாக்குவாதமாக வளர்வதை மாணவர் உலகம் நன்கறியும். இதனால், 'ஒழுங்கு, ஒற்றுமை, கட்டுப்பாடு' என்ற என். சி. சி. யின் அடிப்படை இலட்சியங்கள் அழிந்து போகின்றன. மாணவர்களில் எண்பது சதவிகிதத்தினருக்குக் கட்டாயப் பயிற்சியில் விருப்பமில்லை. ஏற்ற உடல் வளமும் இல்லை என்பதை உரியவர்களே உணரக் கூடும்.

மதுரை – 1
12–6–67 சி. இருமலை

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

INDIA PISTONS EMPLOY THE BEST DISTRIBUTION NETWORK FOR MARKETING THEIR QUALITY PRODUCTS



Power Pak pilfer proof sets at a retailer's counter.

The IP leadership in Original Equipment is an assurance of the same rigid quality for replacement. Decades of experience in parts merchandising through a distributor network, the pick of the automotive trade in India is a further assurance of availability of the right product at the right price even in remote parts of the country.

To add to this, the IP Service Training Centre set up to train engine-mechanics all over the country for quality re-conditioning, is a further assurance of the best value for the money spent on quality product sales backed by effective service.

INDIA PISTONS LIMITED
SEMBIAM MADRAS-11